



ஹை பவர் ஸர்ஃப் சலவை: ஒப்பற்ற வெள்ளைவெளேர் சலவை—
அது வெட்டவெளிச்சம்.

உங்கள் மகள் துணிகளை அழுக்காக்கிக் கொள்வதில் சூரப்புலியா? அப்படியானால் உங்களுக்குத் தேவை அழுக்கை அகற்றிட ஒரு பலே சூரப்புலி: ஹை பவர் ஸர்ஃப்.

அதிக வலுவுடைய பொருள்கள் அடங்கியது ஹை பவர் ஸர்ஃப், அதிக சலவைச் சக்தி : தூசி, அழுக்கு, எதனையும் சுவடு தெரியாமல் அகற்றிடும். படு அழுக்கான துணிகளையும் கூடப் பளிச்சிட வைக்கும். வர்ணத் துணிகளுக்கும் உகந்தது ஸர்ஃப். தூய்மை ஒளி மிளிர வைக்கிறது.

குடும்பத்தில் உள்ள அனைவரின் துணிகளுக்கும் அதிக வெண்மை, அதிக ஒளி—அளிப்பது ஹை பவர் ஸர்ஃப். கேட்பானேன், வேறெந்த சலவைப் பவுடரையும் விட ஸர்ஃப் உபயோகிக்கும் தாய்மார்களே அதிகம்.



வேறெந்த சலவைப் பவுடரையும் விட ஸர்ஃப் உபயோகிக்கும் தாய்மார்களே அதிகம்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.


லின்டாஸ்-SU. 224-2012 TM

மேஜர் சுந்தரராஜன் பேசுகிறார்:

இதற்கு முன் வந்த மூன்று கட்டுரைகளிலுமே சிவாஜியின் நடிப்பை யாரும் குறை சொல்லவில்லை. ஆனால் செனகார் அவர்கள் வயதுக்குத் தகுந்த பாத்திரங்களை அவர் ஏற்று நடிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். அவர் சொல்ல நினைத்தது 'உடல் அமைப்புக்கு ஏற்ற பாத்திரம்' என்பதாக நான் எண்ணுகிறேன்.

ஔவையார் வேடமேற்றுத் தளர்ந்த நடையோடு, நடுங்கிய குரலோடு மக்களைக் கவர்ந்த டி. கே. சண்முகம்தான், கல்கியின் ''கள்வனின் காதலி''யில் முத்தய்யன் என்ற இளைஞனாக வந்து ஆடிப் பாடி,





சிவாஜி சகாப்தம் முடிந்து விட்டதா?

நடித்துக் கைதட்டலும் பெற்றவர்.

சிவாஜியோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்ற ஒருவன் என்ற முறையிலே ''நீங்கள் ஏன் உங்கள் உடல் பருமனைச் சற்றுக் குறைத்துக் கொள்ளக் கூடாது?'' என்றேன்.

''ஏறத்தாழ 28 ஆண்டுகள் திரையிலும், 45 ஆண்டுகளுக்கு மேலாக மேடையிலும் நடித்து எனக்காக வாழமுடியாத சூழ்நிலைக் கைதியாகவே என் காலத்தைக் கழித்திருக்கிறேன். இனியும் நான் பட்டினி கிடந்து, காலமெல்லாம் உழைத்துக் கொண்டிருப்பதை விட, என் பேரன் பேத்திகளோடு கொஞ்சி விளையாடி என் மனத்துக்குப் பிடித்தமானதைச் சாப்பிட்டு எனக்காக வாழக் கூடாதா?'' என்றார்.

அதோடு நிறுத்திக் கொள்ளவில்லை அவர். கையிலிருக்கும் படங்களை முடித்து விட்டு இனி சார்லஸ் லாஃப்டன் போன்று மாறுபட்ட கதாபாத்திரங்களை ஏற்று ஆண்டுக்கு மூன்று படங்கள் வீதம் நடிக்கப் போவதாகவும் கூறினார்.

இயக்குனர் விஜயன் 'அவர் ஓவர் ஆக்டிங் செய்கிறார்' என்று குறிப்பிட்டுள்ளார். இது சிவாஜி அவர்களின் பல படங்களை இயக்கி வெற்றி பெற்ற விஜயன் வாயிலிருந்து வந்திருக்கவே கூடாது. ஏனென்றால் இயக்குனர் என்ற முறையிலே அவர் தம் கடமையைச் செய்யத் தவறிவிட்டார் என்பதையே இது சுட்டிக் காட்டுகிறது. அவரது இயலாமையை அவரே வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. நானும் நண்பர்களுடன் நடிப்பில் எது ஓவர் ஆக்டிங், எது அண்டர் ஆக்டிங் என்று விவாதத்தில் ஈடுபட்டதுண்டு. அப்போது ஓர் உதாரணம் சொல்வேன்:

என் அன்னை இறந்தபோது நான் உள்பட ஆறு சகோதரர்களும் வாய் விட்டுக் கதறி அழுதோம். ஆனால் என் அன்னைக்கு மிகவும் செல்லமான என் கடைசித் தங்கை (ஒரே மகள்) ஜானகி, என் அன்னையின் உடல் மீது சற்று நேரம் தலைவைத்துப் படுத்துவிட்டு, பிறகு உடலைத் திரும்பிக் கூடப் பார்க்க மறுத்துவிட்டாள். சொட்டுக் கண்ணீர் விடவில்லை.

உணர்ச்சிகளை வெளியிடுவதில் மனிதனுக்கு மனிதன் நிச்சயம் வேறுபாடு இருக்கும். ஒரு நடிகன் உணர்ச்சிக் குவியலாக மாறி, உரத்த குரலிலே பேசி, நடித்தாலும் சரி, முகத்திலே எந்தச் சலனமும் இல்லாமல், மிருதுவான குரலில் பேசி நடித்தாலும் சரி, மக்கள் அதை வரவேற்பார்களாயின் அது நல்ல நடிப்புத்தான்.

இப்படி ஒரு ஜதைக் கண்கள், இப்படி ஒரு குரல், இப்படி ஒரு முக அமைப்பு, இப்படி ஒரு நவரச நடிப்பாற்றல் நமக்கு அமையவில்லையே என்று எல்லா நடிகர்களும் ஏங்கும் அளவுக்கு அமைந்தது சிவாஜிக்கு ஆண்டவன் அருளிய வரப்பிரசாதம். நடிகர் திலகத்தின் நடிப்புத் திறமையை விவாதத்துக்குள்ளாக்கியது நேரத்தை வீணாக்குவதாகும்.

ஒருவரின் சகாப்தம் முடிந்துவிட்டதா என்கிற தலைப்பே ஆட்சேபிக்கத் தக்கது. நடிப்புக்கு இலக்கணம் வகுத்த சிவாஜி எனும் சர்வகலாசாலையில் கற்று முன்னேறுவது தான் வளரும் ஒவ்வொரு கலைஞனுக்கும் அழகு. **பேட்டி: சிக்கி**

அடுத்த வாரம்: வாசகர்களின் கடிதங்கள்







சிந்தனைச் சிதறல்கள்

—ஸ்ரீவித்யா

ஸ்ரீகாந்த் ஒரு விசித்திரப் பிறவி. திடீ ரென்று தத்துவங்களாகப் பேசுவார். திடீ ரென்று ஒரு குழந்தையைப் போல் விளை யாட ஆரம்பித்து விடுவார். ஒருமுறை 'ராதைக்கேற்ற கண்ணன்' ஷூட்டிங்கில் யாருடைய செருப்பையோ எடுத்துக் கூரை மேல் ஒளித்து வைத்துவிட்டு எல்லோரிடமும் ''அங்கேதான் செருப்பை ஒளித்து வைத் திருக்கிறேன்!'' என்று கூப்பிட்டுக் கூப்பிட் டுச் சொல்லிக் கொண்டிருந்தார்! எதையுமே மனத்தில் வைத்துக் கொள்ளத் தெரியாமல் வீண் சண்டையை இழுத்து விட்டுக்கொள் வதில் இவருக்கு நிகர் இவர்தான்.

என் தந்தையின் சகோதரியின் கணவர் தான் இவரை வளர்த்து ஆளாக்கியது. இப்பவும் ஏதாவது வம்பு செய்தால் ''கப்பு ரத்னே மாமாவிடம் சொல்லிவிடுவேன்'' என் றால் நடுங்கிவிடுவார்! முதல் முதலாக 'வெண்ணிற ஆடை' படத்தில் நடித்தபோது மாமா ஒரே எதிர்ப்புக் குரல் எழுப்பினார். இப்போதெல்லாம் சரியாகி விட்டது.

அவருடைய மகளையும் மனைவியையும் அவரை விட எனக்குப் பிடிக்கும். இரண்டு பேருமே செயல் திறமை மிக்கவர்கள். வாய்க்கு வாய் மீரா மீரா என்று பெண்ணைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கும் இவர் எப்படித்தான் அவளைப் பிரிந்து அவள் கல் யாணத்துக்குப் பிறகு காலம் கழிக்கப் போகிறாரோ?

கே. எஸ். ஜீ.

இவரைப் பற்றி நான் எழுதியது போல் வேறு எந்த டைரக்டரைப் பற்றியும் கோப மாகப் பத்திரிகையில் எழுதியதில்லை. ஒழுங் காகப் பள்ளிக்குப் போய்க்கொண்டிருந்த என் மனைசில் 'பணமா பாசமா'வை விடப் பெரிய படம்'' என்றெல்லாம் சொல்லிச் சபலத் தைக் கிளப்பி, பிறகு பட்டென்று மொட்டி லேயே எதிர்பார்ப்பைக் கிள்ளி எறிந்துவிடு வது போலச் செய்துவிட்டார். பிறகு அவரை நான் கண்டது காரைக்கால் அம்மை யார் ஷூட்டிங்குக்காகக் கற்பகம் ஸ்டுடி யோவுக்கு வந்தபோதுதான். ஏ. பி. என். அவர்களோடு பேசிக் கொண்டிருந்த அவர் என்னிடம் வந்து 'கடவுள் வேஷம் போடும் போது நடிப்பதே வேறு விதமாக இருக்க வேண்டும், தெரியுமா? அசிரத்தையாக இருந்துவிடாதே' என்று அறிவுரை கூறினார். உள்ளம் அழுதுகொண்டே இருக்க அவரைப் பார்த்து, ''சரி சார்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னேன். வாழ்க்கையிலும் நாம் சில சந்தர்ப்பங்களில் நடிக்க வேண்டி வருவதை அன்று புரிந்து கொண்டேன். மேக் அப் ரூமுக்குள் போய் ஒரு அரை மணி நேரம் அழுதிருப்பேன். அன்று நான் மனத்திலே நினைத்துக் கொண்டது, 'எப்படியும் கே. எஸ். ஜீ.யின் ஒரு படத்தில் நடித்து அவர் வாயாலேயே என்னைப் புகழ வைக்க வேண் டும்' என்றுதான். அந்த நாளும் வந்தது. அதற்கு உதவியவர் ஜெய்சங்கர்தான்.

''கடமை நெஞ்சம்'' ஷூட்டிங்கிற்காக மைசூர் போயிருந்தபோது கே. எஸ். ஜீ. யின் அடுத்த டைரக்ஷனில் தாம் நடிக்கப் போவ தாகவும் கதாநாயகி பாத்திரத்தை நான் ஏற்கத் தயாரா என்றும் கேட்டார். நானும் இதுதான் சந்தர்ப்பம் என்று சம்மதித்தேன். சென்னைக்கு வந்த பிறகு இளைய ராணி ராஜலட்சுமி ஷூட்டிங்கிற்காக நான் கற் பகம் ஸ்டுடியோவுக்குப் போயிருந்தபோது நானும் கே. எஸ். ஜீ. யும் சந்தித்துக்கொண் டோம். நான் செட்டில் நுழையும்போது அங்கு உட்கார்ந்திருந்தவர்களிடம் ''இந்தப் பெண் என்னைப் பற்றி என்னவெல்லாமோ எழுதுது'' என்று கூறிக் கொண்டிருந்தார். நான் சட்டென்று திரும்பி, ''உண்மையைத் தானே சார் எழுதினேன்'' என்று பதில் சொல்லிவிட்டேன், ''இங்கு வா'' என்று

அவர், இவர், மேலும் ஒருவர்!



என்னைத் தனியே அழைத்துப் போய் 'நான் இப்போது பழைய கே. எஸ். ஜீ. இல்லை. புது மனிதன். அப்போது செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக எனக்கு இப்போது ஒரு படம் செய்து தரவேண்டும்' எனக்கேட்டார். நான் அசந்துவிட்டேன். 'இவர் இவ்வளவு உயர்ந்தவரா!' என நெகிழ்ந்தேன். அன்றைய சந்திப்பின் விளைவுதான் ''ரவுடி ராக்கம்மா'' திரைப் படம்.

லக்ஷ்மி

''திரையுலகிலே மற்றொரு புதிர்; இன்னதுதான் செய்வார் என்று யூகிக்க முடியாதவர். எப்போது, என்ன, எப்படிப் பேசப் போகிறார் என்று யாருக்குமே தெரியாது; அவருக்காக ஒரு ''மூட்'' இருந்தால் நன்றாகப் பேசுவார்; இல்லையென்றால் முகத்தை உம் என்று வைத்துக் கொண்டு விடுவார்'' என்றெல்லாம் கேள்வி. ஆனால் என்னைப் பொறுத்தவரை சுமுக லக்ஷ்மிதான்! பொறுமை என்பது துளிகூடக் கிடையாது இவரிடம். தாம் நினைத்ததுதான் நடக்க வேண்டும் என்று நினைப்பார். நடத்தியும் காண்பிப்பார். ''மழலைப் பட்டாளம்'' படத்துக்குப் பிறகு நான் இவரைச் சந்தித்தது கடந்த வருடம் மாநில அரசு பரிசளிப்பு விழாவின்போதுதான். பேசமாட்டார் என்றே நினைத்தேன். ''என்னம்மா சௌக்கியமா?'' என்று மட்டும் கேட்டார். அன்று புரிந்து கொண்டேன், மாற்றம் எல்லாரிடமும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது என்று. எப்போதும் சுறுசுறுப்பாகவே இருப்பார். ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்க மாட்டார். அதுதான் அவரது வெற்றி. பேச்சிலே இவரை வெல்ல யாராலும் முடியாது. பேசியே மற்றவர்கள் வாயை அடைத்து விடுவார். இவரைப் போன்ற சில நடிகைகள் மட்டுமே சாகும்வரை நடிக்கக் கூடியவர்கள். இவரிடம் நான் ஏமாந்தது ஒரே ஒரு தடவை. அது ''மழலைப்பட்டாளம்'' படத்தில். நான் இல்லை என்றானதும், என்னிடம், 'நான் ஏன் அந்தப் படத்தில் இல்லாமல் போனேன்' என்று ஒரு விளக்கம் தந்திருக்கலாம். அல்லது ''நடந்தது நடந்து விட்டது வித்யா, அதை மறந்து விடு'' என்று ஒரு வார்த்தை என்னிடம் சொல்லியிருக்கலாம். அவள் சொல்லவில்லை. நானும் மறக்கவில்லை. கொஞ்சநாள் — இரண்டு மூன்று காட்சிகளில்— பாலச்சந்தர் மேற்பார்வையில் நான் நடித்த அந்த இனிய அனுபவத்தை மனத்தில் வைத்துக் கொண்டிருக்கிறேன். லக்ஷ்மியும் நானும் ஒரு படத்திலாவது சேர்ந்து நடிக்கவேண்டும் என்பது என் ஆசை. கூடிய சீக்கிரம் அது மலையாளப் படவுலகில் நிகழப் போகிறது. ஸ்ரீகுமாரன் தம்பி அவர்களுடைய டைரக்ஷனில். அப்படம் திரைப்பட உலகில் ஒரு சாதனையாக நிலைத்து விடும். எனது இந்த வார்த்தைகளை நினைவில் வையுங்கள்! நடக்கத் தான் போகிறது பாருங்கள்!

பேட்டி: சலன்

காஞ்சிபுரம், தர்மாவரம் ஆரணி
பட்டுச்சேலைகளில்

- நவீனம்,
- நாகரீகம்,
- புதிய டிசைன்,
- சிறந்த வேலைப்பாடு,
- அழுத்தமான நெசவு

விரும்பும் அனைவரும்
விரும்பி வருகை தருவது

S.R.B.

FASHION CREATORS IN SILK SAREES

S.R.B. சில்க்ஸ்
229, கீழமாரெட் வீதி, மதுரை-1.
போன்: 22036.

- ஆத்மாஸ் -

பால போத லிஷத்
(தமிழுரை) 1-50

ஸகல கார்ய ஸித்தியளிக்கும் ஸ்தோத்திர சிந்தாமணி
By
ஸோமதேவ சர்மா 1-50

Sri Devi Mahatmiyam
(ஸம்ஸ்க்ருத மூலம் மட்டும்) 6-50


Purusa Sukta Bhasyam
(In English)
By
Sri Ranganatha Muni 2-75

கிடைக்குமிடம்
பவானி
புக் ஸெண்டர்
19 ஸ்டேஷன் ரோடு,
மேற்கு மாம்பலம்,
சென்னை-600 033

Prop
M. S. ARUNACHALAM

மல்லிகைபோல் மென்மையாகத்
துல்லியமாய் மாவரைக்க....

"கணேஷ் & சௌபாக்யா"
மாவரை இயந்திரங்கள்



- உத்திரவாத உழைப்பு
- கவர்ச்சிகர அமைப்பு

தயாரிப்பாளர்:
ஸ்ரீ கணேஷ் இண்டஸ்டிரீஸ்
119, சத்தி ரோடு, ஈரோடு-1.
(போன்: 73513)



ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்

பட்டு

121, ராஜு வீதி
கோயமுத்தூர்-641001
போன்: 25859

உஷா
சாரி பாரடைஸ்
333, ராஜு வீதி, கோயமுத்தூர்-641001
போன்: 33369

நீல நிற பியட் கார் அந்தச் சென்னிறக் கட்டிடத்தின் காம்பவுண்டுக்குள் நுழைந்தது. அதிலிருந்து வெளிப்பட்டவன் ஆயுதம் தாங்கி இரு பக்கமும் நின்றிருந்த போலீஸ் கான்ஸ்டபிள்களைக் கடந்து அந்தப் போலீஸ் நிலையத்தின் உள்ளே சென்றான்.

ஏதோ ஒரு பைலில் மூழ்கியிருந்த இன்ஸ்பெக்டர் விஜயனின் கவனம் கலைந்தது.

—சார்! ஒரு ரிப்போர்ட் கொடுக்க வந்தேன்.

'யெஸ்' என்ற இன்ஸ்பெக்டர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

அவன் தலைவிரிக் கோலமாக இருந்தான். முகம் வெளுத்துக் கண்ணில் ஒரு தேக்கம்.

—என் பெயர் தினகர். நான் ஒரு ஆடிட்டர். என்னுடைய மனைவியை நேற்றிலிருந்து காணவில்லை. தெரிந்த இடங்களில் எல்லாம் விசாரித்து விட்டேன். அவள் எங்கு சென்றாள் என்று தெரியவில்லை.

—அவுங்களை நீங்க கடைசியா எத்தனை மணிக்குப் பார்த்தீங்க?

—நேற்று மத்தியானம் சாப்பாட்டுக்கு வந்தப்ப வீட்டில் இருந்தாள். இரவு ஏழு மணிக்கு வீட்டுக்குத் திரும்பியபோது பார்த்தால் அவள் வீட்டில் இல்லை. அவள் தினமும் மாலை நான்கு மணியிலிருந்து ஐந்தரை மணிவரை 'ஜவஹர் டிரைவிங் ஸ்கூலில்' கார் ஓட்டக் கற்றுக் கொண்டிருந்தாள். ஒருவேளை அங்கு தான் இருப்பாளென்று போன் செய்து கேட்டேன். ஆனால் அவள் நேற்று அங்கு வரவேயில்லை என்றார்கள். சரி யாராவது சினேகிதியுடன் சினிமாவுக்குச் சென்றிருப்பாள் என்று மனத்தைத் தேற்றிக் கொண்டேன். ஆனால் இரவு 11 மணி ஆகியும் அவள் திரும்பாததால் தெரிந்தவர்கள் வீட்க்கெல்லாம் போன் செய்து பார்த்தேன். மேலும் அவள் பெற்றோருடன் 'டிரங்காலில்' பேசினேன். எல்லா இடங்களிலும் இல்லை என்ற பதிலே வந்தது. விடியும்வரை காத்திருந்து பார்த்துவிட்டு இங்கு வந்தேன். இன்ஸ்பெக்டர்! எனக்குப் பயமாக உள்ளது. நீங்கள்தான் உதவி செய்யணும்.

—மிஸ்டர் தினகர்! உங்களுக்கும் உங்க மனைவிக்கும் ஏதாவது சண்டை, மனத்தாங்கல் உண்டா?

—சார்! எங்களுக்குள் தகராறு எதுவும் ஏற்பட்டதில்லை. ஆனா டிரைவிங் ஸ்கூல் தனபாலுடன் அவ நெருங்கிப் பழகறதாக் கேள்விப்பட்டேன். அதைப் பற்றி அவளிடம் ஒரே ஒரு முறை பேசிப் பார்த்தேன். அதை அவள் மறுக்கவும் விட்டு விட்டேன். ஆனால் இப்ப ஒருவேளை....

—டோண்ட் வொர்ரி, மிஸ்டர் தினகர்! உண்மையைக் கண்டுபிடித்து விடலாம். சரி, ஒரு கம்ப்ளெய்ண்ட் எழுதிக் கொடுங்கள்.

கம்ப்ளெயிண்ட் எழுதிக் கொடுத்து விட்டு, இன்ஸ்பெக்டருக்கு நன்றி தெரிவித்துத் திரும்பிய தினகர் தன் காரை நோக்கி நடந்தான்.

ஜவஹர் டிரைவிங் ஸ்கூல் அந்த நிர்மலமான ரோட்டில் நகர நாகரிகங்களிலிருந்து சிறிது ஒதுங்கி அமைந்திருந்தது. அந்தக் காம்பவுண்டிலிருந்து 'எல்' போர்டு போட்ட ஒரு கார் மனிதத் தலைகளோடு வெளியே செல்லவும், போலீஸ் ஜீப் டிரைவிங் ஸ்கூல் காம்பவுண்டுக்குள் நுழையவும் ஏறக்குறைய சரியாக அமைந்திருந்தது.

''விதிகள் பொறிக்கப்பட்ட போர்டின் முன்னால் உட்கார்ந்திருந்தவர்கள் கேட்ட சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்துக்கொண்டிருந்த தருமன், ஜீப்பிலிருந்து விடுபட்ட இன்ஸ்பெக்டரைக் கண்டதும் அவரை நோக்கி விரைந்தான்.

—நீதான் இந்த டிரைவிங் ஸ்கூல் ஓனரா?

—இல்லே சார்! ஓனர் வியாபார விஷயமா பெங்களூர் போயிருக்காங்க. நான் இங்கே வேலை செய்யிறேன். பேரு தருமன்.





—எப்பப் போனாரு?

—நேத்து விடியற்காலையிலேயே போய்ட்டாருங்க. அனேகமாக இன்னைக்கு வந்துருவாருங்க.

—ஆமா, இங்க பெண்களும் டிரைவிங் கத்துக்க வருவாங்களா?

—நிறையப் பேர் இல்லீங்க. இரண்டு மூணு பேரு வருவாங்க.

— சுரேகாங்கிற பெண் இங்கேதானே டிரைவிங் கத்துக்க வருவாங்க?

—ஆமாங்க, நேத்துக்கூட அவுங்க ஹஸ்பெண்டு போன் பண்ணி 'சுரேகா அம்மா' வந்தாங்களா'ன்னு கேட்டாருங்க. ஆனா அவுங்க நேத்து வரவே இல்லீங்க. ஒருவேளை அவுங்களுக்கு ஏதாவது....

இன்ஸ்பெக்டர் சிரிப்பில் மஞ்சள் தந்தம்.

—அதெல்லாம் ஒண்ணுமில்லே. உன் முதலாளி வந்ததும் உடனே என்னை வந்து பார்க்கச் சொல்லு.

ஜீப் நகர விளிம்புகளைப் பிடித்து ஜன நெரிசலில் பின்னியது!

தினகரின் பங்களா காம்பவுண்டு சாலை வரை தொட்டுக் கொண்டிருந்தது. அவனுடைய கார் காம்பவுண்டினுள் நுழைந்து, சரளில் சொள சொளத்துப் போர்டிகோவில் சிராய்த்து நின்றது.

பங்களாவினுள் நுழைந்த தினகர் டேப் ரிக்கார்டினுள்ளிருந்த பழைய டேப்பை எடுத்துவிட்டு வேறு சொருகினான். பட்டனைத் தட்ட அறை முழுதும் டிஸ்கோ சங்கீதம்.

சோபாவில் அமர்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தவனை 'பிங்பாங்! பிங்பாங்!' என்ற இனிய ஓசை வெளியே இழுத்து வர,

—ஹலோ சார்! அம்மா சொன்ன பாட்டை எல்லாம் டேப் பண்ணிடலாம் சார். நேத்தே வரேன்னு சொன்னேன். வர முடியல்லே என்றபடி உள்ளே நுழைந்தவன் 'ராஜ் மியூசிக்கல்ஸ்'ஸில் டேப்பில் பாடல் பதிவு செய்து தரும் பிரிவில் வேலை செய்யும் ரத்னம்.

—அம்மா எங்கே ஸார்?

கேஸட்டுக்களை எடுத்துத் தந்த தினகர் உண்மையைக் கூற விரும்பாமல்,

—வெளியே போயிருக்காங்க.

ரத்னம் கேஸட்டுகளுடன் வெளியேறினான்.

மீண்டும் 'பிங்பாங்' சத்தம்.

இம்முறை—

இன்ஸ்பெக்டர் விஜயன்.

—வாங்க இன்ஸ்பெக்டர்! ஏதாவது சேதி கிடைச்சுதா?

—அவசரப்படாதீங்க தினகர். டிரைவிங் ஸ்கூலுக்குப் போனேன். ஓனர் பெங்களூர் போயிருக்காராம். இன்னைக்கு வந்துருவாராம். பார்க்கலாம்.

—எப்படியோ இன்ஸ்பெக்டர். சீக்கிரம் விசாரித்து உதவுங்கள்.

—கவலைப்படாதீங்க தினகர். பை தி பை நான் உங்க மனைவி அறை, அல்லது பீரோவைச் சோதனை செய்யலாமா? ஏன்னு அதிலிருந்து ஏதாவது செய்தி தெரிய வரலாம்.

—தாராளமாக.

என்னென்னவோ பெண்கள் சாதனங்கள், கொண்டை ஊசிகள், வளையல்கள், க்ரீம்கள், புடவைகள்.

இவை அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருந்த அந்த ஏ.ஸி. செய்யப்பட்ட அறையை ஆராய்ந்தார்,

அங்கிருந்து அவர் எடுத்த முக்கியமான தடயம் 'ஜவஹர் டிரைவிங் ஸ்கூல்' ஓனர் தனபால் தினகரின் மனைவி சுரேகாவுக்கு எழுதிய ஒரு கடிதம். அந்தக் கடிதம்—

தனபாலுக்கும் சுரேகாவுக்கும் உள்ள தொடர்பைச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் வெளிப்படுத்தியது.

கடிதத்தைக் கண்ட தினகர் திகைத்தான்.

—சார்! அப்படி யென்றால் என் சுரேகா, என் சுரேகா... கண் கலங்கிய தினகருக்கு ஆறுதல் சொல்லிப் புறப்பட்டார் இன்ஸ்பெக்டர் விஜயன்.



மானேஜர்: "ஆபீஸ் ரகசியங்களை நீ வெளியில் சொல்லிக் கிட்டுத் திரிகிறியாமே...?"
கிளார்க்: "சேச்சே! இல்லவே இல்லே ஸார்.! உங்களுக்கும் லேடி டைப்பிஸ்ட்டுக்கும் உள்ள உறவு பத்தி யாரிடமும் நான் சொன்னதே கிடையாது!" -உ. ராஜாஜி

—சார்! நீங்க வரச்சொன்னதா என் அஸிஸ்டென்ட் சொன்னான். வந்தவன்—

உயரமாகவும், விஸ்தாரமுமாக இருந்தான் ஸ்டெப் கட்டிங், தொங்கு மீசை.

பாண்டும் சர்ட்டும் ஒரே இளக் கலரில்.

இன்ஸ்பெக்டர் விஜயன் ரூல் செய்து கொண்டிருந்த பென்சிலைக் கீழே போட்டார்.

—நீங்கதான் ஜவஹர் டிரைவிங் ஸ்கூல் ஓனர் தனபாலா? சுரேகாவ என்ன செஞ்சீங்க?

—சார்! — குரலில் அதிர்ச்சி.

—இங்க பாருங்க தனபால், எனக்கு எல்லாம் தெரியும். உண்மை உங்க வாயிலிருந்து வரணும் என்று எதிர்பார்க்கிறேன்.

—சார் நீங்க சொல்றது ஒண்ணுமே புரியலீங்க. சுரேகாவுக்கு என்ன சார் ஆகிவிட்டது?

—301!

டேபிள் மேல் ஒரு பிரம்பு, ஒரு சவுக்கு இவற்றுடன் ஒரு கடிதத்தையும் கொண்டு வந்து வைத்தான்.

தனபால் அதிர்ந்தான்.

—தனபால், அப்ப இந்தக் கடிதம்?

தனபால் மீண்டும் அதிர்ந்தான்.

—சார்! நானும் சுரேகாவும் பழகியது உண்மை. சுரேகாவின் விருப்பப்படி அவளைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று எண்ணியதும் உண்மை. ஆனால் இப்பொழுது சுரேகாவின் மறைவுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை. என்னை நம்புங்க சார். இது சத்தியம்.

அவன் முகத்தில் உண்மை தெரிந்தது.

—சரி, தனபால் நீங்க போங்க. ஆனா எங்க பர்மிஷன் இல்லாம நீங்க வெளியூர் எங்கேயும் போகக் கூடாது. மேலும் எங்க கண் பார்வையில்தான் இருக்கணும். இப்ப நீங்க போகலாம்.

போனான்.

'இவ்வளவு கலாட்டாவிலே சுரேகாவின் போட்டோவைக் கூட தினகர் கிட்டே இருந்து வாங்கல்லேயே?'

இன்ஸ்பெக்டர் ஏறி உட்கார்ந்ததும் மோட்டார் சைக்கிள் கிளம்பிவிட்டது. பளார் என்று ஓசையை எழுப்பி சிட்டாகப்பறந்தார் விஜயன்.

ராஜ் மியூஸிக்கல்ஸ்.

கண்ணாடியால் அபிஷேகம் செய்யப்பட்ட அந்தக் கட்டிடத்தில் நுழைந்த தினகரை அதன் உரிமையாளர் ஜெயகுமார் வரவேற்றார்.

—சார், ரத்னம்....

—இப்பத்தான் வெளியே போனான். ஏன்சார்?

தினகர் உதட்டை வளைத்துச் சிரித்தான்.

—நத்திங்! சும்மாத்தான். அதாவது நான் அவன்கிட்டச் சில கேஸட்டுகளை டேப் பண்ணச் சொல்லிக் கொடுத்தேன். ஆனா அதுல ஏற்கனவே இருந்த பாடல்களே நல்ல பாடல்கள்தான். அதனாலே அதை அப்படியே கொண்டு வந்து கொடுத்துறச் சொல்லுங்க. இல்லேன்னா ஈவினிங் வந்து வாங்கிக் கிறேன்.

—நல்லது சார்.

விடை பெற்றான்.

தினகரின் பங்களா பூட்டப்பட்டிருப்பதைக் கண்ட இன்ஸ்பெக்டர்கிளம்ப எத்தனித்தார். அப்பொழுது—

போலீஸ் ஜீப் ஒன்று அந்தக் காம்பவுண்டுக்குள் நுழைவதைக் கண்டு நின்றார்.

ஜீப்பிலிருந்து— நகர வடக்குப் பிரிவு இன்ஸ்பெக்டர் ராஜன் உதிர்ந்தார்.

—என்னங்க விஷயம்? — இன்ஸ்பெக்டர் விஜயன்.

—முக்கியமான விஷயம். நீங்க எங்கே இவ்வளவு தூரம்?

—சரி, போய்க்கிட்டே பேசுவோம்.

இன்ஸ்பெக்டர் ராஜன் மோட்டார் சைக்கிளின் பின் சீட்டில் அமர்ந்தார்.

அந்த மோட்டார் சைக்கிள்—

ஹோட்டலை நோக்கிச் செல்ல, ஜீப்—

போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றது.

நகரம் மின்சாரக் கோலம் பூண்டிருந்தது. ராஜ் மியூஸிக்கல்லை நோக்கிச் சென்ற தினகரின் கார் நின்றது. காரிலிருந்து விடுபட்டவன், இன்ஸ்பெக்டர் விஜயன் ராஜ் மியூஸிக்கல்ஸிலிருந்து வெளியேறுவதைக் கண்டு சற்றுத் தயங்கிய பின்—

கடையினுள் பிரவேசித்தான்.

—வாங்க சார்! — ரத்னம் வரவேற்றான்.

—என்னப்பா, உங்க முதலாளி சொன்னாரா?

—சொன்னாருங்க. அதை அப்படியே எடுத்து வைச்சுட்டேன்.

புகை ஏற்றப்பட்ட கண்ணாடிக்குள் தினகர் காரில் வீடு திரும்பும்போது அந்தக் காஸெட்டுகள் அவனிடத்தில் இருந்தன.

காரை போர்ட்டிகோவில் நிறுத்திய தினகர், வீட்டைத் திறந்து உள்ளே சென்று பின் தாழ்ப்பாள் போட்டான்.

அறைக்குச் சென்று டேப்ரிகார்டரில் ஒரு காஸட்டை நுழைத்துத் தட்டினான்.

சுரேகாவின் குரல் — டேப் நாடாவிலிருந்து பிளிறியது. அவள் ஏதோ ஒரு பாட்டைப் பாடிக்கொண்டிருந்தாள்.

பாடல் நின்றது.

சிறிய சர்ச்

உலகில் மிகச் சிறிய சர்ச் அமெரிக்கா கென்டக்கி மாகாணத்தில் லோலோனியா என்ற இடத்தில் உள்ளது. மூன்று பேர் மட்டுமே இந்த சர்ச்சில் அமர முடியும்.

தகவல்: எஸ். பாரதிநாதன்



சில சில்லறைச் சத்தங்கள்.

—என்ன, ஊருக்குப் போக எல்லாம் தயார் பண்ணிட்டயா? என்னைக்குப் புறப்படறீங்க?— தினகரின் குத்தலான குரல்.

—நீங்க என்ன சொல்றீங்க? — கரேகாவின் பதற்றமான குரல்.

—என்னடி நடிக்கிறே. நேற்றே அந்த ராஸ்கல் தனபால் எழுதின கடிதத்தைப் பார்த்துட்டேன். நீ அவனுடன் சல்லாபிச்சதை ஒரு நாள்நேரிலே பார்த்ததிலிருந்தே நல்ல சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தேன். இன்னைக்கு மாதத்தின் கடைசிச் சனிக்கிழமை. தனபால் பெங்களூர் போயிடுவான். உன்னைக் கொன்று பழியை அவன் மேலே போடப் போறேன். பீரோவிலே இருக்கிற அந்தக் கடிதம் சாட்சியாய் அமையப் போவுது!

—சீ! நீ ஒரு மனுஷனா — கரேகாவின் குரல்.

'வீல்' என்ற அவளின் சத்தம்.

தினகர்தான் அவன் மனைவியைக் கொன்று விட்டான் என்பது மற்றவர்களுக்குத் தெரிய இருந்த ஒரே சாட்சி மெல்ல மறைந்தது.

அவன் முகத்தில் மகிழ்ச்சி கொப்புளித்தது.

தன் மனைவி மாற்றான் ஒருவனுடன் உடல் உறவு கொண்டிருப்பதை நேரில் தற்செயலாகக் காண நேர்ந்ததும் கொதித்த அவனுடைய இரத்தம் அவளைத் திட்டமிட்டுக் கொல்வதற்காகக் காத்திருந்து, கொன்றபின் தான் அடங்கியது. நேற்று மதியம் அவன் அவளைக் கொலை செய்யும் நோக்கத்தோடு வந்தபொழுது அவள் ஏதோ ஒரு சினிமாப் பாடலைப் பாடி டேப் செய்து கொண்டு இருந்தாள். இவனைக் கண்டதும் எழுந்தாள். அந்த அவசரத்தில் அதை ஆஃப் செய்யவில்லை. ஆகவே அவன் அவளைக் கொலை செய்தான் என்பதற்கான சாட்சி அதில் பதிவாகிவிட்டது. அது அவனுக்கு நினைவு வர, இதோ இந்தக் கடைசித் தடயத்தையும் அழித்துக் கொண்டிருக்கிறான்.

அதை முடித்துவிட்டு விசிலடித்துக் கொண்டே பாத்ரூமை நோக்கி நடந்தவன் 'பிங்பாங்' சத்தத்தால் தடைப்பட்டான்.

வெளியே — இன்ஸ்பெக்டர் விஜயன்.

வாங்க இன்ஸ்பெக்டர்.

—ஸாரி தினகர். இரவு நேரத்தில் தொல்லை கொடுத்ததற்கு மன்னிச்சிருங்க. உங்க மனைவி போட்டோவை வாங்கிப் போகலாமென்று வந்தேன்.

கரேகாவின் படத்துடன் இன்ஸ்பெக்டர் விஜயன் விடைபெற, இவன் படுக்கையில் விழுந்தான்.

கிர்ர்ர்ர்ரிங்....கிர்ர்ர்ர்ர்ரிங் — டெலிபோன் மிருதுவாக அடித்து அவனை எழுப்பியது.

மணியனிடமிருந்து இனிமை, இளமை, புதுமை இல்லாத ஒரு படம். தப்பு. தீபாவிடம் இளமை நிறையவே... கிராமத்து அப்பாவியைத் தைரியசாலியாக்கி, அம்மாவும் பெண்ணும் போட்டி போட்டுக் காதலித்து, பெண் அம்மாவுக்காகக் கொலைகாரியாகி, ஒருதலை ராகமாய் தியாகம் செய்யும் அபத்தக் கதை. மணியன் தம் நாவல்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்திருக்கலாம். தீபா நடித்தும் "காட்டு"கிறார். புதுமுகம் ரமணன் அப்பாவி நடிப்பில் கொஞ்சம் தடவி ஜூரம் தேறுகிறார். உருவத்துக்குப் பொருத்தமில்லாத ஜாக்கி ரோலில் விஜயன் 'கௌரவமாக' வீணடிக்கப்பட்டிருக்கிறார். சுருளியின் விரச லீலைகளுக்கு மன்னிப்பே கிடையாது. கதையுடன் சம்பந்தமும் கிடையாது.

ரஜனிகாந்த் வந்ததும் — சாரி, நளினிகாந்த் வந்ததும் பழக்க தோஷத்தால் கைதட்டல் பெற்றாலும் தான் மூளை[illegible]ருத்துப்போன கிட் தகை என்று காட்டிவிட்டார். சங்கர் கணேஷின் அலட்டலில்லாத இசையில் ஒரு பாடகருக்கு (ரமணன்)இன்னொரு பாடகர் (மலேசியா வாசுதேவன்) பின்னணி பாடுவது புதுமை. காதலிப்பது மதி. கல்யாணம் கறது—விதி போன்ற அனுபவ வசனங்கள் தாமரைமணாளனிடம் சில சமயம் உதிர்கிறது. குறையில்லா ஒளிப்பதிவு. நிறைவில்லா ஒலிப்பதிவு. தீபாவும் மோகனப்ரியாவும் (இவரும் முதல் அட்டெம்ட்டில் பாஸ்) கோவில் போகப் போட்டியிடும் இடமும், தீபா சாணியை மிதித்து மகளைத் தவிர்ப்பதும் சுவையான இடங்கள்.

மோசமான கதையை மோசமாக டைரக்ட் செய்வது கலபம்தான். காஜா கலபத்தில் முடித்துவிட்டார்.

காதல் காதல் காதல் படம் பார்ப்பது —மதி.

பார்த்தபின் சாதல் சாதல் சாதல் —விதி

—நளினி/சாஸ்திரி

காதல், காதல், காதல்



—ஹலோ மிஸ்டர் தினகர்! நான் உங்க நண்பன். போலீஸ் தேடற சுரேகா எங்கே இருக்கான்னு உங்களுக்கும் தெரியும்...எனக்கும் தெரியும். எதிர் முனையில் ஒரு கட்டையான மர்மக்குரல்.

அவன் முகம் பக்கென்று பின்வாங்கியது.

—யார் நீ?

—அதுதான் சொன்னேனே, உன் நண்பன். நீ சுரேகாவைக் கொன்னதும் தெரியும் அந்த உடலை எங்கே மறைச்சு வைச்சிருக்கிறே என்பதும் தெரியும். நான் யார், உனக்கு நான் ஏன் உதவி செய்கிறேன் என்பதைப் பிறகு சொல்கிறேன். இப்ப நீ உடனே அந்த பாடியை விடியறதுக்குள்ள வேறு இடத்துக்கு மாற்றிவிடு. இல்லையென்றால் ஆபத்து. நான் நாளைக்கு ஈவினிங் ஹோட்டல் தாராவுல சந்திக்கிறேன்.

—ஹலோ, ஹலோ...

அடுத்த முனையில் டெலிபோன் வைக்கும் சத்தம்.

தினகர் வியர்த்தான். யார் இவன்? இவனுக்கு எப்படி நம்ப விஷயம் தெரியும்? உண்மையிலேயே இடத்தை மாற்றவில்லை என்றால் ஆபத்தா? என்ன செய்யலாம்?

மண்வெட்டி, பிக்காஸ், டார்ச்சு சகிதம் விசாலமாக அமைந்துள்ள தன் பங்களாவின் பின் பக்கம் தோட்டத்தில் உள்ள கிணற்றடிக்குப் பக்கத்தில் உள்ள புதரை நோக்கி நடந்தான்.

தோண்டுவது சுலபமாகவே இருந்தது. தட்டுப்பட்டது.

சுரேகாவின் விறைத்த கை. ஜாக்கிரதையாக வெளியே எடுத்தான். அவன் முகத்தில் முத்து முத்தாக வேர்வை.

—ஹாண்ட்ஸ் அப்.

பூட்ஸ் காலடிகள்.

பல திசைகளிலிருந்து டார்ச்சுகள் ஒளியைச் சிந்தின.

தினகரன் தன் நிலைக்கு வருவதற்குள் அவனைச் சுற்றி ஒரு காக்கிப் பட்டாளம்.

கொலை செய்த குற்றத்துக்காக அவன் கைது செய்யப்பட்டு ஜீப்பில் ஏற்றப்பட்டான்.

தினகரன் கொடுத்த காஸட்டை அப்படியே திருப்பிக் கேட்டதாக முதலாளி கூறியதும் அவை என்ன பாடலாக இருக்கும் என்று ஆர்வத்தால் ரத்னம் அந்த கேஸட்டுகளைப் போட்டுப் பார்க்க, அந்த நிகழ்ச்சி தெரியவர, பயந்து ரத்னம் நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜனிடம் கூற, அவருக்குச் சந்தேக வித்து விழ, எதற்கும் இருக்கட்டும் என்று அதை வேறு டேப்பில் பதிவு செய்து கொண்டு அதைத் திருப்பிப் பழையபடியே கொடுத்துவிடச் சொன்னார். தினகரைப்பற்றி அறிய வந்த ராஜன் அங்கு இன்ஸ்பெக்டர் விஜயனைச் சந்தித்ததும் அதன் பின் விஜயன் போட்டோ வாங்க வருவது போல் வந்து சில விஷயங்களைச் சேகரித்ததும் தனக்குப் போன் செய்த 301 கான்ஸ்டேபிளிடம் விஷயத்தைக் கூறி, அவனுக்குச் சரியாக இரவு ஒரு மணிக்கு போன் செய்யச் சொன்னதும், அவர்கள் முன்னேற்பாடாக அங்கு வந்து ஒளிந்திருந்ததும் இனிமேல்தான் தினகருக்கு ஒவ்வொன்றாகத் தெரியப் போகிறது!

அருள்வாக்கு

நவநீதக் கள்ளன்

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய ஸ்வாமிகள்

நவம்நீதம் என்றால்' புதுசாக எடுத்தது என்று அர்த்தம். நவ - புதுசாக; நீதம் - எடுக்கப்பட்டது. புத்தம் புதுசாகக் கார்த்தால வேளையில் பசும் பாலில் உறை குத்தி ஸாயங் காலமே அந்தத் தயிரைச் சிலுப்பி எடுக்கிற வெண்ணெய்தான் நவநீதம்.

நாமெல்லாம் பசுக்கள். நம் மனசு வெள்ளை வெளேரென்று பாலாக இருக்கணும். அப்போதுதான், கன்னங் கரேலென்று இருக்கிறதால் கிருஷ்ணன் என்றே பேர் வைத்துக் கொண்டவன் நம்மிடம் வருவான். அது வெறுப்பைத் தருகிற கருப்பு அல்ல; மோஹத்தை உண்டாக்குகிற மேகத்தின் கருப்பு. கனச்யாம், கனச்யாம் என்கிற போது 'கன' என்றால் 'மேகம்' என்றே அர்த்தம். 'கார்வண்ணன்' என்று சொல்வார்கள். மேகம் எத்தனைக்கெத்தனை கறுப்போ அத்தனைக்கத்தனை ஜலத்தைக் கொட்டும். அந்த ஜலம் கறுப்பாகவா இருக்கிறது? இப்படிப் பரம பிரேம தாரையைப் பிரவாஹமாகக் கொட்டுகிறவனே கிருஷ்ணன். அடர்ந்த மேகத்திலிருந்தே மஹா ஜ்யோதிஸ்ஸான மின்னல்கள் தோன்றுகிற மாதிரி, ஞானப் பிரகாசம் பளிச்சுப் பளிச்சென்று வெட்ட கீதாச்சாரியனாக இருக்கிறான் அந்தக் கொண்டல் வண்ணன். இப்படியே வெளியே கபடும், சூதும், மாயமுமாகத் தெரிந்தாலும் அவன் நாம் மனஸைப் பால் வெளுப்பாக்கிக் கொண்டால்தான் நம்மைப் பாலிக்க, கோபாலனாக வருவான்.

அப்படியே அந்தப் பாலை எடுத்துக் குடிப்பதில்லை அவன். அது தயிராகி அதிலிருந்து புத்தம் புது வெண்ணெய் எடுத்தாகணும். அந்த நவநீதத்தை உண்ணத்தான் வருவான்; அதுவும் திருட்டுத்தனமாக!

பக்தி தாபத்திலே வெள்ளை மனஸைக் காய்ச்சினால் அது பொங்கும். அப்புறம் இந்த உணர்ச்சி வேகம் அடங்க அதைக் கொஞ்சம் ஆற்றி, சாந்தத்தை உறை குத்தணும். பால் ஓடுகிறது போல, ஆடுகிறது போலத் தயிர் ஓடுவதில்லை; ஆடுவதில்லை. அப்படியே கெட்டியாக, சாந்தமாக இருந்து விடுகிறது. அவனுக்கு சாந்தமும் வேணும்; லீலையின் சலனமும் வேண்டும். அப்போது தான் முடிவிலே சாந்தத்திலேயே, எல்லா சலனமும் அடங்கியிருப்பதும், அத்தனை சலனத்துக்கும் அடிப்படையாக சாந்தமே இருந்து கொண்டிருப்பதும் தெரியும். உபநிஷத்தே ''ச்யாமாத் சபளம், சபளாத் ச்யாமம்'' என்கிறது.

அதனால் ஓடாமல் ஆடாமல் இருக்கிற தயிரைப் போட்டுக் கடை கடை என்று கடைய வேண்டியிருக்கிறது. ஹ்ருதயப் பானைக்குள் இருக்கிற தயிரில் ஸத்யத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை (இதை ஞான விசாரம், ஆத்ம விசாரம் என்பார்கள்.) மத்தாகப் போட்டு, ஒருமுக சிந்தனை என்ற கயிற்றால் கடைந்தால் பூர்ணத்வம் என்ற வெண்ணெய் வரும். அதைத் துளிக்கூடப் பழசாக விடாமல், அது நவநீதமாக இருக்கிறபோதே வந்து எடுத்துக் கொண்டு விடுவான். பூரணத்வம் இந்த ஜீவ சரீரப் பானைக்குள் எப்படி இருக்க முடியும்? அதனால் பூரணனான அவனிடமே போய்விடும். தனியாக நாம் என்று ஒன்று இல்லாமல் அவனுக்குள் அவனாகவே போய் விடுவோம் என்று அர்த்தம்.

திருட்டுத்தனமாக எடுத்துக் கொள்கிறான் என்று ஏன் சொல்ல வேண்டும்? பகவான் ஸாதாரண அதிதி மாதிரி வந்தால் அவனை வேறேயாக வைத்து ராஜோபசாரம் பண்ணி Conscious ஆகத்தானே (புத்தி பூர்வமாகத்தானே) வெண்ணெயைத் தருவோம்? அப்படி புத்தி பூர்வமாக நம்மையே அவனிடம் சரணாகதி பண்ணிக் கொள்ள நமக்கு அப்போது புத்தி வருமோ, வராதோ? 'சரணாகதி பண்ணுகிறேன்' என்கிறபோதே அப்படிச் சொல்கிற ஒரு 'நான்' தனியாக வந்துவிடுகிறதே! இதனால்தான் நமக்குத் தெரியாமல் நாம் unconscious ஆக இருக்கிறபோதே நம்மை எடுத்துக் கொண்டால்தான் உண்டு என்று திருடனாக வருகிறான்!

வெண்ணெய் பரப்பிரம்மம் மாதிரி. சுத்த ஸத்வ வெளுப்பாக இருந்தாலும் துளி உருக்கினாலும், அது வெளுப்பும் போய் ஸ்படிகம் மாதிரி Colourless ஆகிவிடுவது. எந்தக் கலரிலும் அது சேராது. அதன் ருசியும் இப்படித்தான். மதுரம், மதுரம் என்று சொன்னாலும் வெண்ணெய் வாஸ்தவத்தில் தித்திப்பு இல்லை — சர்க்கரை, தேன் மாதிரி இல்லை. ஷட்-ரசம் என்கிற ஆறு சுவைகளில் அது எதுவும் இல்லை. அதன் கலர், ருசி எல்லாம் சாந்தம் என்றுதான் சொல்ல வேண்டும். ஒரே ஆட்டமாக ஆட்டிச் சிலுப்பிய பின் உண்டாகிற இந்தப் பரம சாந்தத்தை நாம் அடைகிறபோது நம்மைத் தனக்குள்ளேயே கொண்டு போய் வைத்துக் கொள்கிற பரமாத்மாதான் கிருஷ்ணன்.




போட்டோ : என். ராமகிருஷ்ணு






தமிழ் நாட்டில் சட்ட, ஒழுங்கு நிலைமை குறித்து எம்.ஜி.ஆரை மத்திய மந்திரி எச்சரித்துள்ளார்!



1980 ஆகஸ்டு 31
ரௌத்திரி ஆவணி 15
மலர்: 39 இதழ்: 5



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மொர்தாபாத்! ஜிந்தாபாத்!

மொர்தாபாத்துக்கு ஒரு ஜிந்தாபாத் போட வேண்டியதுதான். ஏனென்றால் அங்கு நடந்த வகுப்புக் கலவரங்கள் காரணமாக நமக்கு மூன்று முக்கியமான விஷயங்கள் தெரிய வந்திருக்கின்றன. அதுவும் பிரதமரிடமிருந்தும் அவரது சக மந்திரிகளிடமிருந்துமே தெரிந்து கொண்டிருக்கிறோம்.

மொர்தாபாத்தைத் தொடர்ந்து, அலிகார், அலகாபாத், டில்லி இன்னும் கர்நாடக மாநிலத்திலும் கூட வகுப்புக் கலவரங்கள் நிகழ்ந்தன. இதற்கெல்லாம் காரணங்கள் என்ன தெரியுமா?

1. பிரதமருக்குக் கெட்ட பெயர் பெற்றுத் தர வேண்டும் என்பதற்காகவே இங்கு ஒரு சதிகாரக் கும்பல் வேலை செய்கிறது!

2. அயல் நாட்டு ஐந்தாம் படையினர் வேண்டுமென்றே இங்கு வகுப்புக் கலவரத்துக்கு வித்திடுகின்றனர்!

3. பத்திரிகைகள் வகுப்புக் கலவரங்கள் பற்றிய செய்திகளைப் பிரசுரிக்கின்றன. இது மற்ற இடங்களிலும் கலவரம் பரவ வழி வகுக்கிறது!

பிரதமரும் அவரது சக அமைச்சர்களும் வெளியிட்டுள்ள இந்த மூன்று கருத்துக்களும் முழுக்க முழுக்க உண்மையாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் நமது நாட்டில் வகுப்புக் கலவரங்கள் நடக்க வேறு காரணம் எதையுமே நம்மால் கண்டு பிடிக்க முடியவில்லை. எவ்வளவுதான் யோசித்தாலும் புலப்படவில்லை.

சுதந்திரம் பெற்று முப்பத்தி மூன்று ஆண்டுகளாகியும் பர்மிட் லைசென்ஸ் பொருளாதாரம் காரணமாக வறுமை இந்த நாட்டிலிருந்து ஒழிக்கப்படாமல் இருக்கிறதே; வேலை இல்லாத் திண்டாட்டம் குறையாமலிருக்கிறதே இவற்றால் மக்களிடம் விரக்தியும், மனக் கசப்பும் புகைச்சலும் மிகுந்திருக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. பழகிப் போயிருக்கும்! எனவே இவை காரணமில்லை.

மதச் சார்பின்மை என்ற பெயரில் நாத்திகத்தைப் பரப்பி வருகிறதே அரசு; எந்த மதத்துக்கும் முக்கியத்துவமின்றி இறையுணர்வையும் பயபக்தியையும் நாட்டிலிருந்து விரட்டி வருகிறதே அரசாங்கம்; இவை நிச்சயமாகக் காரணமாயிருக்க முடியாது.

போலீஸ் இலாக்கா மக்களை அணுகும் முறையில் மாறுதலேயின்றி பழைய பிரிட்டிஷ் ஆட்சி காலத்திய பாணியிலேயே முரட்டுத்தனமாகப் பேசி, நடந்து கொள்கிறார்களே, அது காரணமா? ஊஹூம் இல்லவே, இல்லை!

சமயோசிதமாக முன் கூட்டியே நடவடிக்கை எடுத்துக் கலகத்தை வளர்வதையும் பரவுவதையும் தடுக்கும் ஆற்றலற்றவர்களாக போலீஸார் இருக்கிறார்களே, அது ஒரு வேளை காரணமோ எனில் கிடையவே கிடையாது!

தலைவர்கள் லஞ்ச ஊழல் மன்னர்களாக விளங்கியும் அவர்களை சட்டம் கண்டும் காணாமல் இருக்கிறதே; தொடுக்கப்படும் வேகத்திலேயே வழக்குகள் வாபஸ் பெறப் படுகின்றனவே; இதனால் மக்களுக்குச் சட்டத்தின் ஆட்சியில் மதிப்பும் நம்பிக்கையும் இல்லாமல் போகிறதே — இதெல்லாம் காரணமாக இருக்கலாமோ என்றால், சேச்சே! யாராவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவார்களா?

சரி, ஜாதி மத அடிப்படையில் வேட்பாளர்களை நிறுத்தி ஜாதி மத அடிப்படையில் வாக்களிக்குமாறு மக்களைக் கோருகிறார்களே ஒரு வேளை அது காரணமாக இருக்குமோ என்றால், நோ! நோ!

அரசியல் ரீதியான, பொருளாதார ரீதியான கொள்கைகளின் அடிப்படையில்லாது முஸ்லீம்களுக்கு ஒரு கட்சி ஹிந்துக்களுக்கு ஒரு கட்சி பஞ்சாபிகளுக்கு ஒரு கட்சி திராவிடருக்கு ஒரு கட்சி என்று கட்சிகள் அமைகின்றனவே, முஸ்லீம் பல்கலைக்கழகம் ஹிந்து பல்கலைக்கழகம் என்றெல்லாம் உருவாகின்றனவே இவையும் காரணமாக இருக்கவே முடியாது — நிச்சயம்!

வேலை வாய்ப்புகளுக்கும் சரி, கல்வி நிலையங்களில் சேர்ந்து படிக்கவும் சரி, தகுதி, புத்திசாலித்தனத்துக்கு முக்கியத்துவம் இல்லை; யார் யார் எந்த ஜாதி, எந்த மதம் என்பதுதான் அடிப்படை என்ற நிலை நீடிக்கிறதே இது காரணமென நினைத்தால் அது அசட்டுத்தனம்தான்!

மொழி வாரியாக ராஜ்யங்களைப் பிரித்து 'மண்ணின் மைந்தர்கள்' கொள்கையை வலியுறுத்தி வருகிறார்களே அது ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்காது. ஆங்கிலம் என்ற இணைப்பு மொழியைப் படிப்படியாகக் கொன்று வருவதோ ஹிந்தியைத் திணிப்பதோ சகோதரத்துவத்தை வளர்க்குமேயன்றிக் குறைக்காது.

மாநிலங்களைச் சுதந்திரமாகப் போட்டி போட்டுக் கொண்டு முன்னேற விடாமல் எதற்கெடுத்தாலும் டில்லிக்குக் காவடி எடுக்க வேண்டிய நிலையில் வைத்திருப்பதால் அலுப்புடன் ஒரு மெத்தனப் போக்கும் மாநில அரசுகளிடம் வளர்ந்திருக்கிறதே அது காரணமாய் இருக்கவே முடியாது.

கல்வி நிலையங்களிலெல்லாம் அரசியல்வாதிகள் ஊடுருவித் தங்கள் செல்வாக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறார்களே அதனால் ஒரு தீங்கும் விளையாது.

எல்லோருக்கும் ஒரே சட்டம் முஸ்லீம்களுக்கு மட்டும் தனிச் சட்டம் என்ற நியதியால் ஒரு கெடுதலும் ஏற்பட்டு விடாது.

இவற்றினாலெல்லாம் இந்தியா — இந்தியன் என்ற பரந்த மனப்பான்மை போய், ஹிந்து — முஸ்லீம், ஆரியன் — திராவிடன், தமிழன் — கேரளன், பணக்காரன் - ஏழை என்பன போன்ற குறுகிய எண்ணங்கள் ஏற்பட்டு விடப் போவதில்லை.

எனவே இவற்றினாலெல்லாம் விளையாத வகுப்புக் கலவரங்கள் வன்முறைகள் பிரதமரும் அவரது சகாக்களும் கூறிய மூன்று காரணங்களால்தானே தோன்றியிருக்க வேண்டும்?

அயல் நாட்டவரே! ஐந்தாம்படையினரே! வம்பு பண்ணாதீர்கள்! வாலைச் சுருட்டிக் கொள்ளுங்கள்!

இந்திராவுக்கு எதிராகச் சதி செய்பவர்களே, எச்சரிக்கிறோம்! சீக்கிரமே சீர்திருந்தி விடுங்கள்!

பத்திரிகை ஆசிரியர்களே! பிரதமருக்குப் பிடிக்காத செய்திகளை ஏன் வெளியிடுகிறீர்கள்? உண்மைகளை மறைத்து இருட்டடிப்பு செய்து நாட்டில் அமைதி காக்க உதவுங்கள்!



விபசாரத் தடைச் சட்டத்தைத் தளர்த்துவதற்கு ஆதரவாக வழக்கறிஞர் திருமதி சுதா ராமலிங்கம் பேசியிருப்பது இந்த வாரம் சட்டமும் சமுதாயமும் பகுதியில் பிரசுரமாகியுள்ளது.

மாற்றுக் கருத்துக்கு மதிப்பளித்து கல்கி பிரசுரிக்கிறதேயன்றி ஏற்றுக்கொண்டு அல்ல. அரசாங்கம் லாட்டரி நடத்துவது; அரசாங்கம் கள்ளு, சாராயக் கடைகளை ஏலம் விடுவது; அரசாங்கம் விபசார விடுதிகளுக்கு லைசென்ஸ் வழங்கிப் பணம் பண்ணுவது எல்லாம் மக்கள் ஆட்சியில் மக்களுக்கு எதிராக மக்கள் பிரதிநிதிகளே செய்யும் மோசடி, அநீதி, கொடுமை!

விபசாரத் தடைச் சட்டத்தில் தேவையான ஆரோக்கியமான திருத்தங்களைச் செய்து தீவிரமாக அமுல் படுத்துவதே முறை. பெரும்பாலான விபசாரிகள் ஏழ்மை காரணமாகவோ அல்லது பேராசை காரணமாகவோ அத்தொழிலில் ஈடுபடுகின்றனர் என்று திருமதி சுதா ராமலிங்கமே கூறுகிறார். ஆக அந்த மூலகாரணங்களை அகற்றுவதே அரசின் பணி. ஆனால் அரசின் இன்றைய கொள்கைகள் ஏழ்மையை மட்டுமின்றிப் பேராசையையும் வளர்ப்பதாகவே உள்ளன!

● ● ●

● இந்தியாவில் மட்டும் ஆண்டொன்றுக்குப் பதின்மூன்று மாதங்கள் என்று நிரூபித்துள்ளது போனஸ் குறித்த அரசின் அவசரச் சட்டம். லாபமில்லாவிட்டாலும் ஒரு மாத போனஸ் கட்டாயம் எனில் அது சம்பளத்தில் சேர்ந்ததே, போனஸ் ஆகாது.

அதிகபட்ச போனஸ் இருபது சதவிகிதம் என்று நிர்ணயிக்கிறது புதிய சட்டம். மாதம் ரூ. 750க்கு அதிகமாகச் சம்பளம் வாங்குவோருக்குச் சம்பளம் என்னவானாலும் போனஸ் மட்டும் மாதச் சம்பளம் ரூ. 750

செய்திகள் வாசிப்பது செம்பியன்

என்ற அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படும். அரசு ஊழியர்கள் போனஸ் சட்டத்தில் அடங்கவில்லை.

அவசரச் சட்டம் போனஸ் பிரச்னையை அவசரமாகவும் தீர்க்கவில்லை ஆற அமரவும் தீர்க்கவில்லை. போனஸ் சம்பந்தப்பட்ட மேலும் பல புதிய அவசரப் பிரச்னைகளைத் தோற்றுவித்திருக்கிறது!

● ● ●

● சினிமாத் தொழிலை ஆராயப் புகுந்த கமிட்டி சினிமாத் தொழிலை அரசுடைமை யாக்கிவிட வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளது! தேசத்தின் ஒருமைப்பாடு கருதி சினிமாத் தொழிலை மாநில அரசின் அதிகாரத்திலிருந்து நீக்கி மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளது.

சினிமா அரசுடைமையானால் பிரதமர் கதை எழுத அமைச்சர் சாத்தே வசனமெழுத, பன்ஸிலால் டைரக்ட் பண்ண, பிலிம்ஸ் டிவிஷன் படம் தயாரிக்க வேண்டியதுதான்! முதலில் நெருக்கடி நிலைப் பிரகடனத்தை நியாயப்படுத்தும் ஒரு படத்தில் சஞ்சயின் பாகத்தை ராஜீவ் ஏற்று நடிக்கலாம்!

பல்வேறு மாநிலங்களின் கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சினிமா மாநில அரசின் மேற்பார்வையில் உள்ளது. அதை மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்படுத்தினால் ஒரே ஒரு கலாசாரம்தான் மிஞ்சும். அது இந்திரா காங்கிரஸ் கலாசாரமாகத்தான் இருக்கும்!

கமிட்டியின் சிபாரிசுகள் ஏற்கப்படுமேயானால் 'சினிமா என்ற ஒரு பொழுது போக்காவது மக்களுக்கு இருந்தது: அதற்கும் பிடித்தது சனியன்' என்றுதான் கூற வேண்டியிருக்கும்.

படாதிபதிகளும் சற்று சிந்திக்க வேண்டும். 'இப்படி கமிட்டி சிபாரிசு செய்யும் அளவுக்கு நாம் என்ன தவறு செய்தோம்?' என்று யோசிக்க வேண்டும். சினிமாத் தொழிலை ஒரு சூதாட்ட மனப்பான்மையுடன் அணுகுவது; சமுதாயப் பிரக்ஞையும் பொறுப்பும் இல்லாமல் படம் பிடிப்பது போன்றவை ஒழிய வேண்டும். ஆரோக்கியமான களிப்பூட்டும் படங்களுடன் பத்து நிமிஷமே நீடிக்கிற ஒரு தகவல் படமும் சுவாரஸ்யமான விதத்தில் தயாரித்துத் தரலாம் அல்லவா? தடுக்கி விழுந்தால் மேனாடுகளுக்கு லொகேஷன் தேடிப் படம் பிடிக்கப் போகிறீர்களே; இதையும் சற்றுக் கற்றுவாருங்களேன்!

● ● ●

● அமெரிக்காவில் தன் தொழிலைச் சரிவரச் செய்யாமல் மோசடி புரிந்த ஒரு மனோதத்துவ டாக்டருக்கு நீதிபதி என்ன தண்டனை வழங்கினார் தெரியுமா? ''இந்தியாவுக்குப் போய் சில மாதங்கள் கிராமங்களில் சமுதாயப் பணியாற்று!'' என்று உத்தரவு போட்டிருக்கிறார்!

அதென்ன? மோசடி பண்ணின டாக்டரை நாடு கடத்த வேண்டுமானால் இந்தியாதானா அகப்பட்டது? மோசடி மனோதத்துவடாக்டர் இங்கு வந்து சமுதாயப் பணியாற்றுகிறேன் என்று மோசடி செய்ய மாட்டார் என்பது என்ன நிச்சயம்?

அந்த நீதிபதிக்கே ஒருவேளை மனோதத்துவ டாக்டரின் உதவி தேவைப்படுகிறதோ என்னவோ?

இங்கு குற்றம் புரிந்த நக்ஸலைட்டுகளுக்கு அமெரிக்காவுக்குப் போய் நீக்ரோக்கள் வாழ் சேரிகளில் சமுதாயப் பணி ஆற்றுமாறு தண்டனை விதித்தால் வரவேற்பீர்களா நீதிபதி அவர்?


● ● ●

● ஜப்பானியர்தாம் மலர் அலங்காரக் கலையில் வல்லவர்கள் என எண்ணியிருந்தோம். இகிபானா என்று பெயர் பெற்ற அந்தக் கலையை நம்மவர்கள் புகழ்ந்து இங்கு வரவேற்றுக் கற்றுக்கொள்ளவும் செய்தார்கள்.

ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது தேசத்திலேயே மலர் அலங்காரக் கலை மிகச் சிறந்து பிரசித்தி பெற்றிருந்தது என்று சிற்ப ஆராய்ச்சிகள் மூலம் நிரூபித்துப் புத்தகம் எழுதியுள்ளார் ஸ்ரீமதி தனலக்ஷ்மி ஃபோர்டைஸ். கொழும்புவில் பிறந்த இவர் பிரிட்டனில் இருந்தபோது மலர் அலங்காரங்களில் ஈடுபாடு கொண்டார். இந்தியாவின் பல்வேறு கலைகளிலும் ஆர்வம் கொண்ட தனலக்ஷ்மி இன்று பங்களூரில் வாழ்கிறார்.


இந்திய பாணி மலர் அலங்காரங்கள் பலவற்றை இன்று அமைத்துக் காட்டியிருக்கிறார் தமது நூலில். ஒவ்வொன்றையும் பற்றி சுருக்கமான, ரசமான குறிப்பும் தந்துள்ளார். ஒவ்வொரு அலங்காரத்தையும் வண்ணப் படம் எடுத்து உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் அற்புதமாக அச்சடித்து, புத்தக வடிவில் தந்துள்ளது ஹாங்காங்கில் உள்ள பெரினியல் பிரஸ். இந்திய மலர் அலங்காரக் கலை பற்றிய முதல் நூல் இதுதான். இதனைத் தொடுவது ஆனந்தம், புரட்டிப் பார்ப்பது பரமானந்தம், படிப்பது பிரும்மானந்தம்! விலை ரூ. 57. தரலாம், தகும்; தகும்!

Pushpa Bharathi கிடைக்குமிடம்: Nalanda Book and Record Shop, Taj Intercontinental, Apollo Bunder, Bombay.



✗ தனலக்ஷ்மி





● எங்கே ''கல்கி'' சுதந்திர தின மலரைக் காணோம்? என்று பார்த்தேன். ஆனால், பரிசு பெற்ற 'சுதந்திரப் பசி' வரலாற்றுக் கதை மன நிறைவு தந்துவிட்டது!

கோயமுத்தூர்—2 நா. செந்தில் முரளி

● ''சுதந்திரப் பசி'' கதையல்ல, அது ஒரு உணர்ச்சிப் பிழம்பு. இக்கதையைத் தேர்ந்தெடுத்தவருக்கும் இக்கதையை எழுதியவருக்கும்... நான் ஓர் ஏழை. பாராட்டத்தான் முடிகிறது என்னால்.

சென்னை 12 எம். தேவராஜன்

● சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற சரித்திரக் கதையை எழுதியவர் ஓர் அறிமுக எழுத்தாளர்தானா? நம்பவே முடியவில்லையே...

நாகர்கோயில் எஸ். ராஜிபாரதி

● பிரிவினை வாதங்களையும் கிளர்ச்சிகளையும் கிளப்பிக்கொண்டு நாம் அனைவரும் இந்தியர்கள் என்பதை மறந்து கொண்டிருக்கும் இந்த வேளையில் ஒருமைப்பாட்டினை நினைவு படுத்திய அருமையான வித்தியாசமான சரித்திரக் கதை ''சுதந்திரப் பசி.''

சிவகாசி வி. வசந்தகுமார்

● கண்ணதாசனின் கருத்துக்கள் வரவேற்க வேண்டிய ஒன்றாகும். ஹைதராபாத் சிறையில் டி. வி. வசதி யெல்லாம் செய்யப் போகிறார்களாம். இதனால் டி. வி.யில் காட்டப்படும் மோசமான திரைப் படங்களால் குற்றங்கள் மேலும் அதிகரிக்கத்தான் செய்யும்.

தற்போது தமிழ்நாடு அரசு பார்வையற்ற பட்டதாரி மாணவர்களைக் கோவில்களில் பிரசங்கம் செய்ய நியமித்து மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் வழங்கியும் வருகிறது. அரசு இந்தப் பணியை ஜெயிலுக்குள்ளும் தொடரச் செய்யலாம்.

கும்பகோணம் ரே. எஸ். பாலகுமூர்த்தி

● மன்னார்குடி விசுவநாதன் அவர்களின் 'கடமை நெஞ்சம்' சிறுகதை மிகவும் அருமை. இப்படிப்பட்ட நல்ல கதையைப் பிரசுரித்த கல்கியை மனமார வாழ்த்துகிறேன்.

பழந்தண்டலம் பி. எஸ். விநாயகம்

● ''டாக்டர்கள் ஓவர் டோஸ்' (10.8.80 இதழ்) வேதனையளித்தாலும், சிந்தனையைத் தூண்டுவதாய் அமைந்துள்ளது. இது விஷயமாக டாக்டர் ஏ. எஸ். கபீர் (முன்னாள் டீன், மதுரை மருத்துவக் கல்லூரி) எங்கள் கல்லூரி ஆண்டு மலர் ஒன்றில் எழுதியுள்ளார்:

''சீனாவுடனான போர் பல காலம் நீடிக்கும் என்ற பயத்தில் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர் எண்ணிக்கை திடீரென இரு மடங்காக அதிகரிக்கப்பட்டது. (மதுரையில் 100லிருந்து 200 ஆகியது.) ஆனால் வேண்டிய வசதிகளோ அதிகரிக்கப்படவில்லை. போர் விரைவில் முடிந்ததும் மாணவர் எண்ணிக்கை அரசியல் காரணங்களால் பழைய நிலைக்குக் குறைக்கப்படவில்லை.''

மாணவர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு வசதிகளும் இல்லை. அதே காரணத்தினால் ஆசிரியர்களாலும் சரியாகக் கற்றுத்தர இயலவில்லை. மேலும் தகுதி அடிப்படையில் மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

மானேஜர்: ''லேடி டைப்பிஸ்ட் சந்திரமதியைத் தொட்டுப் பேசினீயாமே... சற்று முன் வந்து புகார் செய்துட்டுப் போறா கண்ணீர் விட்டு அழுதபடி!''

அவன்: ''அதை சீரியஸா எடுத்துக்காதீங்க ஸார்... தொட்டதுக்கெல்லாம் ஒப்பாரி வைக்கிறது அவள் வழக்கம்!''

-உ. ராஜாஜி



◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

இவை கவனிக்கப்பட்டால் குறைந்து கொண்டிருக்கும் மருத்துவக் கல்வியின் தரம் நிச்சயம் உயரும். மக்களுக்குச் சிறந்த மருத்துவச் சேவை கிடைக்கும்.

மதுரை-20 ர. சந்திரசேகரன்
இறுதியாண்டு மருத்துவம்

● கலைஞரைப் பற்றி ஒரு கார்ட்டூன் போட்டிருந்தீர்கள். கலைஞரை விட்டு உண்மையான எந்தத் தொண்டரும் செல்லவில்லை. செல்லவும் மாட்டார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் கு. சுந்தரராசன்

● கவர்னர் பதவி தூங்குமூஞ்சிப் பதவி என்று இன்றும் சொல்லும் மந்திரிக்கு, மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கூறிய உதாரணம் அக்ஷர லட்சம் பெறும்.

கூத்தாநல்லூர் கே. என். எஸ். மணியன்

இன்று சுதாவின் பிறந்த நாள்
பெற்றோரின் மகிழ்ச்சிக்கு பொன்னாள்



ஆம்! சுதாவின் பிறந்தநாள் அனைவரும் மகிழ்ச்சியுடன் திகழவேண்டிய பொன்னாள். அவளது சுபிட்சமான எதிர்காலம் பற்றி - உயர்கல்வி, திருமணம் போன்ற சுப காரியங்களுக்காக சிந்தித்து அவளது எதிர்காலத்திற்காக சேமிக்க வேண்டாமா? எமது திருமகள் திருமணத் திட்டம் மற்றும் பல சிறப்பு சேமிப்புத் திட்டங்களில் ஒன்றை தேர்ந்தெடுத்து இன்றே சேமிக்கத் தொடங்குவீர். இது லாபகரமானது மட்டுமின்றி உங்கள் எதிர்காலத் திட்டங்களையும் நிறைவேற்ற உதவிடும்.

கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: கரூர் 639 001

அன்னியச் செலாவணியில் வர்த்தகம் செய்ய அங்கீகாரம் பெற்றவர்கள்.

எமது பம்பாய் நகர கிளை:

"சாயி சேம்பர்ஸ்" 365-367, நாஸி நாதா தெரு,
மஸ்ஜித் பந்தர், மாண்ட்வி, பம்பாய்-400 009.

கே. வி. ராகவாச்சாரி.
சேர்மன்

திரும்பி வந்த பந்து

இந்திரா சௌந்தரராஜன்



டைரக்டர் பிரபாகரன் இறுதிவரைக்கும் தான் எடுத்த முடிவிலிருந்து மாறவேயில்லை. தன் விருப்பப்படி திரைக் கதையை அமைத்தால்தான் ஆயிற்று என்று ஒரேயடியாய்ப் பிடிவாதம் செய்து அந்த விருப்பத்தை ஈடேற்றிக் கொண்டு விட்டார்.

தயாரிப்பாளருக்கும் இதர டெக்னீஷியன்களுக்கும் அவர் அமைத்த திரைக் கதை துளிக்கூடப் பிடிக்கவில்லை. அதே வேளையில் பிரபலமான புகழ் மிகுந்த அந்த இயக்குனரை அந்த

ஒரு விஷயத்துக்காக ஒதுக்கவும் மனமில்லே. வேறு வழியின்றிச் சங்கடத்துடன் அவரை அனுசரித்தார்கள்.

எல்லா ஏரியாக்களும் விற்றுத் தயாரிப்பாளருக்குப் போட்ட முதலுக்கு மேலேயே பணமும் வந்து விட்டது. இருப்பினும் உள்ளூற நெருடல்! பண்பாட்டையும் கலாசாரத்தையும் மீறி இயக்குனர் அமைத்திருக்கும் திரைக் கதையையும், குறிப்பாக க்ளைமாக்ஸ் காட்சியையும் ரசிகர்கள் வரவேற்பார்களா இல்லே எதிர்ப்பார்களா எனும் கேள்விக்குள் அவரது சிந்தனை சுழன்றது.

பத்திரிகைகள் காரி உமிழப் போவது உறுதி என்ற முடிவுக்கு அன்றே வந்துவிட்டார். ஆனால் ரசிகர்கள்? தயாரிப்பாளர் கொஞ்சம் கலங்கிப் போனார்.

பிரபாகரனுக்குத் துளிக்கூட அது பற்றிக் கவலை இல்லே. வித்தியாசமான திரைக் கதையை வித்தியாசமாய்க் கொடுத்தாகி விட்டது என்று திருப்திப்பட்டுக் கொண்டதோடு சரி. படத்தை வெளியிடுவதற்கு முன்பாகச் சிறப்புக் காட்சி போட்டுக் காட்டப்பட்டது.

''பத்து மணிக்கு இண்டர்வியூவுக்கு வரச் சொன்னால் 10.20க்கு வருகிறீயே?''

''நீங்கள் மட்டும் வேலே கொடுங்கள். நாளைக்கு 9-40க்கே வந்து படத்தை அட்ஜஸ்ட் பண்ணிடறேன்!''

-பிரியாபாலு



எல்லாப் பத்திரிகையாளர்களும் வந்திருந்தார்கள். அவர்கள் கதாநாயகி இறுதியில் தாலியைக் கழற்றித் தலையைச் சுற்றி எறிந்த காட்சி குறித்துப் பிரபாகரனைக் குடைய ஆரம்பித்துவிட்டார்கள்.

''ஏன் சார்! கதாநாயகன் கல்யாணத்துக்கு அப்புறம் ஒரு விபத்தில் தன் கால்களை இழந்துவிட்டான்கிற ஒரு பலவீனமான காரணத்துக்காகக் கதாநாயகி அவனை விவாகரத்துச் செய்ய விரும்பறாங்கற மாதிரி கதையைக் கொண்டு போய்க் கடைசியில் கோர்ட்டுல விவாகரத்துக் கிடைக்காததால் கோர்ட்டுத் தீர்ப்பை மீறித் தாலியைக் கழற்றி எறியறதாக் காட்டியிருக்கீங்களே, இதெல்லாம் நல்லாவா இருக்கு?''

—நிருபர் ஒருவர் பிரபாகரன் முன் வருத்தச் செறிவுடன் தமது கேள்வியை வைத்தார்.

பிரபாகரனுக்குச் சிவுசிவுத்தது.

''இந்த நாட்டுல நடக்கிறதெல்லாம் ரொம்பச் சரியா இருக்கிறப்போலவும், என்னோட கதாநாயகியோட போக்கு மட்டும் சரியில்லாததைப் போலவும் பேசறீங்களே. 'என்னோட கதாநாயகி புரட்சி மனப்பான்மை கொண்டவள். அவளைப் புரிஞ்சுக்கறதுக்கும், அவளுடைய போக்கை ஜீரணிக்கறதுக்கும் ஒரு பக்குவம் வேணும்.. அந்தப் பக்குவம் நம்மகிட்ட இருக்கான்னு கேளுங்க. மற்றபடி சிறுபிள்ளைத்தனமாப் பேசாதீங்க.''

''சினிமா என்கிறது ஒரு பெரிய மீடியம் சார், அதை யூஸ் பண்றச்சே கொஞ்சம் பண்பாட்டுக் கலாசார மனப்பான்மையோட செயல்படணும். இல்லேன்னு அதைப் பார்க்கறவங்க மனசு கெட்டுப் போயிடும். இதை நீங்க மனசுலே வெச்சுக்கிட்டுப் பேசணும்.''

''நீங்க ஒரு இணைந்துத் தவளேயோட மனப்பான்மையில பேசறீங்க. ஒரு சினிமா பார்த்துட்டு ஒருவன் கெட்டுப் போயிடுவான்கறதை நான் மறுக்கிறேன். கெடணும்னு இருந்தா ஒருத்தன் எப்படியும் கெட்டுத்தான் தீர்வான். இதை நீங்க புரிஞ்சுக்கணும். சினிமாங்கறது பார்க்கறவங்க மனசை மகிழ்ச்சியில் ஆழ்த்தற ஒரு மாஸ் மீடியா. அதுல புரட்சி இருக்கணும். புதுமை இருக்கணும். அப்பத்தான் அது ஒரு நியல் சினிமா. அதை விட்டுட்டு பழைமை, பண்பாடு, கலாசாரம்கிற மடிசஞ்சித்தனங்களையே ஒரு சினிமா வட்டமடிச்சா அது சினிமாவே இல்லே....''

—நிருபர்களுக்குச் சினிமாவை விட பிரபாகரின் பதில்கள் வித்தியாசமாக, விஷயம் நிரம்பியதாகப் பட்டது. இனியும் கேள்வி கேட்டு மாறுபட்ட அந்த மனிதரின் பாழ்பட்ட சிந்தனையின் கருத்துக்களை அறிந்து கொள்ள விரும்பாமல் அகன்றார்கள்.

தயாரிப்பாளருக்குத் தர்ம சங்கடமாய் இருந்தது. கஷ்டப்பட்டுக் கொண்டு மௌனம் சாதித்தார்.

படம் ரிலீஸாகி ஓடத்தொடங்கிவிட்டது.

'சே, என்ன கதைடா இது?' என்று கோபத்துடன் சலித்துக் கொண்டவன் கூட

அவர்: அவங்க ரெண்டுபேரும் தேங்காய் உடைக்கிறாங்களே பிள்ளையாருக்கு என்ன விசேஷம்?

இவர்: அதோ அவருடைய முதல் ஜோக் பத்திரிகையில் பிரசுரமாயிருக்காம்.

அவர்: சரி இன்னொருத்தர் எதுக்கு உடைக்கிறார்?

இவர்: அவருடைய முதல் ஜோக் பத்திரிகையில் இரண்டாவது தடவையா பிரசுரமாயிருக்காம்.

ஆர். கோபாலகிருஷ்ணன்



இரண்டாம் முறை பார்க்க மனத்தின் ஓர் ஓரத்தில் விரும்பினான். படம் பார்த்தவர்களின் தவிப்பான அந்தக் கருத்தே படத்துக்குப் பெரிய விளம்பரமாக அமைந்து விட்டதால் எதிர்பார்த்ததற்கு மேலேயே படம் ஓடியது. படம் நூறு நாளைத் தாண்டியது!

பெரிய விழாக்கள் பல இடங்களில் எடுக்கப்பட்டன.

அத்தனையிலும் பிரபாகரனுக்குப் புரட்சி வேந்தன், கலை நிலா, என்று பட்டங்கள் பல வழங்கப்பட்டன.

அனைத்துக்கும் சிகரம் வைத்தாற்போல் முதலமைச்சரே ஒரு விழாவில் பிரபாகரைப் பாராட்டிப் புரட்சி வேந்தன் என்கிற பட்டத்தை வழங்கினார்.

விழா முடிந்தது.

பட்டத்துடன் ஏர்-கண்டிஷன் காரில் வீடு நோக்கிப் புறப்பட்டார் பிரபாகரன். அடுத்த புரட்சிப் படத்தைப் பற்றிய சிந்தனையில் மனம் ஆழ்ந்திருந்தது.

பங்களாவினுள் கார் நுழைந்தது.

பிரபாகரன் விசாலமான ஹாலினுள் நுழைந்தார்.

ஹாலில் போடப்பட்டிருந்த அழகான பல சோபாக்களினூடே ஒரு சோபாவில் அவரது ஆசை மகள் அவருக்காகக் காத்துக் கொண்டிருந்தாள்.

ஆறு மாதங்களுக்கு முன்னால் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவருக்கு வாழ்க்கைப் பட்டு பம்பாய்க்குப் போனவள் இன்றைக்குத் திரும்பி வந்திருக்கிறாள்! அதுவும் முன் அறிவிப்பு ஏதுமின்றி!

எதிர்பாராத நிலையில் மகளைப் பார்த்த போது பிரபாகரனுக்கு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. பிரபாகரனைப் பார்த்த மாத்திரத்தில் எழுந்து வந்து, "படம் பிரமாதம் அப்பா! பம்பாயில் மூணு தடவை பார்த்தேன்" என்றாள்.

"அவர் எங்கம்மா?" — பிரபாகரனின் பார்வை மாப்பிள்ளை எங்கே? என்று கேட்காமல் கேட்டது. அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்டவளாய் "டாடி உங்களுக்கு ஒரு சர்ப்ரைஸ் மாட்டரைச் சொல்லப் போறேன். அதைக் கேட்டா நீங்க ரொம்பவும் என்னை நினைச்சுப் பெருமைப்படுவீங்க. உங்க கற்பனையில உருவான புரட்சிப் பெண்ணைப் போல நானும் இருக்கிறதை நெனைச்சி ஆச்சரியப்படுவீங்க" என்றாள்.

மகளை ஒன்றும் புரியாமல் நோக்கினார் பிரபாகரன்.

"ரெண்டு நாளைக்கு முந்தி அவருக்கும் எனக்கும் ஒரு சின்னச் சண்டை. பேச்சோட பேச்சா ரொம்பக் கோபப்பட்டு 'எனக்கு என் வேலைதான் முதல் மனைவி, ரெண்டாவது தான் நீ'ன்னு சொல்லிட்டார். இதை என்னால எப்படிச் சகிக்க முடியும்? பார்த்தேன். 'உங்க முதல் மனைவிக்கே தாலி கட்டிக் குடும்பம் நடத்துங்க. இந்தாங்க தாலி'ன்னு அவர் என் கழுத்திலே கட்டின தாலியைக் கழற்றி அவர் கிட்டேயே கொடுத்துட்டு வந்துட்டேன்!"

அவள் பேசி முடித்தபோது பிரபாகரனை மயக்கம் கவ்வ ஆரம்பித்திருந்தது.

திரையில் பூத்த மலர்கள்



படத்தின் பெயர் அழகாயிருக்கிறது. ஆனால் படம்? என்னத்தைச் சொல்ல? திரைப் படத்துக்குக் கதை அவசியம் இல்லை என்று தீர்மானித்த பிறகு என்ன செய்வது?

மேஜர் சுந்தரராஜன் விவசாயிகளைக் கொடுமைப்படுத்தும் பண்ணையார். வடிவை வற்புறுத்தி மணந்து கொள்கிறார்.

வடிவைக் காதலித்த ராஜுவாக நடிக்கும் பிரகாஷ் பார்க்க நன்றாக இருக்கிறார். சண்டைக் காட்சிகளில் பரவாயில்லை. நடிப்பு: அடுத்த படத்தில் சோபிக்கிறதா பார்ப்போம்.

வடிவாக நடிக்கும் புது முகம் மஞ்ஜுஷா மிகவும் நன்றாக நடித்திருக்கிறார். பரவாயில்லை. இந்தப் படத்திலேயே ஓரளவு நடித்திருப்பவர் அவர்தான்.

கவுண்ட மணியும் காந்திமதியும் நகைச்சுவையாக நடிப்பதாக நினைத்துக் கொண்டு அசடு வழிகிறார்கள்.

இடைவேளைக்குப் பிறகு கொஞ்சம் விறுவிறுப்பாக இருக்கும் கதை பண்ணையாரின் படுகொலையோடு பட்டென்று முடிந்திருக்க வேண்டும். விடுவார்களா? காதலனின் கையாலாகாத்தனத்தை எடுத்துக் காட்டும் அசட்டுக் கதையாக நீட்டுகிறார்கள்.

"திரையில் பூத்த மலர்" உடனே வாடியும் விட்டது.

-காந்தன்

அவசர நிலைப் பிரகடனம்

கி. கஸ்தூரிரங்கன்

ஜூன் 26, 1975, வியாழக்கிழமை.

டில்லியில் வெளியாகி வரும் ஆறு காலைப் பத்திரிகைகளில் நான்கு வரவில்லை. டைம்ஸ் ஆப் இந்தியா, இந்தியன் எக்ஸ்பிரஸ், முதலான பத்திரிகை அலுவலகங்கள் டில்லியின் ஃப்ளீட் ஸ்ட்ரீட் எனப்படும் பகதூர்ஷா ஜாபர் மார்கில் இருக்கின்றன. முந்தைய இரவு அவற்றுக்கு மின்சார சப்ளை இருக்கவில்லை.

அன்று இப்பத்திரிகைகள் வெளிவரக் கூடாது என்று மின் சப்ளையைத் துண்டித்து விட்டது டில்லியின் மின் இலாகா. இதற்கான உத்தரவு போட்டவர் சஞ்சய் காந்தி!

முதல் நாள் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றில் ஜெயப்பிரகாஷ் நாராயண் முதலான ஆட்சி எதிர்ப்புத் தலைவர்கள் பேசியதை இருட்டடிப்புச் செய்ய இது ஒரு வழியாம். அது தவிர, இரவு ஜே. பி., மொரார்ஜி, வாஜ்பாயி, சரண் சிங் முதலிய எல்லாத் தலைவர்களும் சகட்டு மேனிக்குக் கைது செய்யப்பட்டனர். அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டது.

''நாட்டின் பாதுகாப்புக்குப் பெரிய அபாயம் எழுப்பக்கூடிய உள் நாட்டுக் கலகம் உருவாகியிருப்பதால் அரசியல் சட்டம் 367 ஷரத்துப்படி அவசர நிலைப் பிரகடனம் செய்யப்படுகிறது'' என்று ஜனாதிபதி பக்ருதீன் அலி அகமத் கையெழுத்திட்ட பிரகடனம் வெளியாகியிருந்தது.

அவசர நிலைப் பிரகடனம் செய்யலாம் என்று யோசனை சொல்லித் தந்தவர் வங்காள முதல்வராக இருந்த சித்தார்த்த சங்கர் ராய். இதன் மூலம் தான் எதிர்க் கட்சித் தலைவர்களைக் குற்றப்பத்திரிகை இல்லாமல் உள்ளே தள்ள முடியும். பெரிய அரசியல் தலைவர்களைக் கைது செய்வது பற்றி முதலில் தயக்கம் காண்பித்த இந்திரா காந்தி, சஞ்சய்காந்தியின் வற்புறுத்தலுக்கு இணங்கிச் சம்மதித்தார். அடுத்தபடியாக பத்திரிகைத் தணிக்கையும் அவசியம் என்று கருதப்பட்டது. பிலிப்பைன்ஸ் நாட்டில் வழங்கி வரும் பத்திரிகை தணிக்கை விதிகள் அமெரிக்கத் தூதராலயம் மூலம் சஞ்சய் காந்திக்குக் கிடைத்தது.

நாட்டில் நிலவும் குழப்ப நிலைக்கும் இந்திரா எதிர்ப்புக்கும் எதிர்க் கட்சிகளும் சில பத்திரிகைகளுமே காரணம் என்று சஞ்சய் நம்பினார். ஒரு ஐம்பது தலைவர்களை உள்ளே தள்ளிவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்பது அவர் கருத்து.

ஆனால் மொத்தம் ஒன்றரை லட்சத்துக்கு மேல் அரசியல் தலைவர்கள், தொண்டர்களைக் காவலில் வைக்க வேண்டியிருந்தது. இந்திரா கட்சிக்காரர்களாக இருந்து அவசர நிலைப் பிரகடனத்தை எதிர்த்து வெளியேறிய சந்திரசேகர், மோகன்தாரியா இவர்களையும் கூட ஜெயிலுக்கு அனுப்பினார்கள்.

பத்திரிகைகள் சில வெளிவராமல் தடுத்து விட்டதனால் செய்தி தெரியவராமற் போகவில்லை. ஜெயப்பிரகாஷ் நாராயண் பேச்சும் அவசர நிலைப் பிரகடனமும் தமிழ்நாட்டிலும் ஹிந்துஸ்தான் டைம்ஸ், ஸ்டேட்ஸ்மேன் பத்திரிகைகளிலும் வெளியூர்ப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. பி.டி.ஐ., யு.என்.ஐ. செய்தி ஸ்தாபனங்களின் மூலம் தலைவர்களின் அதிகாலைக் கைது விவரங்கள் நாடு முழுவதும் மட்டுமின்றி உலகெங்கிலும் பறந்தன. காலை 11 மணி அளவில்தான் செய்தித் தணிக்கை அமுலாக்கப்பட்டது. கைதுகள் பற்றிய செய்தி விசேஷ அனுபந்தம் அச்சாகிய தரு

✖ அம்பிகாஸோனி, சஞ்சய்

சஞ்சய்-7





"யாரோடு பேசிக்கிட்டிருக்கீங்க?"
"எங்க ஆபீஸ் பியூன் முனுசாமி பேசுகிறான்! கான்வெண்ட்டில் படிக்கும் அவன் குழந்தைகளுக்கு, புக்ஸ், நோட் புக்ஸ், பீஸ், ஸ்பெஷல் பீஸ், ஸ்கூல்டே பீஸ், யூனிபாரம் செலவுக்காக ரூ 3500 கைமாற்று வேணுமாம். அடுத்த மாதம் திருப்பித் தாரானாம்..."

ணத்தில் வந்ததால் பெரும்பான்மை பத்திரிகைகள் அதைப் பிரசுரிக்க முடியவில்லை. ஆனால் டில்லியில் ஜனசங் பத்திரிகை 'மதர்லாண்ட்' கொட்டை எழுத்துக்களில் கைதுகளைப் பிரகடனம் செய்தது. அன்று மாலையே அதன் அலுவலகத்தைப் போலீஸ் ஆக்ரமித்து, பத்திரிகைக்கு 'ஸீல்' வைத்தனர். கெடுபிடி, அச்சுறுத்தல் இரண்டையும் சஞ்சய் அவசர நிலையின் ஆயுதங்களாகப் பயன்படுத்தினார்.

அம்மாவை எதிர்த்தவர்களை அடக்குவது மட்டும் அவரது நோக்கமில்லை. கெடுபிடி மூலம் நாட்டின் வளர்ச்சியையும் துரிதப் படுத்த முடியும் என்று செயல்பட்டார்.

"பேச்சைக் குறை, செயலில் முனை" என்று அவர் கட்டளை பிறப்பித்ததோடு தானே முன்னோடியாக நின்று செயலில் முனைந்தார்.

இச் செயலின் விளைவுகளைப் பற்றியோ அதன் நீதி அநீதிகளைப் பற்றியோ அவர் சற்றும் சிந்திக்கவில்லை. அரசுக் காரியாலயங்களில் பைல்கள் வேகமாக நகர்ந்தன. களேபரமாக இருந்த தெருக்கள் துப்புரவாயின. பத்திரிகைகள் பொறுப்பான, ஆக்கபூர்வமான செய்திகளையே பிரசுரிக்கலாயின.

சஞ்சய் காந்தி நான்கு அம்சத் திட்டம் ஒன்றை உருவாக்கினார். குடும்பக் கட்டுப்பாடு, செடி நடல், வரதட்சிணை ஒழிப்பு, எழுத்தறிவு பரப்புவது முதலிய உன்னதக் கோட்பாடுகளைச் சஞ்சய் செயலாக்க முனைந்தார். இந்த நான்கு அம்சத் திட்டம் இந்திரா காந்தியின் 20 அம்சத் திட்டத்துடன் இணைக்கப்பட்டு அரசுத் திட்டங்களாகவே அறிவிக்கப்பட்டன. யாரோ ஒரு குயுக்திக்காரர் ஜனங்கள் 'ஃபோர் ட்வெண்டி' (4-20) திட்டம் என்று அழைத்தால் நன்றாக இருக்காதே என்று ஐயம் எழுப்பினார். இந்திய பீனல் கோடில் 420ம் ஷரத்து ஏமாற்றுக் குற்றத்தைக் குறிக்கும். சஞ்சய் காந்தி 'சாதி ஒழிப்பை' ஐந்தாவது திட்டமாக ஏற்றுக்கொள்ள 4-20 திட்டம் 25 அம்சத் திட்டமாக உருப்பெற்றது.

கடும் புயல் திடீரென்று ஓய்ந்தது போல் நாடெங்கிலும் அமைதி நிலவியது. அதிகாரிகள் சுறுசுறுப்பாக 25 அம்சத் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கினர்கள். விலைகள் சரிந்தன. பதுக்கல், கடத்தல்காரர்கள் வசதியான சிறைகளுக்கு அனுப்பப்பட்டனர். தொழில் அதிபர்கள் அவசரநிலைப் பிரகடனத்தை உள்ளூற வரவேற்று உற்பத்தியிலும் லாபம் காண்பதிலும் கவனம் செலுத்தினார்கள். பெரும்பான்மையான பத்திரிகைகள் கண்டனங்களை நிறுத்திக் கொண்டன. லட்சக்கணக்கில் விற்ற பத்திரிகைகள் ஒரு படி மேலே போய் ஜால்ராக்களாக மாறின. "தலை வணங்கு என்றுதான் சொன்னார்கள். பத்திரிகை ஆசிரியர்கள் சாஷ்டாங்கமாக நமஸ்காரமே செய்தார்கள்" என்று ஜனதா மந்திரி அத்வானி பின்னர் குறிப்பிட்டார்.

சஞ்சய் காந்திக்கும் இந்திராவுக்கும் பெரிய நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டன. "நமது நாட்டுக்கு இதுதான் சரி. பிற்காலத்தில் ஜனங்கள் நாம் எத்தனை தேர்தல்கள் நடத்தினோம் என்று கணக்கெடுக்கப் போவதில்லை. என்ன சாதித்தோம் என்பதைத்தான் பேசுவார்கள்" என்றார் சஞ்சய்.

இந்திரா காந்திக்கு மட்டும் உள்ளூரப் பதைப்பு இருந்தது. அரசியல் தலைவர்களைக் கைதும் பத்திரிகைத் தணிக்கையும் இந்தியா ஜனநாயக நாடாக இருந்ததா என்ற ஐயத்தை எழுப்பின. மேற்கத்திய அயல் நாட்டுப் பத்திரிகைகள் காரசாரமாக இந்திராவைத் தாக்கி எழுதின.

"அவசர நிலை தற்காலிக நடவடிக்கையே. எதிர்க் கட்சிகள் ஜனநாயகத்தைத் தண்டவாளத்திலிருந்து இறக்கி விட்டன. அதை மீண்டும் சரியான பாதையில் ஏற்ற அவசர நிலைப் பிரகடனம்" என்று இந்திரா சப்பைக் கட்டிப் பேசினார்.

அவசர நிலைச் சட்டங்களின் கீழ் கைது செய்தவர்கள் கோர்ட்டுக்குப் போக முடியாது; தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்யக் கூடாது. எல்லோரும் அதிகாரத்துக்கு மறு பேச்சின்றிக் கட்டுப்பட்டாக வேண்டும் என்று ஏற்பட்டது.

இதிலிருந்துதான் அதிகார துஷ்பிரயோகங்கள் ஆரம்பித்தன. இதற்கு சஞ்சயே வழிகாட்டியாக விளங்கினர்.

அவசரநிலைத் திட்டங்கள் அமுலாக்கும் பொறுப்பை முழுக்க முழுக்க அவரே ஏற்றுக் கொண்டார். அவருக்கு உதவியாக பிரதமரின் காரியதரிசி தவான், பன்ஸிலால், முதலானோர் ஏற்பட்டனர். மந்திரி சபையில் சீனியர் மந்திரிகள் மூலையில் தள்ளப்பட்டனர். ஜகஜீவன்ராம், சவான், சுப்ரமணியம், பிரும்மானந்த ரெட்டி முதலானோர் மனசுக்குள்ளே புழுங்கி ஒதுங்கி இருக்க, புதிதாக நியமனம் செய்யப்பட்ட ஜூனியர் மந்திரிகள் சஞ்சயின் தர்பாருக்குக் கட்டுப்பட்டு ஆணைகளை நிறைவேற்றினர். உள்துறை மந்திரி சபை ராஜ்ய மந்திரி ஓம் மேத்தாவின் பிடிக்குள் வந்தது. சுப்ரமணியத்தின் கீழே இருந்த பிரணப் முகர்ஜி முக்கியமான நிதி இலாகா விவகாரங்களுக்குப் பொறுப்பேற்றார். தகவல் செய்தி மந்திரியாக இருந்த இந்தர் குஜ்ரால் பத்திரிகை தணிக்கை குறித்து ஆட்சேபித்தார். அவர் பதவி இழந்து, அவருக்குப் பதிலாக வி. சி. சுக்லா நியமனம் பெற்றார்.

இவர்கள் அடங்கிய 'உள் வட்டம்' சஞ்சய் தலைமையில் கூடி தினம் தினம் முடிவெடுத்தது. யாரைக் கைது செய்ய வேண்டும், எந்த அயல் நாட்டுப் பத்திரிகை நிருபரை வெளியேற்ற வேண்டும், மாநில முதல்வர்களுக்கு

எந்த விதமான ஆணை போக வேண்டும் என்றெல்லாம் முடிவு செய்யப்பட்டன.

டில்லி, ஹரியானாவில் செயல் திட்டங்கள் சஞ்சயின் நேர் கண்காணிப்பில் வந்தன. போலீஸ் அதிகாரிகள் மாற்றப்பட்டு பிந்தர் போன்ற குலாபிகள் பதவி உயர்வுடன் பொறுப்பேற்றனர்.

இந்திரா காந்தி அவ்வப்போது அவசர நிலை நடவடிக்கைகளுக்கு விளக்கமும் மன்னிப்பும் தந்துகொண்டு பொறுப்புகள் அனைத்தையும் சஞ்சயிடமே விட்டுவிட்டார். கட்சி மற்றும் ஆட்சி நடைமுறைகள் மீது அவரை ஆலோசனை கேட்டு வந்தவர்களை 'சஞ்சயைப் போய்ப் பாருங்கள்' என்று அனுப்பி வைத்தார்.

விரைவிலேயே சஞ்சய்தான் ஆட்சி பீடத்தின் அடித்தளம் என்ற செய்தி எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது. சஞ்சயின் செல்வாக்கு வேகமாக உயர்ந்தது. 'இன்றைய இளவரசர் எதிர்கால மன்னர்' என்ற அளவில் அவரது கீர்த்தி உலகெங்கிலும் பரவ ஆரம்பித்தது.

உள்நாட்டில் மாநிலங்களுக்கும் அடிக்கடி விஜயம் செய்தார். அதிகார பூர்வமான ஒரு பதவியிலும் அவர் இல்லை. என்றாலும் அவருக்கு என்று விமானப் படை விமானம் ஒதுக்கப்பட்டது. மாநில முதல்வர்கள் ரத்தினக் கம்பளம் விரித்து, தோரணங்கள் கட்டி, கூட்டங்கள் சேர்த்து 'ஜயவிஜயீபவ' என்று கோஷங்கள் எழுப்பி வந்தனர். அவ்வாறு செய்யாதவர்கள் பிரதமரின் கோபத்துக்குள்ளாகி அவதிப்பட்டனர்.

சஞ்சய் ஒரு மந்திரியாகவே நியமனம் பெற்றிருக்கலாம். ஆனால் அதை விரும்பவில்லை. அவசரநிலை அதிகாரங்களைப் பயன்படுத்தி அவரது மாருதி கார் முயற்சியை வெற்றிகரமாக்கிவிட முனைந்தார். இதற்கு மந்திரிப் பொறுப்புத் தடையாக இருக்கும் என்று நினைத்தார். ஆனால் இந்திராவே அவருக்குக் கட்சியில் ஏதாவது அந்தஸ்து இருக்க வேண்டும் என்று இளைஞர் காங்கிரஸ் கட்சியின் செயற்குழு உறுப்பினராக்கினார்.

உண்மையில் இளைஞர் காங்கிரஸ் மட்டுமின்றிக் கட்சிப் பொறுப்பு முழுதுமே சஞ்சயின் கைக்கு மாறியது.

இரண்டு அமைப்புக்களின் அக்ராசனராக இருந்த அம்பிகா சோனியும், தேவ்காந்த் பருவாவும் சஞ்சயின் அடியாட்களாகச்செயல்பட்டனர் என்றால் மற்றவர்களைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை.

பின்னர் கௌஹாத்தியில் கூடிய காங்கிரஸ் மகாசபையில் சஞ்சயே எதிர்காலத் தலைவர் என்று பகிரங்கமாக அறிமுகப்படுத்தப்பட்டார்.

''இளைஞர் காங்கிரஸே இனிக் கட்சித் திட்டங்களைச் செயலாக்கும். முதிய காங்கிரஸ் தலைவர்களின் சகாப்தம் முடிந்து விட்டது'' என்று சஞ்சய் பேசினார்.

அவசர நிலைக்குப் பிறகு இரண்டே மாதங்களில் சஞ்சய் வரலாறு காணாத ஏற்ற நிலையில் வைக்கப்பட்டார். 28 வயது. இந்த இளம் வயதில் இத்தனை அதிகாரம், செல்வாக்கு வேறு யாருக்கும் கிட்டியிருக்குமா என்பது சந்தேகம். ஆனால் தகுதிக்கு மீறிய ஏற்றமும்சஞ்சயின் முதிர்ச்சியின்மையும் விரைவிலேயே அதன் விளைவுகளைக் காண்பித்தன.

(தொடரும்)

அவளின் தோல்வி!

முல்லைமலரை நகையால் வென்றாள்
முழுமதியதனை முகத்தால் வென்றாள்
வில்லை புருவம் அதனால்வென்றாள்
விளக்கும் சுடரை நுதலால் வென்றாள்

கோவைக்கனியை இதழால் வென்றாள்
குதிக்கும் மானை விழியால் வென்றாள்
பூவை தனதுமென்மையில் வென்றாள்
புலவனைத் தன்சொல் வன்மையில் வென்றாள்

குயிலைக் கொண்டகுரலால் வென்றாள்
கொடியைக் கோல இடையால் வென்றாள்
மயிலை அழகுக்கூத்தால் வென்றாள்
மழையாம் முகிலை குழலால் வென்றாள்

ஒதும் அமுதை உணவால் வென்றாள்
ஒவ்வொன்றினிலும் ஓங்கியே நின்றாள்
காதலன் வந்தான்; கனியவள் தோற்றாள்
கண்டஅத் தோல்வியில் களிப்பதை ஏற்றாள்.

- இளங்கம்பன்





சிகரெட் புகைத்தல் உடல் நலத்திற்குத் தீங்கானது

STATUTORY WARNING

CIGARETTE SMOKING IS INJURIOUS TO HEALTH

1 ரூபாய்க்கு 10*

CASVS-238-182 TAM

பிரதான விற்பனையாளர்: வி, எஸ். தண்டபாணி, சென்னை

பெங்களூரில் ஒரு ஹோட்டலில் தயாரிக்கப்படும் தோசையின் பெயர்:

"சூப்பர் சானிக் ப்ளெய்ன் தோசை"



ஓட்டலில் ஒருவர் கோபமாகக் கத்திக் கொண்டிருக்கிறார்:

''என்னய்யா இது?... அநியாயமா இருக்கே... கை கழுவ மறந்து போச்சேன்னு தோசையை வெச்சிட்டுப்போய், திரும்ப வந்தா காணோம்!... அதுக்குள்ளே எவனோ 'ஹைஜாக்' பண்ணிட்டுப் போயிட்டானே!...''



வந்தவர் (கோபமாக): ''என்னப்பா சர்வர்! விளையாடுறியா?.. தோசை கேட்டா, பாத்திரம் நிறைய சாம்பார் கொணர்ந்து வைக்கறியே...''

சர்வர்: ''நல்லா, உள்ளே பாருங்க சார்!... இருக்கு! இது ''ஏர்போர்ட் 80'' ஸ்பெஷல்!''



சர்வர்: ''சார்! வேற தோசைக்கு ஆர்டர் பண்ணட்டுமா?...''

வந்தவர்: ''ஏன்? நான் கேட்ட 'சூப்பர் சானிக் ப்ளெய்ன்' தோசை என்னாச்சு?...''

சர்வர்: ''வர்ற வழியிலே தட்டோட விழுந்து 'கிரேஷ்' ஆயிடுச்சு சார்!''



ஒருவர்: ''ஏன்சார் உங்க வியாபாரம் 'டல்'லா இருந்திச்சு... ''சூப்பர் சானிக் ப்ளெய்ன்' தோசை போட்டதிலிருந்து நல்லா ஓடிட்டு இருக்குதே!''

ஓட்டல் முதலாளி: ''உண்மைதான்!... ஆனா, இப்போ எதிர்த்த ஓட்டல்காரன் 'கன்கார்ட்' ஸ்பெஷல்னு போட ஆரம்பிச்சுட்டானே!''



ஓட்டல் சமையல் அறையிலிருந்து ஓர் அறிவிப்பு:

''ஐந்து நிமிடங்களுக்கு முன்பாகவே, டேபிள் நம்பர், எட்டுக்கு வந்து சேரவேண்டிய 'சூப்பர் சானிக் ப்ளெய்ன்' தோசை, எதிர்பாராத காரணத்தால் 'காஸ் சிலிண்டரில்' ஏற்பட்ட கோளாறின் காரணமாக, இன்னும் பதினைந்து நிமிடங்கள் தாமதமாக வந்து சேரும் என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கிறோம்...''



வந்தவர்: ''ஏம்பா, உங்க ஹோட்டலில் இப்போ புதுசா வேற ஏதாவது இட்டம் போட ஆரம்பிக்க இருக்கீங்களா?...''

சர்வர்: ''ஏன் சார்?''

வந்தவர்: ''இன்னும் ஏதாவது புதுசாப் போட்டா, அதை வெக்க நாலு ஜனுக்குகள் பக் இரிசைக்கு அனுப்பலாம்னு பார்த்தேன்!....''

—ச. ரமேஷ் குமார்...



பாலு வீட்டில் உணவு பிடிக்காமல்....
இரண்டு நாளாச்சு, டைகர் என்ன கஷ்டப்படுதோ..
ஆ! ஐடியா!
பாலு ஒரு நாளிதழ் காரியாலயம் சென்று....
ஸார்! இந்த விளம்பரத்தைத் தயவு செய்து போடுங்க.
007 பாலு
கதை: குமரன் சித்திரம்: விஜு
5
நாளைக்கு அந்த விளம்பரம் பிரசுரமாகும். ஆனா அந்த நடிப்பசங்க விளம்பரத்தைப் பார்க்கிறான்களோ இல்லையோ! எதுக்கும் அந்த இன்னொரு ஐடியாவையும் செயல் படுத்தலாம்....
சற்று நேரத்தில்...
இன்ஸ்பெக்டர் ஸார்! நினைவிருக்கா என்னை?
அடே! பாலு! ரயில்லேருந்து விழுந்து செத்தவன் ஒரு பிக்பாக்கெட் பேர் வழின்னு புகார் கொடுத்தியே நீதானே? ..தவறான குற்றச்சாட்டு..
ஆமாம் ஸார்! ஏமாந்துட்டேன். இறந்தவன் வீட்டிலே போய் மன்னிப்பு கேட்க விரும்பறேன். விலாசம் தர முடியுமா?
குட்! ராம்குமார் விலாசம்தானே? தரேன்!



குறிப்பிட்ட விலாசத்தில்..
அம்மா! உங்க மகன் இறந்ததற்கு ரொம்ப வருத்தப் படறேன்.... அது சரி, ராம் குமார் எங்கே வேலை செய்துக் கிட்டிருந்தார்?
ஆவடி ஹெவி வெஹிகிள் ஃபாக்டரி, ரிசர்ச் டிபார்ட்மெண்ட்
தாங்க்ஸ்!
ஆவடி ஹெவி வெஹிகிள் ஃபாக்டரி! அங்கேதானே ராணுவ வாகனங்கள், விஜயந்தா டாங்குகள் எல்லாம் தயாராகின்றன! .. சிக்கல் இறுகுகிறது...
ஹெவி வெஹிகிள் தொழிலகத்தில் நீல் விடுகிறான் பாலு....
RECEPTION
எனக்கு ஜி.எம்மைப் பார்க்கணுமே... ராம் குமாரின் உறவினன் நான்.
விபத்திலே இறந்த ஓர் ஊழியனின் உறவினன் என்பதால் அனுதாபத்துடன் பாலுவை உடனே சந்திக்கச் சம்மதிக்கிறார் ஜெனரல் மானேஜர்.
ராம் குமாரோட அம்மா என்னை அனுப்பினாங்க. அவர் மேஜையில் அவரோட சொந்த உடைமைகள் ஏதாவது இருந்தா பார்த்து எடுத்துக் கிட்டு வரச் சொன்னாங்க.
ஓ.கே. வா போய்ப் பார்க்கலாம்.
ராம்குமார் பணியாற்றிய இலாக்காவுக்குப் போகும் வழியில்....
இதெல்லாம் சக்திமான் வாகனங்கள். அடுத்த கட்டிடத்தில் டாங்குகள் உருவாகின்றன. ரகசியமான அம்சங்களை உள்ளடக்கிய புதிய மாடல்கள்!
இந்த வாண்டுப் பயலைப் பற்றி பசவப்பா என்னிடம் சொல்லியிருக்கான்! ஃபோன் பண்ணி பசவப்பாவை எச்சரித்து விடலாம்.
அப்படித்தான் இருக்கும்னு நினைச்சேன்!
தொடரும்

✖ ஆர். கே. லிங்கேசன், எம். கே. புதூர்

கே. சின்ன அண்ணாமலை உங்களுக்குத் தோஸ்தாமே!

ப: அவரது சங்கப் பலகை சர்க்குலேடிங் லைப்ரரியில் (தமிழ் நாட்டின் முதல் சர்க்குலேட்டிங் லைப்ரரி அதுவாகத்தான் இருக்கும்.) நிறைய சிறந்த புத்தகங்களை வாங்கிப் படித்திருக்கிறேன். லைப்ரரியின் வாசலில் ஒரு பலகையில் சுவையான வாசகங்களை எழுதி வைப்பார். அதைப் படித்து மகிழ்ந்திருக்கிறேன். 'கண்டறியாதன கண்டேன்' போன்ற அவரது கட்டுரைகளைப் படித்து ரசித்திருக்கிறேன். சிறப்பாக நகைச்சுவையுடன் பேசும் அவரது சொற்பொழிவுகளைக் கேட்டுப் பலன் அடைந்திருக்கிறேன். இப்படிப் பலவிதத்தில் எனக்கு மறைமுகமாக உதவி செய்த அவர் எனக்கு தோஸ்துதான். சின்ன அண்ணாமலையின் திறமைகளைச் சரியான முறையில் தமிழக அரசியல்வாதிகளோ இலக்கியவாதிகளோ பயன்படுத்திக் கொள்ளவில்லை.

✖ ஜி. கோபு, தாம்பரம்

கே. நடை புதுமை செய்யும் இரண்டு பெண்மணி எழுத்தாளர்கள் சிவசங்கரியும் இந்துமதியும் என்று தானே ஒரு பதிலில் மறைமுகமாகக் குறிப்பிட்டீர்கள்?

ப: பெயரைக் குறிப்பிடாமல் மறைமுகமாகச் சொன்னதிலிருந்து அந்தப் ''பெண்மணி''கள் இவர்கள் இல்லை என்று தெளிவாகவில்லையா?

✖ எஸ். சுஜாதா, பென்னுகரம்

கே. நடிகர் சிவகுமாரின் விலாசம் என்ன? 15 வயது சிறுமியின் ஆவலை நிறைவேற்றுவீரா? நம்பிக்கையுடன் பதிலை எதிர்பார்க்கிறேன். நன்றி நன்றி. நன்றி. நன்றி. நன்றி. நன்றி. நன்றி.

ப: சிவகுமாரின் விலாசம் எனக்குத் தெரியும். இருந்தாலும் தெரியப்படுத்த மாட்டேன். (மாட்டேன், எட்டுத் தடவை) தெரிந்துகொள்ளப் பல விஷயங்கள் உள்ளன. அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டிய வயதில் இந்த மாதிரி சமாசாரங்களில் மனத்தை அலைய விடாதே, குழந்தாய்!

✖ வி. இளங்கோ, எருமபாளயம்

கே. ஒரு மனிதனால் தவறு செய்யாமல் வாழ முடியுமா?

ப: பதில், உங்கள் கேள்வியிலேயே இருக்கிறது!

✖ ஏ. கே. மோகனசுந்தரம், ஈரோடு-1

கே. புத்தகங்களைப் படிக்கும்போது புதுப்புது கற்பனை வருகிறது. எழுத உட்கார்ந்தால் ஒன்றுமே தோன்றுவதில்லையே?

ப: 'புதுப் புதுக் கற்பனை வருகிறது' என்பதே உங்களுக்குத் தோன்றும் கற்பனையாக இருக்கும்!

✖ சுதா மணிமேகலை, வேலூர்

கே. மருதமலையை ஏழாவது படைவீடு என்று கவிஞராக பாடியுள்ளார்; அவரே லண்டன் முருகன் கோவிலை ஏழாவது படைவீடு என்று பாடியுள்ளாரே?

ப: 'இதுதான் உலகத்து எட்டாவது அதிசயம்' என்று எத்தனை சமயம் எத்தனை விஷயங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறோம். உண்மையில் அது எட்டாவது அதிசயமா? சும்மா ஒரு முக்கியத்துவம் கொடுக்க அப்படிக் கூறுகிறோம். அதுமாதிரிதான் ஏழாவது படை வீடும்!

✖ எம். ராஜேந்திரன், லால்குடி

கே. ஒலிம்பிக் போட்டிகளில் உங்களுக்குப் பிடித்த விளையாட்டு எது?

ப: ஜிம்னாஸ்டிக்ஸ். ருமேனியா சிறுமி நாடியா கொமனேசியும், ரஷ்ய நெல்லி கிம்மும் மான்ட்ரீயல் ஒலிம்பிக்கில் செய்த வித்தைகளைப் பார்த்த பிறகு வேறு எந்த விளையாட்டும் உங்களைக் கவராது. இந்தத் தடவை நாடியா 18 வயது அழகியாக ஆகியிருப்பதால், வித்தைகளில் மேலும் கவர்ச்சி கூடியிருக்கிறது.

✖ கெ. முருகவேள், செங்கவல்லி


கே. எருமை ஜோக் ஒன்று சொல்லுங்களேன்.


ப: நீங்கள் பரிசு தரப் போவதில்லை. இருந்தாலும் சொல்கிறேன். முதல் எருமை: ஏன் யமனின் வாகனமாக இருந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டாய்? இரண்டாவது: பின்னே அந்த ஆள் பொணம் கனமில்லே கனக்கிறது!

பரிசு பெறுபவர் :

ஏ. கே. மோகனசுந்தரம்
24, அகில் மேடு தெரு
ஈரோடு-1

கடுகு பதில்கள் கடுகு பதில்கள் கடுகு பதில்கள் கடுகு பதில்







பிரச்னைகள் இல்லாத மனிதர்!

- பகவத்சிங் அன்பரசு -

அதிகாலை விடிய விடிய ஆறு மணிக்கு ராமசாமி படுக்கையிலிருந்து கண் விழித்தார்.

மேசையைத் துடைத்துச் சுத்தம் செய்து விட்டு மாணவர்களின் விடைத் தாள் கட்டு களைத் திருத்துவதற்குத் தயாராக எடுத்து வைத்தார்.

பின்பு பல் துலக்கி முகம் கழுவிக்கொண்டு வந்து சுறுசுறுப்பாகப் பேப்பர்களைத் திருத்தத் தொடங்கினார்.

அவரது மனைவி வழக்கம்போல் காப்பி கொண்டு வந்து மேசையில் வைத்துவிட்டு, ''சதா ஸ்கூல் வேலையே செய்துண்டிருங்கோ'' என்று சிணுங்கினாள்.

அவர் அவள் பேசியதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் காப்பியைக் குடித்துவிட்டுச் சில பேப்பர்களைத் திருத்தி முடித்தார். பிறகு காலைக் கடன் முடிக்க எழுந்தார்.

அப்போது பத்தாம் வகுப்பில் படிக்கும் அவரது பையன் முரளி ''அப்பா... டிகிரீஸ் ஆஃப் கம்பேர்ஷன் புரிய மாட்டேங்கறது! கொஞ்சம் சொல்லித் தாங்கப்பா'' என்று நோட்டும் பேனாவுமாக நின்றான்.

அவர் ''ஏண்டா, வகுப்பிலே கவனமாகக் கேட்டுக்கப் படாதோ?'' என்றவாறு குளியலறை நோக்கிச் சென்றார்.

சிறிது நேரத்தில் திரும்பி வந்து மகனிடம் நோட்டை வாங்கி அவனது சந்தேகத்தை நிவர்த்தி செய்துவிட்டு, ''கீழ் வகுப்பிலே டீச்சர்ஸ் சரியா நடத்துறதில்லை. பையன்கள் ஃபண்டமெண்டல் இல்லாம மேல் வகுப்புக்கு வந்துடறாங்க. நாங்க கஷ்டப்பட்டுண்டு கிடந்து அழ வேண்டியிருக்கு'' என்று நொந்து கொண்டவாறு போய் மீண்டும் பேப்பர் திருத்த உட்கார்ந்தார்.

அடுத்து ப்ளஸ் டூ படிக்கும் அவரது மகள் சீதா அவரருகே சென்று''அப்பா கிராமரைக் கொஞ்சம் கொஞ்சமாய் நடத்திண்டு வாங்கப்பா... கஷ்டமா இருக்கிறது'' என்று குழைந்தாள்.

அவர் மகளின் விருப்பத்தை மறுக்காமல் திருத்துவதை நிறுத்திவிட்டு மலர்ந்த முகத்துடன் அவளுக்குச் சில பகுதிகளை நடத்தினார்.

அதன் பின் குளித்து உடை மாற்றித் தலை வாரிக்கொண்டு சாமிக்குப் பூஜை பண்ணி விட்டு வந்து பேப்பர் திருத்தி முடித்தார்.



அவருக்கு ஒரு வேலை முடிந்தது என்று சிறிது ஆசுவாசமாக இருந்தது.

அச்சமயம் ஒரு விநாடி நேற்றைய வகுப்பில் இன்று ''கணக்கு டெஸ்ட்'' என்று தான் அறிவித்திருந்தது நினைவுக்கு வரவே அவர் உடனே வினாத்தாள் தயாரிப்பதில் முனைந்தார்.

அப்போது அவரது மனைவி அறைக்குள் வந்து காலி டம்ளரை எடுத்துக்கொண்டு ''என்ன ஏதுன்னு கேட்கிறதில்லே... மார்க்கெட்டுக்குப் போறதில்லே... எல்லாம் நானே செய்துண்டு நிக்கணும்....'' என்று முணுமுணுத்தாள்.

அவர் அவளைச் சட்டை பண்ணாமல் வேலைகளை முடித்து விட்டுச் சாப்பிட உட்கார்ந்தார். அந்நேரத்தில் இரண்டு மாணவர்கள் அவரைப் பார்க்க வந்தனர்.

அவர் சாப்பிடாமல் உடனே எழுந்துபோய் அவர்களை உள்ளே அழைத்து விசாரித்தார்.

அவர்களுக்குக் கணக்குகளை நோட்டில் போட்டுக் காண்பித்துத் தெளிவாக விளங்க வைத்தார்.

பிறகு அந்த இருவரும் அவரிடம் விடை பெறும் தருவாயில், ''சார் கணக்குக்கு மட்டும் டியூஷன் படிக்க வர்றோம் சார்'' என்று வேண்டினர்.

''எப்ப வேணும்னாலும் வந்து சந்தேகம் கேட்டுண்டு போங்கோ... தாராளமா சொல்லிக் கொடுக்கிறேன். நேக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்க நேரம் கிடைக்கிறதில்லே... அதோடு டியூஷன் வைக்கிறதும் நேக்குப் பிடிக்கிறதில்லே'' என்றார் முடிவாக.

அவரைப் புரிந்து கொண்டிருந்த அவர்கள் மேலும் அவரை வற்புறுத்தாமல் விடை பெற்றுக் கிளம்பினர்.

எவ்வளவுதான் முயற்சி செய்தாலும் தாமதமாகிவிடுவதை நினைத்துத் தம்மை நொந்து கொண்டு மனத்தில் சஞ்சலப் பட்டுக் கொண்டு பள்ளிக்குக் கிளம்பினார்.

ராமசாமி பள்ளிக்கூடத்துக்குள் நுழைய மணி பத்தே கால் ஆகிவிட்டது.

தலைமை ஆசிரியர் அறைக்குச் சென்று மனத்தில் குறுகுறுப்புடன் ஆஜர் ரெஜிஸ்தரில் கையொப்பமிட்டுத் திரும்பினார்.

அதற்குள் அவரை ''சார் ஒரு நிமிஷம்'' என்று தலைமை ஆசிரியர் நிறுத்தினார்.

ராமசாமி ''கிளாஸை முடிச்சுண்டு வந்துடறேன்'' என்றார்.

''அதனாலே பரவாயில்லே... உட்காருங்கள் ஸார்'' என்றார் தலைமை ஆசிரியர்.

ராமசாமி உட்கார்ந்தார்.

தலைமை ஆசிரியர் பேச ஆரம்பித்தார்.

''சார், நீங்க அடிக்கடி லேட்டா வந்துக்கிட்டிருக்கீங்க.... நானும் சொல்லி அலுத்துப் போயிட்டேன். வீட்டிலே எனக்கு இல்லாத வேலை உங்களுக்கு என்னதான் இருக்கோ எனக்கு ஆச்சரியமாயிருக்கு.. என்னைப் பாருங்க... நான் காலையிலே எழுந்ததும் தோட்டத்துக்குப் போய்த் திரும்பறேன்.... தோட்ட வேலைக்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து முடிக்கிறேன். குளிச்சு, சாப்பிட்டு மார்க்கெட்டுக்குப் போய் வர்றேன்... பெண்ணோட வீட்டுக்குப் போய் பேசிட்டு வரேன். பையன் கடைக்குப் போய்ப் பார்த்துட்டு வரேன்.. நேரம் போக மாட்டேங்குது. உங்களுக்கு என்னை மாதிரிப் பிரச்னைகள் இல்லே. ஆனா பொழுது கிடைக்க மாட்டேங்குது. ஆச்சரியம்தான்'' என்றார்.

மேலும் அவர் தொடர்ந்து அருகில் இருக்கும் ஆசிரியர்களைச் சுட்டிக் காட்டி, ''இவங்களை மாதிரி நீங்க லீஷர் டயத்திலே என் வேலையில உதவி செய்யறதும் இல்லே... பசங்க பேப்பரைத் திருத்திக்கிட்டு .. எதையாச்சும் எழுதிக்கிட்டு நழுவிப்போயிடுறீங்க.. இனிமே நீங்க இப்படி இருந்தா நான் உங்களுக்கு அதிகச் சலுகை கொடுக்கிறேன்னு எல்லோரும் என்னைத் தப்பா நினைக்க ஆரம்பிச்சுடுவாங்க. அது எனக்குத் தொல்லையாப் போயிடும். அதனாலே நீங்க அட்ஜெஸ்ட் பண்ணி நடந்துக்கிறது நல்லது'' என்று சொல்லி முடித்தார்.

''சார் லேட்டா வர்றது தப்பு தான். நேக்குப் புரியறது. நாளையிலேர்ந்து டயத்துக்கு வந்துடறேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்தார்.

தலைமை ஆசிரியர் கடைசியாகச் சிறிது அதிகார தோரணையில் ''ம்... சரி... இனிமே என்னை மாதிரி உங்களை மாத்திக்கிங்க சார்'' என்று குரல் கொடுத்தார்.

ராமசாமி சிறிது அதிர்ந்தவராகத் தலையாட்டிவிட்டு வெளியே வந்தார். ''இவாளை மாதிரி எதிலே மாத்திக்கிறது?'' என்று ஏளனப் புன்னகை உதிர்த்தவாறு வகுப்பறை நோக்கி விரைவாக நடந்தார் அவர்.

இது எப்படி!

நண்பர்களோடு ஜாலியாகச் சீட்டாடிக் கொண்டிருந்த ஒரு இளைஞர் திடீரென்று, ''அய்யய்யோ, நாளைக்கு எ. இ. ஆபீஸ் மானேஜரின் பொண்ணுக்கு பேங்க் ஹாலில் கல்யாணம்! மறந்தே போய் விட்டேன்'' என்று கூவி விட்டார்.

அருகிலிருந்த நண்பர், ''அதனால் என்ன, ஒரு வாழ்த்துத் தந்தி கொடுத்தால் போச்சு'' என்றார்.


''அதெப்படி? நான் தானே மாப்பிள்ளை!'' என்றார் இளைஞர் பரிதாபமாக!

இரா. கந்தையா

''கலந்துரையாடல் என்பது கருத்துப் பரிமாற்றம்; விவாதம் என்பது அறியாமைப் பரிமாற்றம்!''


—ராபர்ட் க்விலன்

—சம்பத் குமாரி


கரோனாவின் நீடித்துழைக்கும் வார்ப்புகள்
Corona
VIJAY
8
விஜய் ரப்பர் ஸ்லிப்பர்கள்
விஜய்
விஜய் சுந்தர்
விஜய் ஆராம்
தயாரிப்பாளர்கள்:
கரோனா ஸாஹு கம். லிட்.
221, தாதாபாய் நவ்ரோஜி ரோடு,
பம்பாய் 400 001
கரோனாவின் கவனம்.
CHAITRA-CS-211 TAM

எக்ஸ்பிரஸ் பஸ்களில் பெண் கண்டக்டர்கள் நியமிக்கப்படுவார்கள் —

-செய்தி-




"ஏண்டா, பெண் கண்டக்டரைப் போடறாங்க?"

"ஆளுக்கு நாலு டிக்கட் வாங்குவாங்க!"



"டிக்கட்தானே?... சும்மா எச்சில் பண்ணிக் குடுங்க!"



"ஜாலியா வாக் போயிட்டு வரலாம்!"

"வேண்டாம்! ஜாலியா எக்ஸ்பிரஸ் பஸ்லேபோயிட்டு வரலாம்!"



"ஸார்!..டிரான்ஸிஸ்டரை முதல்லே நிறுத்துங்க!"



"பாடி நல்லாயிருக்குல்லே!"


"ஷ்... ஷ்... மெதுவாகப் பேசுங்க, ஸார்!"

"நான் பஸ் 'பாடி'யைச் சொல்றேன்!"



" 'ஸ்டெல்லா மேரி'ன்னு என் பெயரைச்சொல்லி 'ஒண்ணு கொடு'ங்கிறியே!"

"பஸ் ஸ்டாப் பெயரைத்தானே சொன்னேன்!"



"சொந்தக் காரை, வெச்சுக்கிட்டு, நீங்க ஏன் இந்த வயசிலே எக்ஸ்பிரஸ் பஸ்லே போறீங்க!"





"மில்க் பாய்லர் விசில் மாதிரி இருக் கேம்மா!"



பண்டாரம்: "சில்லறைதானே!...பரவா யில்லே, நீயே வெச்சுக்கோ!"


ங்கள் பற்கள் பல்லாண்டு வாழ்க !
பினாகா ஃப்ளோரைட், வலி தரும் சொத்தை மற்றும் பற்சிதைவிலிருந்து உங்களுக்கு முழுமையான பாதுகாப்பளிக்கிறது. அதில் மிகவும் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் கலவையான ஸோடியம் மோனோஃப்ளோரோபாஸ்பேட் உள்ளது. பற்களுக்கு உறுதி தருவதற்கு எனாமலைக் கொண்டது. அதனால் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளின் வளர்ச்சியைத் தடுக்கிறது.
இளமைப் பருவத்திலேயே பினாகா ஃப்ளோரைடை உபயோகிக்கத் துவங்குங்கள். அதை அதிக காலம் உபயோகித்தால், உங்கள் பற்கள் நீண்டகாலம் வாழும்.
Binaca Fluoride
Binaca Fluoride
ஸிபா–காய்கி
பல்லுக்கு உறுதி பற்சிதைவுக்கு எதிரி...
பினாகா ஃப்ளோரைட்
இந்தியாவின் முதன் முதல் சக்தி வாய்ந்த ஃப்ளோரைட் பற்பசை

டைரக்டர் தூங்கிவிட்டாரா?



— விஜய்



● அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு:

சமீபத்தில் எங்கள் ஊர் டெண்ட் கொட்டகையில் 'அடங்காத மனைவி' படம் பார்த்தேன். ஹீரோவாக வரும் சாமிராவ் ஒரு காட்சியில் பில்டர் சிகரெட் கொளுத்துகிறார். அதை அவர் அணைக்கும்போது சாதாரண சிகரெட்டாக மாறிவிடுகிறது. இந்தக் காட்சியை எடுக்கும்போது டைரக்டர் தூங்கி விட்டாரா?

—அய்யம்பேட்டை அய்யாசாமி

''அய்யம்பேட்டை அய்யாசாமி குறிப்பிட்ட படத்தை நான் சென்னையில் பார்த்தேன். அதில் சாமிராவ் விஸ்கி குடிப்பது போலல்லவா காட்டியிருக்கிறார்கள்?''

—சினி ஜர்னலிஸ்ட் சீனு



● ''டிஸ்டிரிபியூட்டர்கள் சொல்படிதானே நான் ஆட முடியும்? நகரங்களில் எல்லாம் விஸ்கி குடிப்பது போலவும் கிராமங்களில் எல்லாம் சிகரெட் குடிப்பது போலவும் சம்பந்தப்பட்ட காட்சி எடுக்கப்பட்டிருக்கிறது.''

—டைரக்டர் குப்பண்ணா



● ''சம்பந்தப்பட்ட காட்சியை நான் இன்னும் பார்க்கவில்லை. படத்தின் டைரக்டர் என்ற முறையில் நான் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். சாமிராவ் எப்போதும் 555 தான் புகைப்பது வழக்கம். அவருடைய சிகரெட் செலவில் ஒரு படமே எடுத்துவிடலாம்.

—டைரக்டர் குப்பண்ணா

● ''குறிப்பிட்ட படத்தில் வரும் காட்சியில் நடித்தது சாமிராவ் அல்ல. அவரது டூப்பான அடியேன் துரைசாமிதான். நான் சிகரெட்டைக் கையால் தொட்டு வருஷமாகிறது. என்னை ஏன்தான் இருட்டடிப்பு செய்கிறீர்களோ?''

—டூப் துரைசாமி



● ''...தவறுக்கு வருந்துகிறேன். சும்மா என் தம்பி படத்தைப் பார்க்காமலே வந்து அனந்ததை அப்படியே உங்களுக்கு எழுதி விட்டேன். அது இத்தனை ரகளைகளைக் கிளப்பி விடும் என்று நினைக்கவில்லை.

—அய்யம்பேட்டை அய்யாசாமி''

● சாமிராவிடம் பத்துக் கேள்விகள்:

''நீங்கள் குடிப்பது பில்டரா, சாதாரணமா?''

''நான் நெஸ்கஃபேதான் குடிக்கிறேன்.''

''நீங்கள் அதிகம் 555 புகைக்கிறீர்கள் என்று குப்பண்ணா கூறியிருக்கிறாரே?''

''குப்பண்ணா ஒரு பைத்தியம். நான் அவருடைய முந்தின படத்தில் நடித்ததற்கே பணம் இன்றும் வந்தபாடில்லை. இதற்கிடையில் இப்படியொரு புரளி வேறு. உண்மையில் நான் இப்போது பீடி குடிக்கும் நிலையில்தான் இருக்கிறேன்.''



● ''கண்ட கண்ட பித்துக்குளிகள் எல்லாம் எழுதும் கடிதங்களைப் பிரசுரித்து எங்களை ஏன் அறுக்கிறீர் ஐயா? இதோ நான் பிடித்த சிகரெட்டின் சாம்பலை உமக்கு அனுப்பியுள்ளேன். பூசிக் கொண்டு நல்ல வழி தேடிப் போகவும். —வாசகர் சாமிராவ் தாசன்.''



அத்தியாயம் 5



நெப்போலியன் ஆறு மணிநேரம் தூங்கினான். அந்த ஆறு மணி நேரமும் கிடைக்காதபோது, அவ்வப்போது குதிரை மீது அமர்ந்தபடியே தூங்கினான். டாக்டர் நல்லசிவம் இந்தத் தூக்க விஷயத்தில் நெப்போலியனைவிட உயர்ந்தவன். பன்னிரண்டு மணிக்குப் படுத்து ஐந்து மணிக்கு எழுந்திருந்தான். பகல் வேளைகளிலும் தூக்கம் வந்தால் தூங்கலாம் என்பதை அறியாதவன். ஜி. எச். ல் தன் அறையில் தன்னந்தனியாக இருக்கும்போது நாற்காலியில் (ஜி. எச்.சில் குதிரைகள் இல்லை) அமர்ந்து கால்களை மேஜைமேல் போட்டவாறு தூங்க அவனுக்குத் தெரியவில்லை. அவன் தன் வார்டில் பிரவேசித்து ஒவ்வொரு நோயாளியாகப் பரிசோதிக்கையில், ஒவ்வொரு நோயாளியும் ஒரு சாதாரண உயிராக அவனுக்குப் படவில்லை. ஓர் ஓடும் இயந்திரமாகப் பட்டது. அந்த இயந்திரத்தில் எங்கே, என்ன கோளாறு. அந்தக் கோளாறுக்கு என்ன காரணம், கோளாறை எப்படித் தீர்க்கலாம் என்று வெகு உன்னிப்பாகக் கண்டுபிடித்து வெற்றி அடைவதிலேயே நாட்டமாக இருந்தான். அந்த வெற்றி கிட்டியபோது, தெய்வம் பாலித்த அருளாக அதை மதித்தான். தோல்வி கண்டபோது, தெய்வத்திடம் மன்னிப்புக் கோரி, இழந்த உயிரின் ஆத்மாவுக்காகப் பிரார்த்தித்தான்.

முப்பது வயதுக்குள் எம். பி. பி.எஸ். எஃப் ஆர். ஸீ.பி. எல்லாம் தேறி, இளைய



தலைமுறையில் தலைசிறந்த டாக்டர் என்று பெயர் பெற்றுவிட்ட நல்லசிவத்தை, மற்ற டாக்டர்கள் பத்தாம் பசலி, பிழைக்கத் தெரியாதவன் என்றெல்லாம் அவன் காது கேட்காதவாறு பேசிக் கொண்டார்கள். வீட்டில் ஒரு 'கிளினிக்' அமைத்துக்கொண்டு மாலை வேளைகளில் தனி வியாபாரம் நடத்தத் தெரியாத டாக்டர் என்ன டாக்டர்?

அன்று காலை அவன் ஐந்தரை மணிக்கு எழுந்து, வாசலுக்கு வந்து, கோவில் கோபுரத்தைத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்பினான். ஒருதடவை சபாபதி அவன் சிறு பையனாக இருந்தபோது சொல்லிவைத்ததை இன்றுவரை அவன் மறந்தது கிடையாது. 'உன்னால் கோவிலுக்குப் போக முடியாவிட்டாலும் பாதகமில்லை. காலையில் கண் விழித்ததும் கோபுரத்தைப் பார்த்து வணங்கிவிடு. போதும்' என்றார் அவர். அன்றைக்கு அவன் கோபுரத்தைப் பிடித்ததுதான். இன்னும் விடவில்லை.

மீண்டும் வாசலிலிருந்து உள்ளே வந்தபோது சபாபதி சாய்வு நாற்காலியில் மூச்சுத் திணற உட்கார்ந்திருந்தார். அவர் பிறக்கும்போது தனியாகப் பிறக்கவில்லை. ஆஸ்துமாவுடன் பிறந்தவர். யாரையுமே ஒரு பாசக் கண்ணோடு பார்க்கும் அவர் கூடப் பிறந்ததையும் ஒரு பாசத்தோடு வளர்த்தார். என்னதான் உடன் பிறப்பு அதீத தொந்தரவுகளை அடிக்கடி ஏற்படுத்தினாலும் அவர் கலங்கவில்லை.

''ஐயா, காப்பி சாப்பிட்டீங்களா?'' என்று கேட்டான் நல்லசிவம் வழக்கம் போல.

சபா

பதியை அவன் ஐயா என்றுதான் அழைக்க வேண்டியிருந்தது. அப்படித் தான் அழைக்க வேண்டும் என்று இருபத்தி ஐந்து ஆண்டுகளுக்கு முன் அவன் அவருடைய வீட்டில் அம்மாவால் தள்ளப் பட்டுத் தஞ்சம் புகுந்த போது அவர் சொல்லி யிருந்தார். அப்போது அவருக்கு வயது நாற்பது. அப்பா என்று அழைக்க முடியாது. நல்லசிவம் யாரையுமே அப்படி அழைக்க வாய்ப்பு இல்லாதவன். வயது வித்தியாசம் முப்பத்தைந்து. தாத்தா என்றால் அசம்பாவிதம். அண்ணா என்று அழைக்கலாம் என்றால் அது சபாபதிக்குப் பிடிக்கவில்லை. அவருடைய தம்பி இளம் வயதில் காலமாகியிருந்தான். பழைய நினைவுகளைத் தினந்தோறும் கண் முன் கொண்டுவந்து நிறுத்தும்.

'ஐயா' என்பது நிலைத்தது. லட்சக் கணக்கானபேர்கள் ஈ. வே. ரா. பெரியாரை ஐயா என்று அழைத்தார்கள். சபாபதிக்குப் பெரியாரின் கொள்கைகளில் சில மிகவும் பிடித்தவை. அதனால்தான் நல்லசிவத்துக்கும் அப்படிக் கட்டளை இட்டிருக்க வேண்டும்.

சபாபதி தமக்காகவும் டாக்டருக்காகவும் இரண்டு தடவைகள் இருமிவிட்டு, ''ஆச்சு. நீ போய்ப் பல் விளக்கு'' என்றார்.

நல்லசிவம் உள்ளே சென்றான்.

வீடு வீடு அல்ல. ஒரு கோட்டை. கீழே ஒரு ஹால், நான்கு அறைகள், ஒரு சாப்பாட்டு அறை, பூஜை அறை, என்று பல அறைகள். பின்கட்டில் ஒரு பெரிய தாழ்வாரம். தாழ்வாரத்துக் கரைகளில் மலர் செடிகள். பூஜைக்கு வேண்டிய மலர்கள் பூத்தவை. துளசிச் செடிகள் வேறு. தாழ்வாரத்தைத் தாண்டி நடந்தால், பெரிய கலைக் கூடம் மாதிரி ஒரு கூடம். அதுதான் தொழுவம்.

நான்கு சிமைப் பசுக்களும் கன்றுகளும் ஓடி விளையாடலாம். ஆனால் நல்லசிவம் போனபோது எல்லாம் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தன. போன மாதம் பிறந்த கன்று மட்டும் தாய்மீது உராசி உடம்பை நக்கியவாறு நின்றது.

சபாபதி வீட்டுக்குள் குளியலறையோ கக்கூஸோ இருப்பதை வெறுத்தார். தொழுவத்துக்கு அப்பால் ஒரு சிறு மைதானம் போல இடம் இருக்கும்போது கக்கூஸின் நாற்றம் பூஜை அறைக்குள் ஊதுபத்தியின் நறுமணத்துடன் கலப்பானேன்?

நல்லசிவம் காலைக் கடன்களை முடித்த கவட்டிலேயே பச்சைத் தண்ணீரில் குளித்தான். ஐப்பசி கார்த்திகை மார்கழி — எந்த மாதமாக இருந்தாலும் அவன் சென்னையில் வெந்நீரைக்கண்டதில்லை.

[illegible]




ஏன் சோப்பையும் உடம்பு பார்த்ததில்லை. கமகமவென்று மணக்கும் ஒரு வாசனைப் பொடியை சபாபதி டப்பா டப்பாவாக வாங்கி வைத்தார். அவனும் சபாபதியும் சமையற்கார அம்மாள் பார்வதியும் அதைத் தான் உபயோகிக்க வேண்டும். ஆஸ்பத்திரியில் கை கழுவும் போது, தொழில் காரணமாக நல்லசிவம் சர்க்கார் அளிக்கும் கட்டை சோப்பைச் சிரமத்துடன் கரைத்துக் கை கழுவுவான்.

குளிக்கும்போது அவனுக்கு அவனுடைய அம்மாவின் நினைவு வரும். அம்மா எங்கே இருக்கிறாள், என்ன செய்கிறாள், ஏன் இந்த இருபத்தைந்து வருடங்களாக அவனைப் பார்க்க ஒரு தடவைகூட வரவில்லை. அவனுக்கு அப்பா இருக்கிறாரா. அப்படியானால் அவர் யார், என்ன செய்கிறார் என்று பற்பல கேள்விகள் தாறுமாறாக அவனுள் மோதும். சபாபதியிடம் பல வருடங்கள் முன் கேட்டபோது முதலில் சிரித்தார். அப்புறம் அவருக்கு அவன் மீது பரிவு தோன்றியது. ''உன் அம்மாவை நீ மறந்துவிடு. உன்னைப் பொறுத்தவரையில் இறந்து போயாச்சு'' என்றார். இயல்பாக நல்லசிவம் சாதுதான் என்றாலும் தன்னை ஈன்றவளைப் பற்றி அவர் அப்படி அலட்சியமாகப் பேசுவதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ''அப்ப நானும் உங்களைப் பொறுத்தவரையில் செத்தவன்தான்'' என்று சொல்லி ஒரு கைப் பெட்டியுடன் வெளியேறினான். ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் சிறுவனுடைய ரோஷம் சபாபதியை உலுக்கியது. நாள் பூராவும் சென்னை வீதிகளில் தேடிவிட்டுக் கடைசியில் போலீசுக்கும் தகவல் கொடுத்தார். பரட்டைத் தலையும் அழுக்குச் சட்டையுமாக நல்லசிவத்தை அவர்கள் சபாபதியிடம் மூன்றாம் நாள் ஒப்படைத்தார்கள்.

அதன் பிறகு நல்லசிவம் தன் தாய் தகப்பன் பற்றிக் கேட்கவில்லை. சபாபதியும் மனம் இளகிச் சொல்லவில்லை. தன் தாயாரின் பெயர் மீனாட்சி என்ற எண்ணமும் கடைசியாகப் பிரிந்தபோது அவள் முகத்தில் பிரதிபலித்த உணர்ச்சிகளும் அவள் அப்போது கட்டியிருந்த இரத்தச் சிவப்புப் புடவையும்தான் நினைவில் எஞ்சி நின்றன.

குளித்த பிறகு அவன் நெற்றியில் பழனி விபூதியைப் பூசிக் கொண்டான். நட்ட நடுவே குங்குமம் இட்டுக் கொண்டான். சபாபதி அவனுக்கு ஏற்படுத்திக் கொடுத்த வழக்கத்தை அவனால் மீறமுடியவில்லை. வண்டியில் இருக்கும்போது கூட விபூதி குங்குமம் அவன் நெற்றியில் நிலைத்தது.

கண்ணாடி முன் நின்று தலைவாரிக் கொள்ளுகையில்



''சங்கராபரணத்தில் ஒரு பாட்டு பாடி பார்க்கலாம்!''

''வஜ்ரதந்தி வஜ்ரதந்தி வஜ்ர தந்தி வீகோ வஜ்ஜிர தந்தி வீகோ...வஜ்ஜிர... தந்தி!''

''என்னம்மா இது!''

''படம் ஆரம்பித்ததும் இந்தப் பாட்டுத்தானே?''

திடீரென்று அம்மணி கண் முன் நின்றாள். அவளை அவன் ஆறு மாதம் முன்பு தான் முதன் முதலாகச் சந்தித்தான். அவள் அவனை ஒரு டாக்டராக மதித்து, அவன் விடுக்கும் கட்டளைகளை நிறைவேற்றினாள். ஆனால் அவனுடைய மனம் அவளை ஒரு நர்ஸாக மதிக்கவில்லை. நர்ஸின் சிரேணியிலிருந்து உரித்து எடுத்துப் பார்த்தான். அவளுடைய சிறிய முகம், முகத்தில் பிரதிபலிக்கும் இனம் தெரியாத சோகம், அவள் சிரிக்கையில் மேகக் கட்டிகளுக்கிடையே பலவீனமாகப் பிரகாசிக்கும் சூரியனின் ஒளி போன்ற விரக்தி. நடக்கையில் குலுங்காத, அலுங்காத உடம்பு இவை யெல்லாம் அவனை ஈர்த்தன. தனக்கும் அவளுக்கும் ஏதோ ஒரு பந்தம், பல ஜென்மங்களுக்கு முன்னாலேயே ஏற்பட்ட பந்தம், தொடர்ந்து வருவதான உணர்ச்சி அவனுள் ஏற்பட்டது.

தலை வாரிக்கொள்ளும்போது அன்றைய நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது.

வார்டு வேலை முடிந்த பிறகு, ''ஸிஸ்டர், கம் டு மை ரூம்'' என்றான்.

''யெஸ் டாக்டர்'' என்ற அவள் இன்ஜக்ஷன் ஊசிகளைப் பெட்டிகளில் போட்டு விட்டுச் சென்றாள்.

அவள் வருகைக்காக அவன் காத்திருக்கும்போது, ஏன் அவளை வரச் சொன்னோம் என்று அவன் மனம் அடித்துக் கொண்டது. உடல் வியர்த்தது. அவனை வளர்த்த 'ஐயா' சபாபதி, அவன் கல்லூரியில் கால் வைத்த நாளிலிருந்து ஓர் உபதேசம் செய்து வருகிறார். 'எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் உன் மனசு ஆலமரம் போல நிற்கணுமே தவிர, நாணல் மாதிரி ஆடி அசையக்கூடாது. பெண் என்கிறது புயல் மாதிரி. ஒருதடவை ஆட ஆரம்பிச்சே, அவ்வளவுதான். அப்புறம் நீ நீயாக இருக்க மாட்டாய். ஜாக்கிரதை!'

இந்த வார்த்தைகளின் அர்த்தத்தையோ, தாத்பர்யத்தையோ அவன் அதுவரையில் அலசிப் பார்த்ததில்லை. அதற்கு நேரமும் கிடைக்கவில்லை. ஐந்து வருடப் படிப்பு, ஹவுஸ் சர்ஜன், அப்புறம் இரவும்பகலும் MDக்கான படிப்பு, அதன் பின் FRCPக்காக லண்டன் என்று நாளுக்கு நாள் நேரம் அவனை விழுங்கிக் கொண்டே இருந்தது. பெற்ற தகப்பன் என்றால் சில சலுகைகள் எடுத்துக் கொள்ளலாம். சில உரிமைகளை வாங்கிக் கொள்ளலாம். இந்து வயதிலிருந்து அவன் தர்மம் பெற்று வருகிறவன். ஒரு கையாலாகாதவன் பெற்ற பிள்ளை. இன்னொருவரை அண்டி, நித்திய பிச்சை பெற்று, அவருடைய கட்டளைகளின்படி நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவனைக் கட்டிப் போட்டது. உடல் பெண்களின் உருவங்களையும் சதைப் பெருக்கங்களையும் கண்டு அவ்வப்போது சூடேறிக் கொதித்து எழத்தான் செய்தது. ஆனால் அவன் ஆலமரமாயிற்றே! ஆடாமல் அசையாமல் இருந்தான்.

ஆனால் அம்மணி என்ற ஒரு சாதாரண நர்ஸ் அவன் உள்ளே புகுந்து அவனை ஆட்டினாள். அவளுடைய உடலோ உறுப்புக்களோ அவனை ஆட்டவில்லை. அவளுடைய முப்பது வயது வஜ்ர உடம்பு அவளைக் கண்டு ஆடவில்லை. அவனுடைய உள்ளம்தான் ஆடியது. ஏன் என்று அவனுக்கே புரியவில்லை. பூர்வ ஜன்ம பந்தம் என்று தன்னைத் தேற்றிக் கொண்டான்.

''யெஸ் டாக்டர்''.

குரல் கேட்டதும் நல்லசிவம் ஏறிட்டுப் பார்த்தான். கண்களில் சோகச் சிரிப்பு அவனைச் சுண்டி இழுத்தது.

''உன் பெயர்?''

''அம்மணி.''

''ஜி.எச்.சில உன்னை நான் இதுவரையில் பார்த்ததில்லை.''

''ஜி.எச். ஒரு சமுத்திரம். அதிலே நான் ஒரு சின்னக் கட்டை மரம். ஆனா நான் உங்களைப் பார்த்திருக்கிறேன், டாக்டர்.''

''நானும் கட்டை மரம்தானே...''

''நோ நோ... நீங்க ஒரு பெரிய கப்பல்... மற்ற நர்சுகள் பேசறதைக் கேட்டிருப்போ, வெறும் கார்கோ ஸ்டீமர் இல்லை... லக்ஷுரி லைனர்...''

''நன்றாய்ப் பேசறே.''

''தாங்க்ஸ் சார்.''

''சொந்த ஊரு?''

''பாலக்காடு. ஆனா அதைப் பார்த்தது கிடையாது.''

''அம்மா, அப்பா?''

''அம்மா செத்தாச்சு.''

''அப்பா?''

''தெரியாது.''

''அப்படின்னு?''

''என் அப்பா யார்னு என் அம்மா ஒருத்திக்குத்தான் தெரியும். சொந்த ஊரைப் பார்த்திராத மாதிரி என்னை என் அம்மாவுக்குக் கொடுத்த அந்த ஆண்பிள்ளையையும் நான் பார்த்ததில்லை.''

''பார்க்கணும்கிற எண்ணம்...''

''இதுவரையில் உண்டானதில்லை.''

''ஏன்?''

''என் அம்மா உபயோகமா இருக்கிறவரையில் அனுபவிச்சுட்டுப் போனவர், என்னை லட்சியம் செய்வார்னு நான் எப்படி எதிர்பார்க்க முடியும் டாக்டர்?''

''உண்மைதான் அம்மணி.''

''உங்களுக்குக் கூட அம்மா அப்பா கிடையாதாமே?''

''யார் சொன்னார்கள்?''

''ஜி. எச்.லே நிறைய கிசுகிசு உண்டு.''

''ஓ, ஐ ஸீ...''

"அந்த வயலிலிருந்து சபாபதி என்கிற பணக்காரர் உங்களை வளர்க்கிறதாகக் கேள்விப்பட்டேன்."

"உண்மை..."

"எதுக்கு சார் கூப்பிட்டீங்க?"

நல்லசிவம் ஒரு கணம் வாய் திறக்கவில்லை.

"மறந்து போச்சா..."

"இல்லை."

"பின்னே?"

"உன்னை முதன் முதலாப் பார்த்தப்போ, ஏற்கனவே எங்கேயோ எப்பவோ பார்த்தது மாதிரி இருந்தது."

"நாம சில ஊர்களுக்கு, சில இடங்களுக்கு முதல் தடவையாப் போனாலும், ஏற்கனவே அந்த இடத்தில் இருந்துவிட்டதான பிரமை ஏற்படுமே அது மாதிரியா?"

"எக்ஸாக்ட்லி..."

"அப்போ பூர்வ ஜன்மத்தில் சந்தித்திருப்போம்...."

"அப்படித்தான் இருக்கணும், அம்மணி.. ஆனா எப்படி?"

"அது பற்றி நீங்க யோசிச்சுட்டிருங்க டாக்டர். டீன் வர்ற சமயம். வார்ட்லே என்னைக் காணவிட்டால் மெமோ வரும்."

"ஒன் மினிட் ப்ளீஸ்...."

"யெஸ், டாக்டர்."

"நீ ஆஃப் டியூட்டியிலே இருக்கிறப்போ, தப்பா நினைக்கலேன்னு இந்த ரூமுக்கு வர முடியுமா?"

"முடியாது டாக்டர்."

"ஸாரி."

"நான் ஆண்பிள்ளைகளை நம்பறதில்லே."

"ஸாரி."

"இப்படிக் குழைஞ்சு குழைஞ்சுதான் டாக்டர் ஆண்பிள்ளைகள் ஆரம்பிப்பாங்க. அதிலே பெண்கள் கரைய ஆரம்பிப்பாங்க. அப்புறம் கடைசியிலே அவங்களை மேலும் கரைய விட்டு விட்டு ஆண்கள் கல்லு மாதிரி ஸாரி... நாய் மாதிரி ஓடுவார்கள்... இதெல்லாம் என் அம்மா மாதிரி, என்னை மாதிரி, இன்னும் எத்தனையோ பெண்கள் பட்ட அனுபவத்திலிருந்து சொல்கிறேன்."

நல்லசிவம் மௌனம் சாதித்தான். ஒரு சோகச் சிரிப்பு மலையாக விசுவரூபம் எடுத்து, பாறை பாறையாக வெடித்து அவனைத் தாக்குவதாகப் பட்டது.

"எனக்குப் புரிகிறது அம்மணி!" என்றான். குரல் தழுதழுத்தது. பிறகு, "என் மதரும் அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவள்தான், அம்மணி. எனக்கும் என் அப்பா பெயர் தெரியாது. யாராவது காலேஜ்லே படிக்கும்போது என்னை 'பாஸ்டர்ட்'னு திட்டினா எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வரும். ஏன் தெரியுமா? உண்மையைச் சொல்றப்போ கோபம் வரத்தானே வரும்... உண்மையா இல்லேன்னு கை நீட்டி அடிக்கத் தோணும். ட்ருத்தைச் சொல்றப்போ, கோபம் சொல்றவன் மேலே பாயாம, அந்த உண்மைக்கு ஆளாக்கினவங்க பேர்லே திரும்பும். அப்புறம் தன்மீதே அது குமுறும். தென் வாட்? கோபம் தணியத் தணிய மனசிலே வேதனை உண்டாகும்.... அது உள்ளூர அழும்."

அவன் முடித்தான்.

அவள் சிரித்தாள்.

அவளுடைய சிரிப்பு அசம்பாவிதமாகப் பட்டது.

அவள் சொன்னாள்:

"டாக்டர், மேரேஜ் என்கிறது நம்ம ஸொஸைட்டி ரொம்பக் காலம் முன்னாலே கொண்டுவந்த ஒரு சீர்திருத்தம். ஒரு பழக்கம். ஒரு ஆணுக்கு ஒரு வீட்டில்தான் பெட்ரூம் இருக்கலாம் ஒரு பெண் ஒரே ஆணிடமிருந்துதான் சுக துக்கங்களை அனுபவிக்கலாம்னு ரூல்ஸ் போட்டாங்க. அப்படிப் போடறப்ப, ஒரு பயம் இருக்கட்டும்னு அக்னி, மந்திரம் எல்லாம் வச்சாங்க. மனிதன் நாய் மாதிரி அலையக் கூடாதுன்னு அவனைச் சுற்றிப் போட்ட வேலிதான் மேரேஜ் என்கிற கட்டுப்பாடு. அந்த வேலியை உடைச்சுத் தள்ளிச் சிலபேர் அலையறாங்க. ரிசல்ட்... ஒரு நல்லசிவம்... ஒரு அம்மணி... வரதட்சணை வாங்கிக்கொண்டு ஜானவாசத்திலே ஜம்னு மாலையைப் போட்டுண்டு போறவன் கொடுத்தா குழந்தை. புண்ணியாவசனம், நாமகரணம், ஆண்டு நிறைவு."

"யெஸ்...."

"பகிரங்கமா குழந்தை வர்றப்போ பிள்ளை... திருட்டுத்தனமா வர்றப்போ பாஸ்டர்ட்..."

"உனக்கு டயமாறது அம்மணி..."

"தாங்க்ஸ் டாக்டர்."

• • •

சபாபதி ஹாலிலிருந்து எத்தனை தடவை அவனை அழைத்தார் என்று அவனுக்குத் தெரியாது. கண்ணாடியையும் கைச்சீப்பையும் மறந்துவிட்ட நிலையில் நின்ற நல்லசிவம், திடீரென்று விழித்துக்கொண்டு விரைந்தான்.

அம்மணி அப்புறம்.

இப்போது சபாபதி.

ஓடினான்.

(தொடரும்)

தொடங்கி வைத்தவன்

ஏ, கிருஷ்ண பரமாத்மாவே,
நீதானே தொடங்கி வைத்தாய்?
வேண்டியதெல்லாம் கொடுத்துக்கொள் —
வேண்டாமென்று சொல்லவில்லை.
வேண்டியதெல்லாம், கொடுப்பதற்கு முன்
அந்த அவலை ஏன் வாங்கிச் சாப்பிட்டாய்?
குசேலரைத்தான் சொல்கிறேன் —
இப்போது 'சம்திங்' கொடுக்காவிட்டால்
இங்கே —
ஒரு காரியமும் நடப்பதில்லையே!
ஏ, கிருஷ்ண பரமாத்மாவே,
நீதானே தொடங்கி வைத்தாய்?

+ஜி. நடராஜன்







நைந்து போன சாரங்கள்

பானுமதி ராஜகோபாலன்

"அம்மா!"


நெற்றியில் வழியும் வியர்வையைத் துடைத்துக்கொள்ளவும் நேரமின்றி வேகமாக, ஏதோ வெறியில் உந்தப்பட்டவளாக, கடகடவெனக் கல்லுரலில் மாவு அரைத்துக் கொண்டிருந்த மங்களம் சட்டென்றுநிமிர்த்திவிட்டு நிமிர்ந்தாள். மகன் ராமு.

துவைத்துத் துவைத்து நைந்து, இயற்கையில் வெண்மையாயிருந்து இப்போது மங்கிய மஞ்சளான சட்டை, நிறம் மங்கிய நீல டிராயர், தோளில் இழிந்த சாக்குப் பை, எண்ணெய் தடவிச் சீராக வாரப்பட்ட தலை, நெற்றியில் பட்டையாக விபூதிக் கீற்று. ஏழ்மையிலும் புத்திகூர்மையும் களையுமான முகத் தெளிவு. பார்க்கப் பார்க்க மங்களத்தின் மனம் துவண்டது. 'இறைவா! இத்தனை அறிவையும், சூட்டிகையையும் கொடுத்தவன் ஏன் ஏழ்மையையும் கூடவே கொடுத்தாய்!'

"என்னடா ராமு! ஸ்கூலுக்குப் போகலே?"

"போகணும் அம்மா." — ராமு தயங்கினான். ஏதாவது பணம் கேட்க வந்திருக்கிறானோ? அத்தியாவசியம் என்றால் தவிர அனாவசியமாகப் பணம் கேட்க மாட்டானே. ஏழ்மையைப் புரிந்து கொண்டு அதற்கேற்ற மாதிரி சமாளித்துக் கொள்பவனாயிற்றே.

"ஏண்டா, ஏன் நிக்கறே? எனக்கு இன்னும் நாலு லிட்டர் மாவு அரைக்கணும். வேலை தலைக்கு மேலே கிடக்கு."



''வந்தும்மா... பரீட்சைக்குப் பணம் கட்டணும். நாளையோட கடைசி நாள்...'' திக்கித் திணறிப் பேசி முடித்தான் ராமு. அம்மாவிடம் தற்போது பணம் கிடையாது என்பது அவனுக்கே தெரியும். வடிக்க அரிசி இல்லாமல் அடுத்த வீட்டில் கெஞ்சிக் கூத்தாடி அரைப் படி அரிசி கடன் வாங்கியதை அவனே நேரில் பார்த்திருக்கிறான். ஆனால் நாளைக்குள் பரீட்சைக்குப் பணம் கட்டியாக வேண்டுமே. இந்தப் பரீட்சையோடு பள்ளி வாழ்க்கை முடிகிறது. இதை விட்டுவிட்டால் இத்தனை வருஷமும் வகுப்பில் முதல் வகுப்பில் பாஸ் செய்ததெல்லாம் வியர்த்தமாகி விடும்.

''எத்தனைடா?''

''பதினைஞ்சு ரூபாய் அம்மா.''

''சரி. நாளைக்கு ஸ்கூல் போறச்சே நீயே வாங்கிண்டு போ.'' பதிலுக்குக் காத்திராமல் மீண்டும் குழவியை வேகமாக உருட்டத் தொடங்கினாள்.

ராமுவுக்கு ஆச்சர்யமாய் இருந்தது. எப்படி அம்மாவால் நாளைக்குள் பணம் புரட்ட முடியும்? எப்படியானால் என்ன? பரீட்சை எழுத இனி எந்த விக்கினமும் இல்லை. அது போதும்! உற்சாகமாக அலுமினியம் டிபன் பாக்ஸை எடுத்துக்கொண்டு ஓடினான்.

மங்களம் கல்லுரலில் பொங்கிப் பொங்கிப் பூத்து வரும் வெண்ணிற மாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஆயிற்று. ஸ்கூல் படிப்பு முடிந்துவிட்டது. அடுத்தது கல்லூரி. அதன் பின் ஐ.ஏ.எஸ். அதன் பிறகு? என் பிள்ளை ராமு கலெக்டராகிவிடுவான். மங்களத்தின் இதழில் புன்னகை அரும்பியது.

மங்களத்தைப் போன்ற ஏழை விதவை, நாலு வீட்டில் சமைத்துப் போட்டு, மாவு அரைத்துச் சம்பாதிப்பவள், பிள்ளையைக் கல்லூரி வரை கொண்டு வருவதே அதிகம். ஐ.ஏ.எஸ். வரை அந்தக் கனவு நீண்டு கொண்டே போகலாமா? நியாயமோ இல்லையோ? மங்களத்துக்கு அதுவே ஒரு குறி. அதுவே வெறியாக மனத்தினுள் நிறைந் திருந்தது.

மறு நாள் காலை ராமு பழையதில் உப்புப் போட்டுப் பிசைந்து, நாரத்தங்காயின் உதவியுடன் அவசரம் அவசரமாக விழுங்கிக் கொண்டிருக்கும்போது மங்களம் கையில் சலவை நோட்டுக்களுடன் வந்தாள்.



''இந்தாடா! பத்திரமாகக் கொண்டுபோ. சுவாமியை வேண்டிக்கோ.''

ராமு சந்தோஷத்துடன் முகம் மலரக் கை கழுவ ஓடினான். சொம்பு இருந்த இடத்தில் தகரக் குவளையைப் பார்த்ததும் மனம் சட்டென்று விழுந்தது.

பணத்தைப் பையில் பத்திரப்படுத்திக் கொண்டு கிளம்பினான்.

''சுவாமிக்கு நமஸ்காரம் பண்ணிட்டுப் போடா.''

ராமு சட்டென்று திரும்பினான். ஒரு விநாடி தாயைக் கூர்ந்து நோக்கியவன் அமைதியாக அவளை நமஸ்கரித்தான்.

''நீதான் அம்மா என் சுவாமி!''

மங்களத்தின் கண்கள் பனித்தன.

மங்களத்தின் உழைப்பும் ராமுவின் படிப்பும் தொடர்ந்தன. அவள் கழுத்தில் காதில் கிடந்த தங்கங்கள் பணமாக மாறிப் படிப்பாக வடிவெடுத்தன. குடியிருந்த சிறு சொந்த மனையும் விலை போயிற்று.

எல்லாமாகச் சேர்ந்து ராமுவோட ஐ.ஏ.எஸ். பட்டத்தை இணைத்தன.


ராமு மங்களத்தின் கைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்டு அழுதுவிட்டான். மங்களம் ஆனந்தத்தில் திணறினாள்.

''இப்போமனம் குளிர்ந்ததா அம்மா? உன் விருப்பப்படி, உன் கனவுப்படி நான் ஐ.ஏ.எஸ். ஆயிட்டேன். அம்மா. உன் லட்சியத்தை நிறைவேற்றிக் காட்டிட்டேன் அம்மா'' என்று நெஞ்சுருகப் புலம்பினான்.

இந்தியாவிலேயே சிறந்த மாணவனாகத் தேறியதால் ராமுவுக்குப் பாராட்டுக் கூட்டம் நடத்திப் பல பெரிய மனிதர்கள் புகழ்ந்து பேசினார்கள். மேடையில் கழுத்து நிறைய மாலையும், முகம் கொள்ளாத மகிழ்ச்சியுமாக உட்கார்ந்திருந்த ராமுவைப் பார்த்து ஆனந்தப்பட மங்களம் வரவில்லை. பண்ணையார் வீட்டில் கல்யாணம் என்று பட்சணம் செய்யப் போயிருந்தாள். நூறு ரூபாய் தருவார்கள். ராமுவுக்கு நல்லதாக பேண்ட் எடுக்கலாமே?

ராமுவுக்குப் பெண் தருவதாக அந்த ஊர் பெரிய மனிதர் ஒருவர் வலிய வந்து வற்புறுத்தினார். மங்களத்துக்கு அதில் அவ்வளவாக விருப்பம் இல்லை. தன்னைப் போல் ஏழையான, உழைப்பாளியின் பெண்ணைத்தான் முடிக்க

வேண்டும் என்று நினைத்திருந்தான். ஆனால் ராமுவின் கண்களில் ஆசை துளிர் விடுவதைப் பார்த்து ஒதுங்கிக் கொண்டாள்.



தூங்கும்போது ஒருவன் பேசினால் அது உளறல்.
பலர் தூங்கும்போது ஒருவன் பேசினால் அது மேடைப் பேச்சு.
- லலிதா செல்லப்பா

ராமுவுக்கும் பெரும்பணக்காரர் மகள் லதாவுக்கும் கோலாகலமாகக் கல்யாணம் நடந்தது. பிள்ளைக்கு அம்மா எங்கே என்று யாரும் கேட்கவுமில்லை. ஓரமாக, மறைவாக, இருட்டான இடத்தில் ஏழைமை பிரதிபலிக்கும் உருவத்தோடு நின்று மாங்கல்ய தாரணத்தை, கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்கக்கண்டு, மனமார ஆசி வழங்கிய மங்களத்தை 'பிள்ளைக்கு அம்மா இவள்தான்!' என்று யாரும் அறிமுகப்படுத்தவும் இல்லை.

ராமுவுக்குத் தஞ்சைக்கு கலெக்டர் ஆக உத்தரவு வந்து விட்டது. மங்களம் கனவா நனவா என்று புரியாமல் விழித்தாள். அவள் பிள்ளை கலெக்டர் ஆகிவிட்டான். இந்த ஏழையின் அபிலாஷையைக் கூட ஆண்டவன் நிறைவேற்றி விட்டானே! பெரிய பங்களா, டவாலி சேவகர்கள், வாசலில் காத்துக் கிடக்கும் அதிகாரிகள், தாசில்தார்கள், கிராமக் கணக்குப்பிள்ளைகள், நிமிஷத்துக்கு ஒரு முறை வெளியே வந்து மெதுவாக ஏதோ கூறிவிட்டு உள்ளே ஓடும் உதவியாளர்கள், வாசலில் பித்தளைத் தகட்டில் மினு மினுக்கும் 'கே. ராமன் ஐ.ஏ.எஸ்.' என்ற எழுத்துக்கள்... மங்களம் பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போனாள். இதுதானே அவள் லட்சியம்? இதுதானே அவள் தவம்? 'இறைவா! உண்மையிலேயே நீ இரக்கமுள்ளவன்தான். என் கோரிக்கையை அலட்சியம் செய்யாமல் முடித்துக் கொடுத்து விட்டாயே!'

''யாரம்மா அங்கே! கலெக்டர் கிட்ட உதவி கேட்க வந்தியா? இப்படி ஓரமாய்ப் போய் உட்கார். கலெக்டர் வெளியிலே வர்ற நேரம். எதிரே போய் உட்கார்ந்திருக்கிறியே!'' யாரோ அவளை இன்னார் எனப் புரிந்து கொள்ளாமல் அதட்டினார்கள்.

மங்களம் திடுக்கிட்டு எழுந்தவள் தன் சாயம் போன பழைய புடவையையும், கருங்கி விரைத்த உடலையும் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டவள் மௌனமாக அகன்றாள்.

இரண்டு நாட்களாகவே தொண்டை நமைச்சலும் இருமலுமாக இருந்தது. சமையல்காரரிடம் கேட்டுச் சூடாக வெந்நீர் வாங்கித் தொண்டைக்கு இதமாகப் பருகிக் கொண்டிருந்தாள். மருமகள் லதா வந்தாள்.

''என்னம்மா! கோயில்லே ராமாயணம் கதாகாலட்சேபமாமே போகலையா?''

மங்களத்துக்கு ஆசைதான். ஆனால் இந்த இருமல் தொந்தரவினால் நெஞ்சுக் கூடெல்லாம் ஒரே வலி. பேசாமல் சுருண்டு படுத்துக் கொண்டால் தேவலாம் போல் இருந்தது. வாயைத் திறப்பதற்குள் லதா முந்திக் கொண்டாள்.

''பொன்னம்மா! அம்மாவுக்கு ராமாயணம் கேட்கணுமாம். கோவிலுக்குத் துணையாகப் போயிட்டு வா'' என்று உத்தரவிட, பொன்னம்மாவும் தயாராக வந்து நின்றாள்.

மங்களம் மறு வார்த்தை பேசாமல் வெந்நீர் டம்ளரை வைத்துவிட்டுக் கிளம்பினாள்.

உண்மையில் பாகவதர் மிக உருக்கமாகப் பாலகாண்டத்தை விவரித்தார். மங்களத்துக்கு ராமுவின் குழந்தைப் பருவம் நினைவுக்கு வந்தது. சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே தொண்டையில் நமைச்சல் ஏற்பட்டு நெஞ்சை வலித்துக் கொண்டு, புகைந்து புகைந்து இருமல் பெருகி வந்தது. சுற்றிலும் இருந்தவர்கள் சங்கடத்துடன் நெளிந்தார்கள். இருமல் தாங்காமல் கண்ணில் துளிர்த்த நீரைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள் மங்களம்.

''பொன்னம்மா! இருமல் அதிகமா இருக்கு! போகலாம் வா.''

பொன்னம்மா அச்சத்துடன் நிமிர்ந்தாள். ''இப்பவேயா அம்மா? முடிஞ்சதும் போகலாம் அம்மா. சின்னம்மா என்னைத் திட்டுவாங்க. ஏதோ விருந்து நடக்குதாம் அங்கே. அதனாலே உங்களைப் பத்து மணிக்குத்தான் அழைச்சிட்டு வரச் சொன்னாங்க.''

மங்களத்துக்கு நெஞ்சு வலித்தது. ''அப்படீன்னா கோபுர வாசல்லேயாவது போய்



பைத்தியத்தைத் தெளிய வைப்பதற்கான புதிய மருந்து ஒன்றைக் கண்டுபிடித்தார் டாக்டர் ஒருவர். மருந்தைச் சோதித்துப் பார்ப்பதற்கு ஐந்து பைத்தியங்களை அழைத்து வந்து மருந்தைக் கொடுத்து நாற்காலியில் உட்காரவைத்து அதுதான் சைக்கிள் என்று கூறி சைக்கிள் ஓட்டுவது போல் பாவனை செய்யச் சொன்னார்.

நான்கு பைத்தியங்கள் சைக்கிள் ஓட்டுவது போல் கால்களை ஆட்டினார்கள். ஆனால் ஒருவன் மட்டும் அமைதியாய் அமர்ந்திருந்தான். டாக்டர் மிகவும் சந்தோஷத்துடன் தமது மருந்து ஒருவனிடமாவது வேலை செய்கிறது என்ற மகிழ்ச்சியில் அந்த நபரிடம் 'எல்லோரும் சைக்கிளில் செல்வது போல் கால்களை பெடல் செய்யும் போது நீ மட்டும் ஏன் சும்மா இருக்கிறாய்?' எனக் கேட்டார். 'நான் சைக்கிளில் இறக்கத்தில் சென்று கொண்டு இருப்பதால் பெடல்களைக் கால்களால் மிதிக்கவில்லை' என்றான் அவன். - பிரியா பாலு



போனமாதம் பத்து ரூபாய் கைமாத்து வாங்கினீயே எங்கே?

''இந்த மாதம் இருபது ரூபாய், கைமாத்து தாங்க: அந்த பத்து ரூபாயை திருப்பித் தந்துடறேன்''

உட்காருவோம் வா. இங்கே இருமினா மத்தவாளுக்கு இடைஞ்சலா இருக்கும்.''

இருவருமாகக் கோபுர வாசலில் வந்து உட்கார்ந்தார்கள்.

''இப்படி மார்பு வெடிக்கிற மாதிரி இருமு றீங்களே மத்தியானம் டாக்டர் வந்தாரே காட்டி மருந்து வாங்கிச் சாப்பிடக்கூடாது?''

''டாக்டர் வந்தாரா? எதுக்கு?''

''சின்னம்மாவுக்குத் தலை வலின்னு போன் பண்ணிக் கூப்பிட்டாங்க. உங் களுக்குத் தெரியாதா?''

மங்களம் மௌனம் சாதித்தாள்.

பத்து மணி, சுமாருக்கு வீட்டை நோக்கிக் கிளம்பினார்கள்.

''கொஞ்சம் இருங்கம்மா'' என்று வேக மாகப் போன பொன்னம்மா, ''பனங்கற் கண்டும், சித்தரத்தையும்.. வாயிலே அடக் கிக்கிங்க. இருமல் மட்டுப்படும்'' என்றாள்.

நன்றியில் கண்கள் பனிக்க வாங்கிக்கொண் டாள் மங்களம்.

திண்ணமாட்டில் காலடி ஓசை கேட்டுத் தலை யைத் தூக்கிப் பார்த்தாள். ராமு.

''என்னடா ராமு?''

''ம்... ஒண்ணுமில்லே... அம்மா... வந்து உடம்பு சரியில்லையா?''

மங்களத்துக்கு மனம் குளிர்ந்தது. எத்தனை அக்கறையுடன் வந்து விசாரிக்கிறான். ''ஒண் ணும் இல்லேடா. ஐஸ் பெட்டியிலே விருந்து ஜலம் எடுத்துக் குடிச்சுட்டேன். பனிவேறே. எல்லாமாச் சேர்ந்து ஒரே இருமல்.''

''உனக்கு இதெல்லாம் ஒத்துக்குமா? எதுக்கு ஐஸ் வாட்டர் எல்லாம் குடிக்கிறே? தவிரவும் வந்து... அம்மா... இங்கேகுழ்நிலை உனக்கு அவ்வளவா ஒத்துவராது. நீ அந்தக் காலத்து மனுஷி... உனக்கு ஆசாரம் கெட்டுப் போயிடும்னு நெனைப்பே..... அதனாலே....''

'' அதனாலே என்னடா சொல்லு...''

''...வந்து.... நீ வேணா நம்ம சொந்த ஊரிலேயே போய் இருக்கியா? வேணும் என்கிறதைப் பண்ணிச் சாப் பிட்டுட்டு... கோயில் குளம்னு... நான் பணம் அனுப்பறேன் மாசா மாசம்...''

மங்களம் மகனைப் பார்த் தாள். மகன் பார்வையை வேறெங்கோ ஓட்டினான்.

''சரிடா... நாளைக்கே வேணாலும் கிளம்பிடறேன்.

பொட்டியா, சட்டியா? ரெண்டே புடவை, மூக்குக் கண்ணாடி. தானே?''

''சரிம்மா.''ராமு வேகமாக திரும்பினான்.

மறு நாள் காலையிலேயே பியூன் வந்து பஸ் ஏத்தி விட்டான். பழைய கிராமத்தில் ஒரு சின்ன அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு வாழ்க்கையைத் தொடங்கினாள்.

ராமு தவறாமல் மாதா மாதம் பணம் அனுப்பினான். பிறகு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை. அதன் பின் நிரந்தரமாக வராமல் நின்றே விட்டது. கலெக்டர் என்றால் எத் தனையோ வேலை. இந்த அல்ப விஷயங்களை நினைவில் வைத்திருக்க முடியுமா?

மங்களத்தின் அரைத்துப் பழகின கைகள் இலவு எடுத்தன. மீண்டும் அரைக்கவும், சமைக்கவும் தொடங்கினாள்.

''பாட்டி...பாட்டி...'' வீட்டுக்காரரின் பேரன் ரவி ஓடிவந்தான்.

''என்னடா கண்ணு!''

''பாட்டி! உனக்குச் சேதி தெரியுமா? நாளைக்கு எங்கள் ஸ்கூல் புதுக் கட்டிடத்தைத் திறந்து வைக்க தஞ்சாவூர்க் கலெக்டர் ராமன் வராராம் பாட்டி'' —

மங்களத்தின் மனம் பரவசத்தில் நிறைந் தது. ராமு... என் பிள்ளை ராமு கலெக்டர் ராமன்.....

''நீ கலெக்டரைப் பார்த்திருக்கியா பாட்டி?'' ரவி கேட்டான்.

''கலெக்டர் வேறே யாரும் இல்லேடா. என் பிள்ளைதான்' என்று கூற வாய் திறந்த வள் சட்டென அடக்கினாள்.

''உங்க கலெக்டரும் உன்னை மாதிரி குழந் தையா இருந்தவன் தானேடா. அப்போ பார்த்திருக்கேன்'' என்றாள் சிரித்துக் கொண்டே. ரவி ஓடிவிட்டான்.

மங்களம் மௌனமாகக் குழவியை உருட் டிக்கொண்டிருந்தாள். கட்டடம் உருவாகும் வரைதான் அதற்குப் பாதுகாப்பாகச் சுற்றிலும் மூங்கில் சாரங்கள் வேண்டும். அழகான கட்ட டம் வண்ண மேற்பூச்சுடன் உருவாகிவிட்டால் சுற்றிலும் இருக்கும் அசிங்கமான சாரங் களை எடுத்து விடுவதுதானே முறை? அதை விட்டு விட்டு, கட்டிடத்தோடு நானும் இருப் பேன் என்று நைந்த அருவருப் பான சாரம் பிடிவாதம் பிடிக்கமுடியுமா? — மங்களம் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.





திரு. என். சங்கர்

(மானேஜிங் டைரக்டர், கெமிகல்ஸ் அண்ட் பிளாஸ்டிக்ஸ் இந்தியா லிமிடெட்.)

சிகாகோவில் கெமிகல் இன்ஜினியரிங் படித்துப் பட்டம் பெற்ற திரு என். சங்கர் கிரிக்கெட் ஆட்டத்தில் ஈடுபாடுள்ளவர். ''ஜாலி ரோவர்ஸ்'' டீமை இப்போது இவர்கள் கம்பெனி பராமரித்து வருகிறது.

தொழிலறிவு மிக்கவரே நிருவாகத்தில் இடம் பெற வேண்டும் என்னும் கொள்கையை உறுதியாய் நம்புகிறவர்.

'கெம் பிளாஸ்ட்' நிறுவனம் பி. வி. ஸி. ரெஸினும் பி. வி. ஸி. நீர் விநியோகக் குழாய்களும் தயாரிக்கிறது. ரெஸின் தயாரிப்புக்குப் பயன் படுவது சர்க்கரை தயாரிப்பில் கழிவுப் பொருளாய் மிஞ்சும் 'மொலாஸெஸ்' சக்கை. அதிலிருந்து ஆல்கஹால்... அதிலிருந்து ரெஸின். இப்போது மதுவிலக்குத் தளர்த்தப் பட்டிருப்பதன் காரணமாய் மூலப் பொருள் பற்றாக்குறை ஏற்படுமாம்.

கல்லிடைக்குறிச்சிக்காரரான இவர் நல்ல சங்கீத ரசிகர். ''ட்யூரோ மெட்டாலிக்'', நெல்லையிலுள்ள ''இண்டஸ்டிரியல் கெமிகல்ஸ்'' நிறுவனங்களும் இவருடைய பொறுப்பிலேயே இயங்குகின்றன.



கொத்தமங்கலம் விசுவநாதன்

(வில்லிசை)

'காந்தி மகான் கதை' பாடிய கொத்தமங்கலம் சுப்புவின் குமாரரான திரு விசுவநாதன், அப்பாவின் பாணியிலேயே தொடர்ந்து வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். திரு சுப்பு அமைத்துப் பாடியவை தவிர, இவரே எழுதிய நாயன்மார்கள் ஆழ்வார்கள் பற்றிய பக்திக் கதைகளும் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. பொருளியல் பட்டமும், வழக்கறிஞருக்கான படிப்பும் முடித்த இவர் ஓராண்டு காலம் வழக்கறிஞராய்ப் பணி யாற்றியதும் உண்டு. இப்போது 'ராம்கோ' நிறுவனத்தில் சென்னைக் கிளையின் நிர்வாகி.



திருமதி பி. எஸ். கமலாதேவி

(மெல்லிசை)

ஒருபுறம் திரையில் படம் மௌனமாக ஓடிக்கொண்டிருக்கும் போது அருகில் 'ஸ்பாட் லைட்'டில் நின்றுகொண்டு உதட்டசைவு பிசகாமல் பாடுகிறார் திருமதி பி. எஸ். கமலாதேவி. இப்புதுமையான மெல்லிசை நிகழ்ச்சிக்குப் பெயர் 'வாய்ஸ் அண்டு விஷன்'.

இதற்கு முன், 'ட்யூனு ஜங்ஷன்' என்ற பெயரில் தந்திரக் காட்சிகளுடன் இவர் நடத்திய இசை நிகழ்ச்சியும் நல்ல வரவேற்பைப் பெற்றது. 78ம் வருஷத்துக்கான சிறந்த மெல்லிசைக்குழு என்ற விருதையும் பெற்றது.

விலங்கியல் பட்டதாரியான இவர் கர்நாடக இசையிலும் டிப்ளோமா பெற்றவர். இதுவரை 1500க்கும் மேற்பட்ட மெல்லிசை நிகழ்ச்சிகளில் பாடியுள்ளார்.

தம்முடைய இசை நிகழ்ச்சிக்காக சில பக்திப் பாடல்களையும் தாமே இயற்றியுள்ளார். இவை இசைத்தட்டுக்களாகவும் வெளிவந்துள்ளன.

சில திரைப் படங்களிலும் பின்னணி பாடிவரும் இவர், இந்த ஆண்டு பம்பாய் சண்முகானந்தா சபாவில் முதன் முதலாய்த் தம்முடைய மெல்லிசை நிகழ்ச்சியை நடத்தவிருக்கிறார்.

–சுப்ரபாலன்

புதிய தலைமுறை



In fond and affectionate memory of

Smt. RENGAMONY

Born: 25-3-1925 Died: 29-8-1972

Beloved wife of S. Padmanabhan Affectionate mother of Jana and Kanna, mother-in-law of J. Gopalan & Malathy, Grandmother of Sandhya & Srinivas

நன்மார்க்கர் நாவில் நவிற்றிய பாட்டே
சன்மார்க்க சங்கம் தழுவிய பாட்டே
நம்புறும் ஆகமம் நவிற்றிய பாட்டே
எம்பலம் ஆகிய அம்பலப் பாட்டே

— *திருஅருட்பா*

விபசாரத் தடைச்சட்டத்தைத் தளர்த்தலாமா?

"விபசார தடைச் சட்டத்தின் கீழ் பிரபல நடிகை கைது!" "அலகாபாதில் ஜவஹர்லால் நேரு பிறந்த வீடு இன்று விபசாரத் தொழிலுக்கும் பயன்படுத்தப் படுகிறது!"

என்றெல்லாம் அதிர்ச்சி தரும் செய்திகளைப் படிக்கும்போது விபசாரம் தடைச் சட்டம் இருந்தென்ன? இல்லாவிட்டால் என்ன? இந்த சமுதாயப் பிரச்னைக்கு எந்த விதத்தில் தீர்வு காணலாம்? என்பன போன்று பல சந்தேகங்கள் எழுகின்றன. இளைய தலைமுறையைச் சார்ந்த பெண் வழக்கறிஞர் திருமதி சுதா ராமலிங்கம் அவர்களை அணுகி இவ்விஷயமாக விவாதித்தபோது அவர் சொன்ன கருத்துக்கள்:

"விபசாரம் காலம் காலமாக ஒவ்வொரு சமுதாயத்திலும் புரையோடிக் கிடக்கும் தவிர்க்க முடியாத ஒரு பலவீனம். இப்பிரச்னையை அறவே ஒழிப்பது என்பது என்றுமே முடியாத செயலாகும்.

முதலில் நமது நாட்டில் அமுலில் இருக்கும் சட்டம் எந்த அளவுக்கு விபசாரத் தடைக்கு உண்மையிலேயே உதவுகிறது பார்ப்போம்.

பணம், அல்லது வேறு ஆதாயம் பெற்று அதற்குப் பதிலாக ஒரு பெண் ஓர் ஆணுடன் தகாத உடலுறவு கொள்வாளேயானால் அவள் விபசாரத் தொழில் செய்வதாகக் கருதப் படுகிறாள். விபசாரம் செய்வதும், விபசார விடுதிகள் நடத்துவதும், இத்தொழிலுக்கு உடந்தையாக இருப்பதும் சட்டபூர்வமான குற்றங்கள். குற்றத்துக்குத் தகுந்தபடி ஐந்து ஆண்டுகள் வரை தண்டனையும் அபராதமும் விதிக்கச் சட்டம் வழி வகுக்கிறது. Suppression of Immoral Traffic in Women and Girls Act 1956எனப்படும் சட்டத்தை எல்லா மாநிலங்களும் பின்பற்றுவதோடு தங்கள் மாநிலங்களுக்காகச் சில துணைச் சட்டங்களை இயற்றியும் செயல் படுகின்றன.

விபசாரம் என்பது ஆண், பெண் ஆகிய இருபாலரும் இணைந்து செய்யும் குற்றம். அப்படியிருக்கப் பெண்ணை மட்டும் குற்றவாளியாக்கித் தண்டனை கொடுக்க மட்டுமே மேற்சொன்ன சட்டம் வழி வகுப்பது இச் சட்டத்தின் மிகப் பெரிய குறை.

விபசாரிகளை நாடிப் போகும் ஆண்களைத் தண்டிக்க ஷரத்துக்கள் இல்லாததோடு, சமீப காலமாகப் பரவி வருவதாகக் கூறப் படும் ஆண் விபசாரிகளைத் தண்டிக்கவும் சட்டம் இடம் கொடுக்கவில்லை.

வறுமை, காலம் தாழ்ந்த திருமணம், உள்ளத்தில் தோன்றும் சில பேராசைகளால் வீட்டை விட்டு ஓடிவரும் நிலை போன்றவையே பெண்களை இத்தொழிலை மேற்கொள்ளச் செய்கின்றன. சில சமயங்களில் கற்பழிப்புக்கு ஆளாகும் பெண்களைச் சமுதாயம் சரிவர நடத்தத் தவறுவதால் அப்பெண்கள் இத்தொழிலை நாடிப்போவதும் உண்டு.

பயணிகள், காலம் தாழ்ந்து மணக்கும் ஆண்கள், மனைவியைப் பிரிந்து இருக்கும் கணவன்மார்கள் போன்றோரே பெரும்பாலும் விபசாரிகளை நாடிப் போகின்றனர்.

சட்டமும் சமுதாயமும்

நீதி மன்றங்களுக்கு வரும் வழக்குகளைக் கவனித்தால் பெரும்பாலும் பொருளாதாரத்தில் அடிமட்டத்தில் உள்ள பெண்கள்தாம் இத்தகைய குற்றம் புரிந்துவிட்டுத் தண்டனை பெற நிற்கின்றனர்.

பொருளாதாரத்தில் உயர் மட்டத்தைச் சேர்ந்தவர்களிடையே விபசாரம் நடக்கவில்லையென்பதல்ல இதன் அர்த்தம்! ஆனாலும் உயர் மட்டத்தில் இருப்போர் தங்களது வசதியைக் கொண்டு சட்டத்தின் தளைகளுக்குள் சிக்காமல் தப்பிவிடுகின்றனர்.

காவல் துறையினரால் பிடிக்கப்படும் இம்மாதிரியான பெண்கள் தங்களது குற்றத்தை ஒப்புக்கொள்ளும் நிலையில் அவர்களது பொருளாதார நிலையையும் வாழ்க்கை நிலையின் பரிதாபத்தையும் உணரும் நீதிபதிகள் பெரும்பாலும் மனம் இரங்கிச் சொற்ப தண்டனைகளையே விதிக்கின்றனர்.

வறுமை இவர்களை மறுபடியும் இத் தொழிலைத்தான் நாடிப் போகச் செய்கிறது.

சட்டப்படி இக்குற்றத்துக்குத் தண்டிக்கப் படுபவர்களைச் சீரமைப்பு விடுதிகளில் சேர்த்துப் பராமரித்து வாழ்க்கையைச் செப்பனிட சட்டம் வழி வகுத்தாலும், இதனால் பெரிய நற்பயன் ஏதும் விளைந்ததாகத் தெரியவில்லை.

உடல் ஆரோக்கியம் இல்லாத பெண்களும் அதை மறைத்து இத்தொழிலில் ஈடுபட்டுச் சமூகத்தில் பால் நோய்களையும் இதர நோய்களையும் பரப்புகின்றனர். இவ்வாறு இருக்க சட்டத்தைத் தீவிர மாக்குவதால் இப்பிரச்னைக்கு முடிவு காணமுடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.

மாறாக சட்டத்தை ஓரளவு தளர்த்தினால் இப்பிரச்னை தீராவிடினும் குறையும் என்று நினைக்கிறேன்.

சில மேற்கத்திய நாடுகளைத் தவிர உலகத்தின் பெரும்பாலான நாடுகளிலும் விபச்சாரம் சட்டப்படி குற்றம்தான். ஆனாலும் சில காரணங்களை உத்தேசித்து இக் குற்றத்திற்கான சட்ட ஷரத்துக்களைக் கடுமையாக அந்நாடுகள் பின்பற்றுவதில்லை.

ஜனநாயக மரபுகளுக்கு அதிகம் மதிப்புக் கொடுக்காத இஸ்லாமிய நாடுகளைப் பற்றியும், கம்யூனிஸ நாடுகளைப் பற்றியும் நான் வாதிக்க விரும்பவில்லை. அவர்களது சட்டங்களே வேறுவகை.

✕ திருமதி சுதா ராமலிங்கம்



30.8.80 கலைவாணர் என்.எஸ்.கே நினைவு நாள்



● என். எஸ். கே.க்குப் புகழும் பொருளும் சேராத காலம் அது. அப்போது சதி லீலாவதி என்னும் படத்தில் நடிப்பதற்காக கல்கத்தாவுக்குச் சென்றிருந்தார். அவருடன் நடித்த நடிகர் ஒருவர் அவசரமாகத் தமிழகத்துக்குத் திரும்ப வேண்டியிருந்தது. தன்னிடம் பணம் இல்லாததால் அவர் கலைவாணரை அணுகி, பணம் தருமாறு கேட்டார்.


உடனே கலைவாணர், "என் பெட்டியில் நூறு ரூபாய் வைத்திருக்கிறேன். உனக்கு வேண்டிய பணத்தை எடுத்துக்கொள்" என்று சொல்ல, அந்த நண்பரும், ஆர்வம் மிகுதியால் உடனே பெட்டியை நோக்கி ஓடினார். சில அடிகள் எடுத்து வைத்திருப்பார். அப்போது பெட்டிச் சாவியைக் கலைவாணர் தரவில்லை என்பது அந்த நடிகரின் நினைவுக்கு வந்தது. உடனே திரும்பிக் கலைவாணரின் அருகில் சென்று, "ஆமா! பெட்டிச் சாவியைத் தராமே பணத்தை எடுத்துக்கோன்னு சொன்னா என்ன அர்த்தம்?" என்று கேட்டார்.

உடனே கலைவாணர், "நண்பரே! என் பெட்டியை நான் எப்போ பூட்டியிருக்கிறேன்? அது எப்பவும் திறந்த பெட்டிதான்!" என்றார்!

● அந்த நாட்களில் சென்னை மாநிலத்தில் மட்டுமல்ல — புதுடெல்லியிலும் கலைவாணரின் நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன. ஒருமுறை கதாகாலட்சேப நிகழ்ச்சியை முன்னிட்டு டெல்லிக்கு விமானத்தில் செல்ல இருந்தார். ஏதோ தவிர்க்க முடியாத காரணத்தால் அன்றையப் பயணம் ஒத்தி வைக்கப்பட்டது. அன்று அவர் பயணம் செய்ய இருந்த விமானம் எதிர்பாராத விதத்தில் விபத்துக்குள்ளாகியது. பலர் மரணம் அடைந்தனர்.

செய்தியைப் பத்திரிகையின் வாயிலாக அறிந்த அவரது நண்பர்கள் "நல்ல வேளை! நீங்க அந்த விமானத்தில் பயணம் செய்யாதது!" என்றனர் பரிவுடன்.

உடனே என். எஸ். கே. "நான் அந்த விமானத்தில் பயணம் செய்திருந்தா ஒருவேளை விபத்து ஏற்படாமல் இருந்திருக்கலாம்" என்றார் நம்பிக்கையுடன்!



—தமிழ்ப் பித்தன்

நமது நாட்டின் சட்டத்தை எவ்விதத்தில் தளர்த்தலாம் என்று பார்ப்போம்.

பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் 'சிவப்பு விளக்குப்' பகுதிகள் உள்ளன. இப்பிரதேசங்களில் லைசென்ஸ் பெற்று விபச்சாரம் நடத்த அரசே அனுமதிக்கிறது என்று பலர் எண்ணுகிறார்கள். இந்த எண்ணம் தவறானது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் விபச்சாரம் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்படுவதில்லை.

சிவப்பு விளக்குப் பகுதிகளில் நடக்கும் இத்தொழிலை, சில காரணங்களை உத்தேசித்து அரசு தீவிரமாக சட்டத்தைப் பிரயோகித்து அகற்ற முயலவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம்.

அந்தக் காரணங்கள் என்ன?

பெரிய நகரங்களில் வந்து போகும் பயணிகள் அதிகம்; தொழிலகங்கள் மிகுந்த அங்கு பணியாற்ற குடும்பத்தை விட்டுப் பிரிந்து வந்து நகரில் குடியேறும் தனிநபர்கள் அதிகம்... எனவே இதுபோன்ற பிரதான நகரங்களில் குறிப்பிட்ட சில இடங்களில் அரசிடம் லைசென்ஸ் பெற்று விபசாரம் நடத்த சில பெண்களை அனுமதிக்கும் விதமாகச் சட்டத்தை மாற்றலாம்.

இத்தொழில் செய்ய அனுமதிக்கப்படுபவர்களின் உடல் சுகாதாரம், வாழ்க்கை முறை, கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் போன்றவற்றைத் திட்டவட்டமாக வகுத்து அவைகளினின்று அவர்கள் பிறழா வண்ணம் பாதுகாத்து, மீறுபவர்களையும், லைசென்ஸ் பெறாமல் இத்தொழில் செய்பவர்களையும் மிகக் கடுமையாகத் தண்டித்து இதற்கேற்ப சட்ட ஷரத்துக்களைத் திருத்தலாம்.

சட்டபூர்வமாகச் சிவப்பு விளக்குப் பகுதிகள் இருக்கக் கூடாதென்று இருப்பினும் அதை அனுமதித்துக் கண்ணை மூடிக்கொள்வதை விட சட்டபூர்வமாகவே அனுமதித்து அப்பெண்களின் சுகாதாரம் முதலியவற்றைக் கண்காணித்து வருவதுமேலல்லவா?

இம்மாதிரி லைசென்ஸ் பெற்ற விபசாரிகளை அனுமதிப்பதால் எல்லோரும் கெட்டுப்போய் விடுவார்கள் என்று நினைப்பது சரியாகாது. விபசாரிகளை நாடிப் போவது இழி செயல் என்ற மனப்பான்மையைப் பிரசாரத்தின் மூலம் தீவிரமாக வளர்த்து வரவும் வேண்டும். இதையும் மீறி, மனத்தைக் கட்டுப்படுத்த முடியாதவர்களுக்கு ஒரு சட்ட ரீதியான வடிகால் அமைய இந்நிலை உதவும். இதனால் சமீபகாலமாக மலிந்து வரும் கற்பழிப்புக் குற்றங்கள் கூடக் குறையலாம்.

பால் நோய் பரவுவதைத் தடுக்கவும் இவ்வழிமுறை உதவும்.

ஆனால் ஒன்று—

அரசின் லைசென்ஸ் பெற்று இத்தொழிலை மேற்கொள்பவர்கள் அவ்வப்போது மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுவதோடு, அரசு விதிக்கும் நிபந்தனைகளைச் சரியாக அனுசரிக்கிறார்களா என்ற கண்காணிப்புக்கும் உட்பட்டாக வேண்டும். இதனை அரசு கவனிக்கத் தவறினால் சமுதாயம் மேலும் சீர்குலையும்.

பேட்டி : **நாயகன்**

புகைப்படம் : **மன்னை மூர்த்தி**

கவர்னர் பூன்

பம்பாய் துறைமுகத்திலிருந்து சற்றுஎட்ட இருந்த தமது மாளிகையின் தாழ்வாரத்திலிருந்த கவர்னர் சார்லஸ் பூன், கடலில் ஆடி நின்ற தமது கப்பற் படையை மிகுந்த அதிருப்தியுடன் நோக்கிப் பெருமூச்சு விட்டார். அப்பொழுதும் துறைமுகத்தில் பதினைந்து கப்பல்களுக்கு மேல் நின்றிருந்தாலும், அவற்றில் பீரங்கிகளும் மற்றும் பல அக்காலத்திய ஆயுத வசதிகளும் நிரம்ப இருந்தாலும், மொத்தமாகக் கப்பல்களையும் அவற்றின் தரத்தையும் மட்டும் கணக்கெடுத்துக் கொண்டால் அப்படை அல்ப சொல்பமானதல்லவென்பதை கவர்னர் பூன் உணர்ந்திருந்தும் அவர் மனத்தில் அதிருப்தி பெரிதும் குடிகொண்டிருந்தது. கனோஜி ஆங்கரேவிடம் அவர் அடைந்த தோல்விகள் அவர் மனத்தை உடைத்துக் கொண்டிருந்தன. தமது தோல்விகளுக்குக் காரணம் என்னவென்பதை அடிக்கடி ஆராய்ந்த அவருக்கு ஏதும் புலப்படவில்லை. அவரிடம் குமாஸ்தாவாயிருந்து, அவருக்குத் தலையாட்டிப் பொம்மையாயிருந்த ஒரே காரணத்தாலேயே கடற் படைத் தலைவனாக உயர்த்தப்பட்ட வால்டர் ப்ரௌன் தமது தோல்விகளுக்கெல்லாம் அவ்வப்பொழுது சரியான சமாதானங்களைச் சொன்னபடியாலும், அவை கூடியவரை திருப்தியாகவே இருந்தபடியாலும், கவர்னர் பூன் பிரிட்டிஷ் தோல்விகளின் உண்மைக் காரணத்தை உணரவில்லை. ப்ராம் என்ற பெரிய அக்கினிக் கப்பலையே கனோஜி கொளுத்திவிட்ட பிறகு கவர்னர் தமது கடற்படையின் திறமையில் பெரிதும் நம்பிக்கை இழந்து கிடந்தார். இத்தனை தோல்விகளும் அவமானமும் போதாதென்று மீண்டும் மேலைக் கடலில் டெய்லரும் இங்க்லண்டும் காஸண்ட்ராவில் உலாவ ஆரம்பித்து விட்ட செய்தியும் அவர்களுக்கு உதவ கடல் ராணி என்ற ஒரு கொள்ளைக்காரியும் ஏற்பட்டுவிட்டாள் என்ற செய்தியும் அவர் மனத்தைப் பெரிதும் குழப்பியிருந்தன. இவற்றின் விளைவாகக் கடலையும் கப்பல்களையும் பார்த்துக் கொண்டிருந்த கவர்னர் தமக்குப் பின்னால் ஏதோ காலடிச் சத்தம் கேட்கவே திரும்பிப் பாராமலே ''யூ இடியட் ஐ டோண்ட் வாண்ட் டு ஸீ யுவர் ஃபேஸ். கெட் அவே (அடே முட்டாளே! உன் முகத்தை நான் பார்க்க இஷ்டப்படவில்லை. போய்விடு)'' என்று எரிந்து விழுந்தார்.

கவர்னர் அளித்த அந்தப் பட்டத்தை வாங்கிக்கொண்டும், வந்தவன் அசையவில்லை. ''யுவர் எக்ஸலென்ஸி...'' என்று துவங்கினான் மெதுவாக.

''எக்ஸலென்ஸி! தேர் ஈஸ் நதிங் எக்ஸலெண்ட் ஹியர். கெட் அவே (எக்ஸலன்

கடல்ராணி

சாண்டில்யன்



லியா! இங்கு எதுவும் சிறப்பாயில்லை. போய் விடு)'' என்றார் சிறிதும் திரும்பிப் பார்க்காமலே.

இருப்பினும் பின்னால் நின்றவன் போகவில்லை. ''ஐ ஹாவ் நியூஸ் யுவர் எக்ஸலென்ஸி (தங்களுக்குச் செய்தி இருக்கிறது எக்ஸலென்ஸி)'' என்று அவன் மீண்டும் சொன்னான்.

கவர்னர் பூனின் முகத்தில் சிறிது சிந்தனை படர்ந்தது. ''இது ப்ரௌன் குரலல்ல'' என்று தீர்மானித்துக் கொண்டதால் சிறிது கழுத்தை மட்டும் திருப்பினார். பின்னால் நின்றவனைப் பார்த்ததும் முழுதும் திரும்பி நின்றார். ''ஐ தாட் இட் வாஸ் ப்ரௌன் (உன்னை ப்ரௌன் என்று நினைத்தேன்)'' என்றும் சொன்னார்.

காப்டன் ஜேம்ஸ் மாக்ரே கால்களைக் குவித்து செங்குத்தாக ராணுவ பாணியில் நின்றிருந்தான். ''பார் எ கவர்னர் மிஸ்டேக்ஸ் ஆர் பர்மிஸபில் (கவர்னர் தவறுகள் செய்யலாம்)'' என்று மிக மரியாதையுடன் சொன்ன காப்டன் மாக்ரே கவர்னர் முகத்தில் சரேலென ஏறிவிட்ட கோபத்தைக் கண்டதும் அதை அதிர்ச்சியால் தான் நீக்க முடியும் என்பதை உணர்ந்து கொண்டதால் ''யுவர் எக்ஸலென்ஸி! விலானியர் ஈஸ் ஹியர் (விலானியர் இங்கிருக்கிறான்)'' என்று ஒரு வெடியை வீசினான்.

அடுத்து கவர்னரின் செய்கை மிக விபரீதமாக இருந்தது. நன்றாக முறுக்கிவிடப்பட்ட அவர் டமூப்பு மீசை இரு முறை ஏறி இறங்கியது உதடுகளின் எழுச்சி தாழ்ச்சியால். ''விலானியர்! யூ மீன் பூஷே? தட் பிரெஞ்ச் ராஸ்கல்? (வி லானியர்! அதாவது பூஷேயைச் சொல்கிறாயா? அந்த பிரெஞ்சு ராஸ்கலா?)'' என்று இரைந்து எரிந்து விழுந்தார் கவர்னர்.

''எஸ் யுவர் எக்ஸலென்ஸி!''

''தட் பெலோ ஈஸ் எ டேன்ஜரஸ் பைரேட் (அவன் அபாயமான கொள்ளைக்காரனாயிற்றே?)''

''அவன்தான் எக்ஸலென்ஸி!''

''சரி சரி அழைத்து வா.''

''அவன் இங்கில்லை.''

எக்ஸலென்ஸி மறுபடியும் வெடித்தார். ''யு ஸெட் ஹி வாஸ் ஹியர் (அவன் இங்கிருப்பதாக நீதான் சொன்னாய்)'' என்றார்.

''வென் ஐ ஸெட் ஹியர் ஐ மென்ட் த அரேபியன் ஸீ போர்ட் (இங்கிருக்கிறான் என்று சொன்னது அரபிக்கடலில் இருக்கிறான் என்பதைக் குறிக்க)'' என்றான் மாக்ரே.

''வெரி நைஸ் வெரி நைஸ் (நல்லது, மிகவும் நல்லது)'' என்றார் கவர்னர் எரிச்சலைப் பெரிதும் காட்டி.

''எது எக்ஸலென்ஸி?''

மகனா, பேரனா?

'கடல் ராணி' கதையில் வரும் வரலாற்றுப் பாத்திரம் ஒன்றைப் பற்றிச் சந்தேகம் கேட்டு ஒரு மாணவர் எழுதியிருக்கிறார். சந்தேகம் கல்லூரிப் பாடப் புத்தகத்தைப் பற்றியிருப்பதால் பதில் பத்திரிகையிலேயே பிரசுரிக்கப்படுகிறது.

சந்தேகம்:

அன்புள்ள திரு சாண்டில்யன் அவர்களுக்கு.

கடல் ராணியில் துலாஜீ ஆங்ரே கனோஜீயின் மகன் என்று குறிப்பிட்டு உள்ளீர்கள் (அத்தியாயம் 16). நான் History of India From 1526 A.D. to 1947 A. D. புத்தகத்தைப் படிக்க நேர்ந்தபோது அதை எழுதிய ஆசிரியர் (V. N. Hari Rao, Sri Venkateswara University Tirupathy) தனது நூலில் பக்கம் 190ல் End of the Maratt sea power என்னும் தலைப்பில் 5வது வரியில் After his death (Kanhoji) in 1729 Tulaji Angre, his grandson Commanded the Maratta navy என்று உள்ளது. இதன்படி பார்த்தால் துலாஜீ, கனோஜீயின் பேரனாகிறார். துலாஜீ ஆங்ரே கனோஜீயின் மகனா பேரனா என்பது குழப்பமாக உள்ளது.

பல சரித்திரக் கதைகளைப் படைத்த நீங்கள் பலர் எழுதிய வரலாற்றைப் படித்திருப்பீர்கள். இவற்றில் எது சரியானது என்பதை தெரிவிப்பதன் மூலம் நீங்கள் என் போன்ற சரித்திரம் பயிலும் மாணவர்களுக்கு உதவுவீர்கள் என்று நம்புகிறேன்.

பா. முத்துக்குமரன்
அறிஞர் அண்ணா அரசு கல்லூரி, ஆத்தூர்

விளக்கம்:

மதிப்புக்குரிய பேராசிரியர் ஹரி ராவ் எந்த ஆதாரத்தின் மேல் துலாஜீ ஆங்கரேயை கனோஜீயின் பேரனாகக் குறிப்பிட்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் மகாராஷ்டிர வரலாற்றுப் பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் எழுதிய நூல்களில் துலாஜீயை கனோஜீயின் மகன் என்று திட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். கீழ்க்கண்ட ஆதாரங்களைக் கவனிக்கவும்:

1. A History of the Maratha people - by C.A. Kincaid, C. V. O. I. C. S., and Rao Bahadur D. B. Parasnis. Vol II Page 248.

"Kanhoji left two legitimate sons Sekhoji and Sambhaji. Kanohji had also left four illegitimate sons, Yesaji, Manaji, Tulaji and Dhonaji.

2. New History of the Marathas - by G.S. Sardesai - Vol II page 151

"Sekhoji (eldest son of Kanoji) died of a short illness on 28th August 1733... He exercised a wholesome check on his three valient brothers Sambhaji, Manaji and Tulaji.

3. "The Pirates of Malabar-by Col John Biddulph. Chapter X Page 203.

"In June 1729 Conaji Angria died. He left two legitimate sons, Sakhajee and Sambhajee, three illegitimate sons, Tulajee, Manajee and Yesajee.

மேற்கண்ட மூன்று வரலாற்று நூல்களும் கன்னிமாரா நூலகத்தின் ஆராய்ச்சிப் பிரிவில் இருக்கின்றன.

—சாண்டில்யன்

''லிவாலியர் இங்கிருப்பது. ஏற்கனவே டெய்லர், இங்க்லண்ட், ஆங்கரே. போதாக் குறைக்கு இவன். இங்கிலாந்தின் வாணிபத்தை நாசம் செய்ய வேறென்ன வேண்டும்?'' என்று பொருமிய கவர்னர் ''அவன் இப்பொழுது எங்கிருக்கிறன்?'' என்றார்.

காப்டன் மாக்ரேயின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தெரியவில்லை. ''திட்டமாகத் தெரியாது. கடைசியில் அவனைப் பார்த்தவர்கள் லாத் வித்தியின் கடற்படையினர்.''

''தட் ஈஸ் குட்'' என்றார் கவர்னர். ''நல்ல வேளை நமது எதிரிகளிடம் சிக்கவில்லை. நண்பர்களிடம் சேர்ந்திருக்கிறன்'' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டார்.

இந்த மகிழ்ச்சியை உடனடியாக உடைக்க இஷ்டப்படாத காப்டன் மாக்ரே சில விநாடிகள் மௌனமாக நின்றான். ''யூ ஹாவ் ஆல் ஆப் எ ஸடன், பிகம் டம் (நீ திடீரென்று மௌனமாகிவிட்டாய்)'' என்று குற்றம் சாட்டினார் கவர்னர்.

காப்டன் மாக்ரேயின் இதழ்களில் புன்முறுவல் அரும்பிற்று. ''ஐ ஆம் டம் பிகாஸ் யுவர் எக்ஸலென்ஸி ஈஸ் ஜூபிலண்ட் (தங்கள் மகிழ்ச்சி கண்டு ஊமையானேன்.)'' என்று மாக்ரே கூறினான்.

கவர்னரின் குதூகலம் அதிகமாயிற்று. ''ஹொய் ஷுட் ஐ நாட் பி ஜூபிலண்ட்? ஈஸ் நாட் லிவாலியர் த கிரேடஸ்ட் ஹீரோ ஆப் த ஸெவன் ஸீஸ், ஜாயிண்ட் அவர் ப்ரெண்ட் லாத் வித்தி? டஸ் இட் நாட் மீன் த எண்ட் ஆப் த ராஸ்கல்ஸ் ஹூ டிபீட் அண்ட் ப்ளண்டர்ட் யூ? வித் த கம்பைண்ட் மைட் ஆப் த இங்கிலீஷ் அண்ட் த வித்தி. இட் ஷுட் பி ஈஸி டு விக்விடேட் டெய்லர் அண்ட் இங்க்லண்ட் (நான் ஏன் குதூகலப்படக் கூடாது? ஏழ் கடலின் இணையற்ற வீரன் லிவாலியர் நமது நண்பரான வித்தியுடன் சேர்ந்துவிடவில்லையா? உன்னை தோற்கடித்து, கொள்ளையும் அடித்த அந்த இரண்டு அயோக்கியர்களின் முடிவுக்கு இந்த நட்பு காரணமாகாது? இங்கிலீஷ்காரர்கள் வித்தி இவர்களின் கட்டு பலத்தால் நாம் டெய்லரையும் இங்க்லண்டையும் அழிப்பது சுலபமில்லையா?'' என்று கவர்னர் அதி உற்சாகத்தைக் காட்டினார்.

அந்த உற்சாகத்தில் கவர்னர் கதை முழுவதையும் மாற்றிவிட்டதை மாக்ரே கவனித்தான். முதலில் அவர் அபிப்பிராயத்தில் அயோக்கியனாக இருந்த லிவாலியர் திடீரென ஏழ்கடல் வீரனாக மாறிவிட்டதையும், அவனும் வித்தியும் சேர்ந்து கொண்டதாகத் தாமாக நினைத்துக் கொண்டு கவர்னர், டெய்லரையும் இங்க்லண்டையும் ஏற்கனவே அழித்துவிட்டதாகப் பகற்கனவு கண்டதையும் எண்ணிய மாக்ரே அடுத்து என்ன சொல்வது, எப்படி விஷயத்தை விளக்குவது என்று தெரியாமல் விழித்தான்.

ஆனால் அவசரக் குடுக்கையான கவர்னர் பேச்சை நிறுத்தவில்லை. 'நீ போய் வித்தியைக் கலந்துகொள். முடியுமானால் லிவாலியரை இங்கு அழைத்து வா. நாம் கொள்ளைக்காரர்களை அராபியக் கடலிலிருந்து விரட்டத் திட்டமிடுவோம்'' என்றார்.



அட்டைப்பட அணங்கு

சுஜாதா. இளமைத் தோற்றம், திராட்சைக் கண்கள், துடிப்பான நாசி. சுஜாதா ஒரு பேசும் பொற்சித்திரம் என்றும் மிகையல்ல. ஆந்திரா பல்கலைக் கழகத்தின் புதுமுக வகுப்புவரை படித்தாள். பரதநாட்டியம், குச்சுபுடி தவிர ஓரியண்டல் நடனத்திலும் சுஜாதாவுக்குப் பயிற்சி உண்டு.

சுஜாதா வீட்டில் யார் போய்ப் பார்த்தாலும் அவர்களைப் பிரமிக்க வைப்பது ஒரு பெரிய நூல் நிலையம்தான். பிரம்மாண்டமான சுஜாதாவின் நூல் நிலையத்தில் அவருக்குப் பிடித்த புத்தகங்கள் கலை சம்பந்தமானவையே.

''புத்தகங்களுக்கு அடுத்தபடியாக நீச்சல், சைக்கிள் சவாரி இரண்டும் எனக்குப் பிடிக்கும். ஏன் தெரியுமா? உல்லாசத்துக்கும் உல்லாசம் அதே நேரத்தில் நல்ல தேகப் பயிற்சி'' என்கிறார் இந்தப் பதினெட்டு வயதுக் குமரி. தமிழ்த் திரைப் படங்கள் சிலவற்றில் இவர் ஒப்பந்தமாகியுள்ளாராம்.

பேட்டி: ''சிக்கி''

மேலட்டை வண்ணப்படம் எடுத்தவர்: ஹரீஷ்

காப்டன் மாக்ரே இந்தத் திட்டங்களைக் கேட்டு முகம் சுளித்தான். கவர்னர் அருகில் வந்து தமது நகைச்சுவையைக் காட்டினார்; அவன் முதுகில் சந்தோஷத்தால் அறைந்தார். 'யூ பீல் ஸாரி பிகாஸ் விக்டரி ஈஸ் ஜெனஸர்ட்டன். யூ ஹாவ் ஸோ பார் நோன் ஒன்லி டிபீட் (இப்பொழுது வெற்றி நிர்மாணமாயிருப்பதால் வருந்துகிறாய் போலிருக்கிறது? இருக்கும். நீ தோல்வியைத்தானே இதுவரை கண்டிருக்கிறாய்?)'' என்று சுட்டிக் காட்டினார் உற்சாகத்துடன்.

அப்பொழுதுதான் மாக்ரே தனது வெறுப்பைக் காட்டினான். ''எக்ஸலென்ஸி! யூ ஜம்ப் டு கன்க்ளூஷன்ஸ்'' என்றான்.

''வாட் டு யூ மீன் (என்ன சொல்கிறாய் நீ?)'' கவர்னர் சிறிது நிதானத்தையும் சந்தேகத்தையும் அடைந்தார்.

''ஐ டிட் நாட் ஸே லிவாலியர் ஜாயிண்ட் வித்தி (லிவாலியரிடம் வித்தி சேர்ந்துவிட்டதாக நான் கூறவில்லை)'' என்று மெள்ள விஷயத்தை அவிழ்த்தான்.

கவர்னர் குதூகலம் மறைந்தது விநாடியில். அவர் முகத்தில் பழையபடி சினம் துளிர்த்தது. ''வாட் எல்ஸ் டிட் யூ ஸே (வேறு என்ன சொன்னாய் நீ?)'' என்று வினவினார் கோபம் குரலிலும் ஒலிக்க.



''அவர் ஸ்டைல் மன்னன் ரஜினியின் ரசிகராம்''

''அதற்காக வடையை அப்படித் தூக்கிப் போட்டுத்தான் தின்னணுமா?''

''லிவானியரைக் கடைசியாகப் பார்த்தவர்கள் ஸாத்வீத்தியின் கடற் படையினர் என்று சொன்னேன்'' என்றான் மாக்ரே.

''அதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டார் கவர்னர்.

''அர்த்தம் எதுவாக இருந்தாலும் ஸாத்வீத்தியுடன் லிவானியர் சேர்ந்துவிட்டான் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் லிவானியரைப் பார்த்தவர்கள் அவனால் தோற்கடிக்கப்பட்டவர்கள்.''

''ப்ரொஸீட் (மேலே சொல்)'' கவர்னர் கம்பீரமாக உத்தரவிட்டார்.

''லிவானியர் ஸாத்வீத்தியின் கப்பல்கள் இரண்டைச் சூறையாடினான். பிறகு கொளுத்திவிட்டான். இதுதான் எனக்குக் கிடைத்த செய்தி.''

''இதை உடனடியாக ஏன் சொல்லவில்லை?''

''தங்கள் குதூகலம் அதற்கு இடம் கொடுக்கவில்லை.''

கவர்னர் சங்கடத்தில் ஆழ்ந்தார். தான் அவசரப்பட்டு விட்டதை உணர்ந்ததால் மீண்டும் மாக்ரேக்கு முதுகைக் காட்டிக் கடலில் ஆடி நின்ற கப்பல்களைக் கவனித்தார். மீண்டும் திரும்பினார். ''வாட் எல்ஸ் டூ யூ நோ அபௌட் லிவானியர்? (லிவானியரைப் பற்றி உனக்கு வேறு என்ன தெரியும்?)'' என்று வினவினார்.

மாக்ரே சிறிதும் நிதானிக்காமல் பதில் சொன்னான்! ''லிவானியர் கப்பலில் ப்ரெஞ்சுக்காரர்களைத் தவிர மால்வானிகளும் கொங்கணிகளும் இருந்தார்களாம்'' என்று.

''வாட் வர் தே டூயிங் இன் ஹிஸ் ஷிப்? (அவன் கப்பலில் அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்?)'' என்று கேட்டார் கவர்னர். அவர் குரலில் உஷ்ணம் மீண்டும் ஏறிக் கொண்டிருந்தது.

''லிவானியருக்கு உதவிக் கொண்டிருந்தார்கள்'' என்றான் காப்டன் மாக்ரே.

''மால்வானீஸ்! த பைரேட்ஸ்? ஆல் த டாம் நேடிவ்ஸ் ஆப் திஸ் கண்ட்ரி ஆர் பைரேட்ஸ் (மால்வானிகள்! அந்தக் கொள்ளைக்காரர்களா? இந்தச்சனியன் பிடித்த நாட்டில்எல்லோரும் கொள்ளைக்காரர்கள்)'' என்று சீறினார், அலுத்துக்கொண்டார் கவர்னர்.

மாக்ரே மீண்டும் முகம் சுளித்தான். ''ஒரு சிலர் கொள்ளைக்காரர்களாக இருப்பதால் ஒரு நாட்டையே வசைபாடக் கூடாது. டெய்லரும் இங்க்லண்டும் கொள்ளைக்காரர்கள். அதற்காக நமது நாட்டையே நொந்து கொள்வதா?'' என்று வினவினான்.

கவர்னர் சரியாக எதையும் யோசிக்கும் நிலையில் இல்லை. ''சரி நீ எதற்காக இங்கே வந்தாய்?'' என்று வினவினார்.

மாக்ரே நிதானமாகப் பதில் சொன்னான். ''எனக்குப் பத்துக் கப்பல்கள் வேண்டும்'' என்று.

''எதற்கு?''

''டெய்லரையும் இங்க்லண்டையும் சிறை செய்ய. காஸண்ட்ராவைத் திரும்பப் பெற.''

''அத்தனை சுலபமா அது?''

''இப்பொழுது சுலபம்.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''காஸண்ட்ரா சிந்து துர்க்கத்தில் சிக்கிக் கிடக்கிறது.''

''யாரிடம்?''

''கடல் ராணியிடம்.''

கவர்னர் மாக்ரேயை உற்று நோக்கினார். ''யூ வாண்ட் டு கோ அகெய்ன்ஸ்ட் எ உமன்? (நீ ஒரு பெண்ணை எதிர்த்துச் செல்ல நினைக்கிறாயா?)'' என்று வினவினார் கண்களில் விஷமம் தாண்டவமாட.

''அவள் சாதாரணப் பெண்ணல்ல.''

''அசாதாரணம் என்ன இருக்கிறது அவளிடம்?''

''அவளிடம் டெய்லரும் இங்க்லண்டும் சிறைப்பட்டிருக்கிறார்கள்.''

கவர்னர் சிறிது சிந்தித்தார். ''சரி, பத்துக் கப்பல்களை அழைத்துச் செல். டெய்லர் கூட்டத்தை இங்கு கொண்டுவா. அவர்கள் அனைவரையும் இங்கு தூக்கிலிடுகிறேன்'' என்றார் முடிவில்.

மிகுந்த திருப்தியுடன் திரும்பினான் மாக்ரே ''ஒரு நிமிஷம்'' என்று கவர்னர் அவனை நிறுத்திவிட்டு அவன் அருகில் வந்து ''காப்டன்'' என்று மெதுவாக அழைத்தார்.

''எஸ் எக்ஸலென்ஸி!'' என்றான் மாக்ரே.

''உனக்கும்நான் ஒருதகவல் கொடுக்கமுடியும். அனந்த் என்று ஒருவன் இருக்கிறான் அந்தக் கூட்டத்தில். அவன் அபாயமானவன். மிக தந்திரசாலி யென்றும் கேள்வி'' என்றார்.

''அவனை எனக்குத் தெரியும்'' என்றான் மாக்ரே.

''எப்படித் தெரியும்?''

''அவன் எனது நண்பன். நமது கட்சியில் இருக்கிறான்.''

''அவனை எங்கு சந்தித்தாய்?''

''அது என் ரகசியம்'' என்ற மாக்ரே கவர்னருக்குத் தலை வணங்கி மாடிப் படிகளில் இறங்கிச் செல்ல முயன்றான். இரண்டாவது படியில் வால்டர் ப்ரௌன் நின்றிருந்தான். ''கவர்னரிடம் நீ ஏன் முக்கிய விஷயத்தை மறைத்தாய்?'' என்று வினவினான் ப்ரௌன்.

''என்ன விஷயம்?'' என்று கேட்டான் மாக்ரே.

''கனோஜியிடம் நீ செய்துகொண்ட ஒப்பந்தம்'' என்றான் ப்ரௌன்.

அடுத்த விநாடி ப்ரௌன் மிரண்டு விழித்தான். அவன் வாய் அடைத்துவிட்டது. மாக்ரேயின் ட்ரௌஸர் பையிலிருந்து சிறு துப்பாக்கியொன்று கிளம்பி அவன் முகத்துக்கு எதிரே நிலைத்து நின்றது. (தொடரும்)

கராத்தே பயிற்சி-3



...வெட்டுதல்

...குத்துதல்



கராத்தே பயிற்சி பெண்களுக்குத் தற்காப்புக்கு அத்யாவசியம். தமிழ் நாட்டில் கோஜின் ரியூ கராத்தே கழகத்தில் சுமார் முந்நூற்றைம்பது பெண்கள் பயிற்சி எடுத்துக்கொள்கிறார்கள்.

இயற்கையிலேயே பெண்களுக்கு உடல் வாகு மென்மையானது. கோஜின் ரியூ முறையில் பெண்களுக்கெனத் தனிப் பயிற்சி உண்டு.

கத்தி முறை வெட்டுதல்

எதிரியைத் தாக்கும்போது சரியான முறையைக் கையாள வேண்டும் என்பதை டோனி பொன்னையா விளக்குகிறார். எதிரி குத்தும்போது அதைத் தடுத்து எதிரியின் கழுத்தில் கத்தி முறையில் வெட்ட வேண்டும் என்பதைத் திருமதி டோனி பொன்னையாவுக்குக் கற்றுத் தருகிறார். திருமதி டோனி பொன்னையாவின் கைகளை ஆசான் சரிப்படுத்துவதைப் படத்தில் காணலாம். (படம் 1)

சட்டி முறை குத்துதல்

எதிரி தாக்க வரும்போது அதைத் தடுத்து, நான்கு விரல்களையும் நேராக நீட்டி கட்டை விரலை உள்புறமாக மடக்கி சட்டி போல் குத்த வேண்டும். (படம் 2)

பயிற்சியாளர்:
டோனி பொன்னையா

விளக்கம்: **குண்டுமணி**
படங்கள்: **உத்ரா**

தகுந்த வரன்

எஸ். சுந்தரராஜன்

ஸ்ரியாவை நான் முதன் முதலில் பார்த்த போது அவள் மெட்ரிக் படித்துக் கொண்டிருந்தாள்.

''மீட் ஸ்ரியா, மை ஸிஸ்டர். ஸ்ரியா, இவன் என் சிநேகிதன் ராகவன்.''

''ஹலோ!'' என்றாள் அவள். நுனி நாக்கில் ஆங்கிலம் நளினமாக நர்த்தனம் புரியும் என்பது புரிந்தது. பதினாறு வயதின் இனிமை பரவிக் கிடந்ததும் நன்றாகத் தெரிந்தது.

''ஹலோ!'' என்றேன்.

ஸ்ரியா என் நண்பன் கோபாலனின் தங்கை. கோபாலன் என்னுடன்தான் எஞ்ஜினீயரிங் கல்லூரி விடுதியில் தங்கி இருந்தான். அவன் தந்தைக்கு மதுரைக்கு மாற்றல் ஆகி வந்து செட்டில் ஆனபோது, என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துப்போய் அறிமுகப்படுத்தி வைத்தான்.

''ஐ ஆம் டுயிங் மை மெட்ரிக்!'' என்றாள். 'ஆக்ஸெண்ட்' என்று சொல்வார்களே, அது அங்கங்கே போய்ச் சரியான இடத்தில் உட்கார்ந்து கொண்டது.

''அ....'' — ஒரு விநோதமான ஒலியை எழுப்பினேன். என்மேல்தான் கோளாறு. எஸ். எஸ். எல். ஸி. வரை தமிழ் மீடியம். அதன் பிறகு ஆங்கில மீடியம் பி.யூ.ஸி. என்றுதான் பெயர். ஆனால், ஃபிஸிக்ஸ் லெக்சரர் பாடம் எடுக்கும்போது 'ஆர்க்கிமிடீஸ் பிரின்ஸிபிள் என்னப்பா சொல்லுது?' என்றுதான் கேட்பார்.

சே, அசிங்கம். அவள் என்ன நினைப்பாள் என்னைப் பற்றி! என்னை விட நாலு வயசு சின்னவள். ஆங்கிலத்தில் புகுந்து விளையாடுகிறாள்.

அப்போதே ஸ்ரியா மேல் எனக்கு மதிப்பு ஏற்பட்டு விட்டது.

கோபாலனின் அப்பாவைச் சந்தித்தேன்.

''கமான் யங் மேன்!'' — அவர் என் கையைப் பிடித்துக் குலுக்கினார். கணீரென்று பேசினார்.

''என்ன யங் மேன்? ஹௌ ஆர் யுவர் ஸ்டடீஸ்?''

''பரவாயில்லை சார்!''

''ம்... என்ன கோபால் இன்னமும் ஹாஸ்டலிலேயே இருக்கேன்னு சொல்லறான்....''

''யெஸ் சார்.. ஃப்ரெண்ட்ஸ் எல்லாம்..''

''ஐ நோ.. ஐ நோ...'' — அவர் கண்களைச் சிமிட்டினார்.

''ஓகே மை பாய். ஐ ஹோப் ஐ வில் சீ யூ கொயட் ஆஃப்டன்.''

''ஷ்யூர் சார்.''

அதன் பிறகு கோபாலனின் அம்மாவும் என்னை அடிக்கடி வரும்படி கேட்டுக்கொண்டாள்.

இதெல்லாம் ரொம்பப் பழைய கதை. சுமார் நான்கு வருடங்களுக்கு முந்தைய கதை. அதன் பிறகு நான் கோபாலனின் வீட்டுக்கு அடிக்கடி போனதும் ஸ்ரியாவுடன்



கொஞ்சம் கொஞ்சமாகக் கலகலப்பாகப் பேச ஆரம்பித்ததும், என்ஜினீயரிங்கை முடித்துவிட்டு மதுரையிலேயே நான் மட்டும் வேலை தேடிக் கொண்டதும் சுருக்கமாகத் தெரிந்து கொண்டால் அது போதும்.

நான் வீட்டில் நுழைந்ததும் ஸ்ரியா கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

''அதானே, என்னடா சனிக் கிழமை ஆயிடுத்தே, அஞ்சரை மணி அடிச்சுடுமோன்னு பயந்து போயிட்டேன்.''

''அஞ்சற்க!''

நான் போய் அவள் எதிரில் அமர்ந்து கொண்டேன்.

''அம்மா! சனிக்கிழமை அஞ்சரை மணி ஆயாச்சு!'' என்றாள் ஸ்ரியா உள் பக்கம் திரும்பி. கோபாலன் உள்ளிருந்து வந்தான்.

''ஹலோ!''

''ஹலோ!''

கோபாலன் மேல் படிப்பில் இன்னும் இருந்தான். நான்தான் படிக்கப் பொறுமையும், ஆசையும் இல்லாமல், வேலையும் வாகாய் அமையச் சட்டென்று சேர்ந்து விட்டேன்.

''உனக்கு விஷயம் தெரியுமோ?'' என்று ஆரம்பித்தான் அவன்.

''என்ன தெரியாதே!''

''ஓ...நத்திங். டோன்ட் டெல் ஹிம், கோபால்!''

நான் ஸ்ரியாவைப் பார்த்தேன். அவள் முகம் சிவந்து கொண்டிருந்தது. ஸ்ரியா, நீதான் எத்தனை அழகாய் இருக்கிறாய்! ஸ்ரியா, நான் உன்னை 'அட்மைர்' செய்கிறேன். செய்து கொண்டே . இருக்க விரும்புகிறேன்.

''நாளைக்கு ஸ்ரியாவைப் பெண் பார்க்க வரப்போறாங்களாக்கும்!''

''இஸ் இட்?'' — நான் உற்சாக மிகுதியில் எழுந்து நின்று கொண்டேன். ''ஓ அவர் ஸ்வீட் ஸ்ரியா ஈஸ் கெட்டிங் மேரீட்! என்கிட்டச் சொல்லவே இல்லையே?''


ஸ்ரியா விக்கியில் முகத்தைப் புதைக்க இடம் கிடைக்குமா என்று தேடிக் கொண்டு இருந்தாள். அவள், அம்மாவும் வந்து பேச்சில் கலந்து கொண்டாள். பெண் பார்க்க வருபவர்களைப் பற்றி எல்லாம் சொன்னாள்,

''நாளைக்கு நீயும் இங்கேதான் இருக்கணும்!'' என்றாள் உரிமையுடன்.

''ஓ ஷ்யூர்! நான்தான் ஸ்ரியா கல்யாணத்துக்கும் முதல் விருந்தாளி!''. —நான் ஸ்ரியாவைப் பார்த்தபடி புன்னகைத்தேன்.

மறுநாள் வந்து பெண் பார்த்துவிட்டுப் போனார்கள்.

''என்ன ராகவன்? வாட் ஈஸ் யுவர் ஒப்பீனியன்?'' — கோபாலின் அப்பா



வழக்கமான தம் வெண்கலக் குரலில் கேட்டார்.

''உங்க இஷ்டம்.. எதுவோ...''

''நோ, யுவர் ஒப்பீனியன் ப்ளீஸ்!'' —ஸ்ரியா தீர்மானமாகக் கேட்டாள்.

''உங்க இஷ்டம்தான்னு சொன்னேனே''

''இல்லே ராகவன். உன்னோட அபிப்பிராயம் என்னன்னு தெரிஞ்சுக்கணும்னு தான் கேக்கறோம். சொல்ல வேணும்னு இந்த வீட்டிலே நீயும் ஒருத்தனு இத்தனை நாள் நாங்க நினைச்சது எல்லாம் தப்புன்னு தெரிஞ்சுப்போம்!'' என்றாள் ஸ்ரியாவின் அம்மா.

''வந்த வரனோட படிப்பு என்னன்னு நேத்துச் சொன்னபோது கூட எனக்குத் தோணலே. ஆனா, அப்புறம் யோசிச்சுப் பார்த்தா, ஸ்ரியாவை இன்னும் உசந்த இடத்திலே கொடுத்தாத் தேவலேன்னு நினைக்கிறேன். ஐ மீன்....''

ஸ்ரியாவின் அப்பா கொஞ்சம் யோசித்தார்.

''யூ மீன் லைக் அன் என்ஜினீயர், டாக்டர்''

''நோ. ஈவன் மோர் தன் தட். எம்.பி.ஏ. ஐ.ஏ.எஸ். வரன் எல்லாம் கிடைக்காதா, என்ன? அவசரப்பட்டு ஸ்ரியாவைக் கொடுக்க வேணும். அவள்கிட்ட அழகு இல்லையா, உங்ககிட்ட வசதி இல்லையா?''

''கரெக்ட். அதேதான் நானும் நினைச்சேன்.'' — கோபாலன் என்னுடன் சேர்ந்து கொண்டான்.

''அப்புறம் ஏது அப்பீல்?'' என்றாள் அவன் அம்மா.

''தேங்க்யூ, ராகவன்!'' — ஸ்ரியாவின் அப்பா கம்பீரமாக நடந்து போனார்.

''ஸ்ரியா, சாரி! நான் ஏதோ உளறினதுக்கு இத்தனை மதிப்பு வச்சு...''

''ராகவ், உங்களுக்கு என் மேல் அக்கறை இல்லேன்னு அந்த மாதிரிப் பேச மாட்டீங்கன்னு எனக்குத் தெரியாதா?''

அதன் பிறகு ஒரு என்ஜினீயர் வீட்டார் வந்து பெண் பார்த்துவிட்டுப் போனார்கள்.

''என்ன சொல்றே, ராகவன்?'' — ஸ்ரியாவின் அம்மா ஆரம்பித்தாள்.

''வரன் ஓ.கே. ஆனால் அவர்கள் போடும் கண்டிஷன்....''

''என்னது? ஸ்ரியா வேலை பார்க்க வேண்டும் என்பதா? பார்த்துவிட்டுப் போறாள். இப்பத்தான் நிறையப் பேர் வேலை பார்க்கிறார்களே!''

''இடது பக்கத்து போர்ஷன் காரிக்கும் வலது பக்கத்து போர்ஷன் காரிக்கும் சண்டை''

''அடடா! எதற்காக சண்டை?''

''மாடி போர்ஷன் காரியுடன் நான் சண்டை போட்டது சரி என்கிறேன் ஒருத்தி; தப்பு என்கிறாள் இன்னொருத்தி!''



''இருக்கலாம். ஆனாலும் இப்படி ஏதோ பிஸினஸ் டீலுக்காகப் பேசறது என்னவோ மாதிரி இல்லே? அப்ப என்ன நம்ம ஸ்ரியாவுக்கு வேலை பார்த்துத்தான் ஆகணும்னு தலையெழுத்தா என்ன?''

''கரெக்ட்! நான் வேலை பார்க்கத் தயாராக இல்லே'' என்றாள் ஸ்ரியா.

பி.ஈ. வரன் தள்ளுபடி செய்யப்பட்டது.

டாக்டர் ஒருவர் ஸ்ரியாவைப் பெண் பார்க்க வந்தார். நல்ல பிராக்டீஸ் நடப்பதாகச் சொன்னார்கள். கைராசிக்காரர் என்று பெயர் பெற்றவராம். பணத்தில் கொழிக்கிறாராம்.

இவரும் என்னால் தள்ளுபடி செய்யப்பட்டார். காரணம், இவர், ஸ்ரியாவின் அழகுக்கும், உயரத்துக்கும் தகுந்த ஜோடியாக இருப்பார் என்று தோன்றவில்லை.

''அஃப்கோர்ஸ், ஆண் பிள்ளைகளுக்கு அழகு தேவையில்லைதான். ஆனால் ஸ்ரியாவுடன் அவர் நிற்கும்போது மாப்பிள்ளை பெண்ணை விட உயரம் குறைச்சலா என்று யாரும் கேட்டுவிடக் கூடாதே!''

''யாரைப் பார்த்தாலும் குறை சொல்லிக்கிட்டே போனா என்ன அர்த்தம்?'' கோபாலன் இரைந்தான். ''ஸ்ரியா, உன் அபிப்பிராயம் என்ன?''

''ஏன் கத்தறே? உன் ஃப்ரெண்ட் என்னை நமக்குக் கெடுதலாவா நினைக்கப் போறார்? ஐ அக்ரி வித் ஹிம்.''

நான் எழுந்துவிட்டேன்.

டாக்டருக்குப் பிறகு இரண்டு வரன்கள் என் சம்பந்தம் இல்லாமலே தட்டிப் போயின. ஸ்ரியா பி. எஸ். சி. முடிவை நெருங்கிக் கொண்டிருந்தாள்.

கோபாலனுக்கு என் மேல் ஏகப்பட்ட ஆத்திரம் என்பது புரிந்தது. ஆனால், நான் என்ன செய்வது? என்னவோ ஸ்ரியாவைச் சாதாரணமான ஒருவனுக்குக் கொடுப்பதில் எனக்கும் பங்கு இருந்து, பின்னால் அவள் இன்னும் உயரிய நிலையில் இருந்து இருக்கலாமே என்ற எண்ணம் என் மனத்தை வாட்டுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ஸ்ரியா, பொறுத்துக்கொள்! கண்டிப்பாக உனக்குத் தகுந்த ஜோடி வந்து சேரத்தான் போகிறான்.

அப்படியே வரன் வந்தது. அப்படித்தான் எனக்குத் தோன்றியது.

வாசு எம். பி. ஏ.

என்ஜினிரிங் முடித்துவிட்டு, ஸ்டேட்ஸில் எம்.பி.ஏ. செய்து விட்டுப் பம்பாயில் ஏதோ கன்ஸல்டன்ஸியில் மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருக்கிறான். ஸ்ரியாவின் அம்மா வார்த்தைப்படி 'பிக்கல் பிடுங்கல்' கிடையாது!

வாசு பார்வைக்கும் கன கம்பீரமாக இருந்தான். நல்ல உயரம்! உலகத்தையே வெற்றி கொள்ளும் திறமை அவன் கண்களில் பளிச்சிட்டது.

எனக்கு அவனை ரொம்பப் பிடித்துப் போய்விட்டது. ஸ்ரியாவுக்கு ஏற்ற ஜோடி. பூமிக்கு வழி தவறி வந்துவிட்ட தேவதை என நான் எண்ணியிருந்த ஸ்ரியா

பூப்போல வைத்துக் கொள்ளப்படுவாள் வாக விஹல்.

பெண்ணைப் பார்த்ததும் அவர்கள் கிளம்பிப்போனார்கள். காரில் ஏற்றி விட்டு நான் வீட்டுக்குள் நுழைந்தேன்.

''சார், ஐ ஆம் வெரி ஹாப்பி. நான் இத்தனை நாள் தட்டிக் கழிச்சது எல்லாம் இவ்வளவு நல்ல இடத்துக்காகத்தான்!'' என்றேன்.

''சோ அம் ஐ!'' என்றார் கோபாலனின் அப்பா.

''ராகவன், நான்கூட அநாவசியமா உன் மேலே கோச்சுண்டேன். ஐ அம் சாரி... அண்ட் ஐ தேங்க் யூ! தேங்க் யூ வெரி மச்!''

''மாமி! நீங்க கல்யாணக் காரியங்களில் துணிச்சலா இறங்கலாம். அவர் கண்டிப்பா ஸ்ரியாவை வேணும்னு சொல்ல மாட்டார். என்ன ஸ்ரியா, என்ன யோசனை?''

ஸ்ரியா உதட்டைப் பிதுக்கினாள்.

''நாம்ப ஒரு சின்ன விளையாட்டு விளையாடலாமா?''

''விளையாட்டா?'' — நான் குழம்பினேன். திகைப்பு எல்லோரையும் அணைத்துக்கொண்டிருப்பது புரிந்தது.

''சும்மாத்தான். பயப்பட வேண்டாம். வழக்கமா வரவங்களை வேணும்னு சொல்வீங்க! அதே மாதிரி இப்பவும் சொல்வீங்க; அப்ப சண்டை போடலாம்னு நினைச்சேன்.''

''எனக்குத் தெரியுமே! சண்டை போடுவாயோன்னு பயந்துதான் நான் சரின்னேன்.''

''சே, சான்ஸ் போயிடுத்தே!''

''ஸ்ரியா, என்ன குழந்தை மாதிரி விளையாட்டு!'' — அவள் அம்மா முணுமுணுத்தாள்.

''ஓகே. இப்பத்தான் சண்டை போடேன்''

''அப்ப இவர் வேண்டாம்னு சொல்லுங்க.''

''என்ன அபசகுனம் மாதிரி....'' — அம்மா கோபத்துடன் நடந்து போனாள். அவள் அப்பாவும் வெளி நோக்கி நடந்தார்.

''ப்ளீஸ் ராகவ்...''

அவள் குறும்புத்தனமாக உதடுகளை மடித்துக்கொண்டு பேசினாள். எனக்கும் உற்சாகம் பிறந்தது.

''ஓகே! விளையாட்டுத்தான்! ஸ்ரியாவாக உனக்குத் தகுந்த ஜோடி இல்லை....''

அவள் முக பாவம் மாறியது.

''ராகவ், உங்க எண்ணம் எனக்குப் புரிஞ்சு போச்சு. இனிமே எனக்குக் கல்யாணம் நடக்கணும்னு ஒரே வழி....''

''ஆஹா, ஸ்ரியா, ஜோரா நடிக்கிறயே!''

அவள் சட்டென்று பேசினாள்.

''ஒரே வழி... நீங்களே என்னைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதான்.''

நான் அவளை நிமிர்ந்து பார்த்தேன். ஓ....ஸ்ரியா! உன்னை நான் ஏன் புரிந்து கொள்ளத் தவறி விட்டேன்!

சரியாக மூன்று மாதங்கள் கழித்து ஸ்ரியா என் பெயரைத் தன்பெயரின் பின்னால் சேர்த்துக் கொண்டாள்.

குறிஞ்சி மலர்

குறிஞ்சி மலர் 12 வருடத்துக்கு ஒருமுறை மலரும். நெஞ்சில் ஓர் ஆலயம் ஏறத்தாழ 20 வருடத்துக்குப் பின் குறிஞ்சி மலராய்ப் பூத்துள்ளது. சூப்பர் ஸ்டார் ரஜனி இருக்கும் தைரியத்தில் கன்னடப் படத்தைத் தமிழ்ப் படுத்தியிருக்கிறார்கள். மற்றபடி இக்கால நடிகர்களை வைத்து அந்தக் காலத்தில் எடுத்த மாதிரி உணர்வுதான் மிச்சம்.

பழைய காதலியின் புற்றுநோய்க் கணவனுக்கு ஆபரேஷன் செய்யும் இக்கட்டான டாக்டராக ரஜனி மட்டும் உழைத்திருக்கிறார். (பொருந்தாத டப்பிங் குரலால் உழைப்பு வீண்). கணவன், ஒருவேளை தான் இறந்தால் மனைவியை மறுமணம் செய்து கொள்ளும்படி டாக்டரிடம் கேட்க இறுதியில் ஆபரேஷன் சக்ஸஸ். டாக்டர் உயிரை விடுகிறார். நெ. ஓ. ஆலயம் மனத்தை ஆக்ரமித்துக் கொண்டிருப்பதால் குறிஞ்சி மலரின் மணம் மனத்தில் நுழைய மறுக்கிறது. தமிழ்ப்பட ரசிகர்களை மகிழ்விக்க மாலினியும் சுருளியும் பிரத்யேகச் சேர்க்கை. ஆனால் ரசிகர்கள் சிரிக்கிறார்கள். சிரிப்புக்கு அர்த்தம் வேறு. சுருளி வழக்கம்போல் கதைக்கு ஒட்டாத 'ஏ' காமெடி தருகிறார்.

ஒலிப்பதிவும், ஒளிப்பதிவும், இசையும் இன்ன பிற விஷயங்களும் சொல்லிக் கொள்ளும்படியாக ஒன்றுமில்லை.

டைரக்டர் சாரி கலர் பேனரினால் ஈயடிச்சான் காபி அடித்தும் குறிஞ்சி மலர் வாடித்தான் உள்ளது. இன்னொரு தடவை நெ. ஓ. ஆ. தேடிப் போய்ப் பார்த்தால் தான்மனசுக்கு இதமாக இருக்கும்.

—ரஜினி சாஸ்திரி





சட்டமன்றத்தில் புது முகங்கள்






ஜனநாயக முறையில் அமைந்த அரசு ஒன்றுதான் மனிதனின் மாண்பினை அடிப்படையாகக் கொண்டது. ஒரு சில மனிதர்களின் மாண்பினை மட்டுமல்ல; செல்வந்தர்களின், படித்தவர்களின், வெள்ளை நிறத்தவர்களின் மாண்பினை மட்டுமல்ல; அனைத்து மனிதர்களின் மாண்பினையும் அடிப்படையாகக் கொண்டது.

-ராபர்ட் மேநார்ட் ஹட்சின்ஸ்





1. ஆர். தவசி 2. அங்குசாமி 3. எம். அப்பாதுரை 4. அ. தங்கராசு 5. ம. குருசாமி 6. கே. கன்னன் 7. எஸ். கேசவ ஆதித்தன்

ஆர். தவசி (அ.இ.அ.தி.மு.க.) பரமக்குடி

சர்க்காரிடம் சிறந்த விவசாயி என்ற சிறப்புப் பட்டம் பெற்றவர். ஐ ஆர். 20ல் அதிக மகசூலைக் காண்பித்ததற்காகக் கிடைத்த விருது. இருமுறை பஞ்சாயத்துத் தலைவராக இருந்தவர்.

அங்குசாமி
(அ.இ.அ.தி.மு.க.) திருவாடானை

நாற்பது வயதான இந்த விவசாயிக்கு அரசியலில் இருபத்தி ஏழு வருட அனுபவம்.
சரித்திர நாவல் என்றால் மனிதருக்குக் கொள்ளை ஆசை. அடுத்தது கிரிக்கெட்.
சட்டமன்றத்தில் இவர் எழுப்பிய முதல் வினா: ''ஆட்டோ ரிக்ஷாவில் மூன்று பேர் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுமா?''

எம். அப்பாதுரை
(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) ஓட்டப்பிடாரம்

''ஏழை, எளிய, அடித்தளத்தில் உள்ள மக்களின் வாழ்வு மலர வேண்டும் என்ற உணர்வு என்னைக் கம்யூனிஸ்டாக உருவாக்கியது'' என்று கூறும் இவர் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஓய்வு நேரத்தை கபடி ஆடுவதிலும், கருத்துள்ள புத்தகங்களைப் படிப்பதிலும் செலவிடுகிறார்.

அ. தங்கராசு (அ.இ.அ.தி.மு.க.)
குறிஞ்சிப்பாடி

''தேர்தலில் என் முதல் வெற்றி மறக்க முடியாதது'' என்கிறார் இந்த அரசியல் அனுபவம் உள்ள விவசாயி. ''எதிர்க் கட்சியினருக்காகப் பணக்காரர்கள் பணத்தைத் தண்ணீராகச் செலவழிக்க, எனக்காக ஏழை எளிய மக்கள் உண்மையோடு உழைத்தனர்'' என்று பெருமைப்படுகிறார்.

ம. குருசாமி என்கிற அண்ணாதாசன்
(அ.இ.அ.தி.மு.க.) திருவெறும்பூர்

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சிற்றுண்டி விடுதியும் வைத்துள்ளார். அரசு அலுவலகத்தில் பணியாற்றிய இவர் அதிகாரிகளால் பழிவாங்கப்பட்டு வேலை இழந்தபோது அரசியலில் நுழைந்தார்.
படித்துக் கொண்டிருந்தபோதே கலைத் துறையில் இவருக்கு இருந்த ஈடுபாடு காரணமாய்த் தந்தை கோபமுற்று வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டார். தஞ்சையில் தியாகராஜ முதலியாரால் வளர்க்கப்பட்டார். ''முன்பு அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகச் சிறையில் தள்ளப்பட்டேன். இன்று அண்ணாவின் பாதையில் வந்த எனக்குப் பெரும் வெற்றி'' என்கிறார்.

கே. கன்னன் (இந்திரா காங்கிரஸ்)
உதகமண்டலம் தொகுதி

கன்னன் என்ற பெயருக்கும் இந்த மனிதருக்கும் கொஞ்சம் கூடப் பொருத்தமில்லை. ரொம்ப சாது. சமயோசித புத்தியுடையவர். சரளமாக ஆங்கிலத்தில் சக்கைப் போடு போடுகிறார். எம். ஏ. பட்டதாரி. குடும்பத் தொழில் விவசாயம்.

எஸ். கேசவ ஆதித்தன்
(அ.இ.அ.தி.மு.க.)
திருச்செந்தூர் தொகுதி

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலின் அறங்காவலராக இருப்பவர். இந்த நாற்பத்தி ஏழு வயதுக்காரரை இவரைத் தாத்தா என்று சொன்னால் தப்பில்லை. இந்த வயதிலேயே அந்தப் பெயரைச் சூட்டியவர்கள், இரண்டு பேரன்களும்; ஒரு பேத்தியும்.
விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவருக்குப் பிடித்தது நாடகம், இனிய சங்கீதம், நல்ல திரைப்படங்கள். அனைத்துக்கும் மேலாக முருக பக்தி.

பேட்டி: **சிக்கி**

11

அன்பே! உன்
கடைக்கண் பார்வைக்கேனும்
விளக்க உரை
எழுதலாம் என்றால் -
காலம் போதாது போலிருக்கிறதே!
[வெங்கடேச ரவி - ''இருட்டில் தொலைந்த வெளிச்சங்கள்'']


ராஜீவ் ஏற்கனவே திருமணம் ஆனவரா? அவன் மனம் குழம்பியது; குமுறியது.

''ராஜீவ்! நீங்கள் என்னை இப்படி ஏமாற்று வீர்கள் என்று நான் கனவிலும் எண்ண வில்லை! அப்படியானால், நான் உங்களுக்கு வெறும் விளையாட்டுப் பொருள்தானா? ஆத் மார்த்தமான காதல் என்று நான் நினைத்த தெல்லாம் என் கற்பனைதானா? உலகில் ஏமாந்துபோன பெண்கள் ஆயிரம் ஆயிரம். அவர்களில் நானும் ஒருத்தியா?''என்றுமனத் துக்குள் புலம்பினான். வெந்தாள்.

கொதித்து எழுந்த ஆவேசத்தைக் கட்டுப் படுத்திக்கொள்ள முயன்று, ''நீங்கள் கல்யாணம் ஆகாதவர்னுதானே எல்லா ருமே நினைக்கிறாங்க? நானும் அப்படித்தான் நம்பினேன். உங்களுக்கு ஏற்கனவே கல் யாணம் ஆகியிருக்கிற விஷயத்தை ஏன் முதல்லேயே என்கிட்டச் சொல்லல்லே?'' என்று வேதனை மிகுந்த குரலில் கேட்டாள்.

ராஜீவ் வேறு எங்கோ பார்த்தபடி, ''சொல்ல வேண்டிய அவசியம் இல்லேன்னு நான் நினைச்சதாலே'' என்று பதில் அளித் தான்.

உஷாவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந் தது. எவ்வளவு சாதாரணமாகச் சொல்லி விட்டான்! என்ன நெஞ்சழுத்தம் அவனுக்கு! சீறி எழுந்தாள்.



''சொல்ல வேண்டிய அவசியம் இல்லேன்னு நினைச்சீங்களா? அதுக்கு என்ன அர்த்தம்? உங்களுக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருக்கிறப்போ இங்கே எனக்கு என்ன வேலே?''

ராஜீவ் அவளைத் திரும்பிப் பார்த்தான். சோகத்துடன் அவன் உதடுகள் லேசாகத் துடித்தன.

திடீர் என்று ஒரு யோசனை தோன்றியது அவளுக்கு. ஒருவேளை அப்படியும் இருக்கலாமோ? அப்படித்தான் இருக்க வேண்டும்!

''உங்கமனைவிஇறந்துபோயிட்டாங்களா?'' என்று கேட்டாள். அதற்கு ''தெரியாது'' என்ற விநோதமான பதில் அவனிடமிருந்து வந்தது.

உஷாவுக்கு ஆத்திரமும் அழுகையும் எரிமலே வேகத்தோடு வெடித்துக் கொண்டு கிளம்பிற்று.

''போதும் உங்க விளையாட்டு! உங்களுக்குக் கல்யாணம் ஆகலேன்னு எல்லோரும் நினைக்கிறபோது கல்யாணம் ஆயிட்டதுங்கிறீங்க— மனைவி உயிரோட இருக்காங்களா செத்துட்டாங்களான்னு கேட்டா தெரியாதுங்கிறீங்க! உங்க விளையாட்டுக்கு நான்தானு அகப்பட்டேன்? உண்மையைச் சொல்லுங்க! எங்கே இருக்காங்க உங்க மனைவி?''

ராஜீவ் இன்னும் கொஞ்சம் விரிவாகப் புன்னகைத்தான். ''உண்மையாவே எனக்குத் தெரியாது டார்லிங்!'' என்றுன்.

இதற்கு மேல் உஷாவால் சகித்துக்கொள்ள முடியவில்லே. கோபமும், துக்கமும், ஏமாற்றமும் தொண்டையை அடைக்க, அழுதவாறே, ''நான் போறேன்!'' என்று வெளியேறத் திரும்பினுள்.

சடாரென்று ராஜீவ் சிறுத்தைப் புலியின் வேகத்துடன் பாய்ந்து அவளைத் தடுத்து நிறுத்தி, போக விடாமல் அவள் இரு தோள்களேயும் பற்றிக் கொண்டான்.

''உஷா! ஸாரி டார்லிங், என்னே மன்னிச்சுடு. ஐ வாஸ் ஒன்லி டீஸிங் யூ!''

அவள் சற்றே சமாதானமடைந்தாள்.

''அப்போ, இவ்வளவு நேரமும் சினிமா வசனம்தான் பேசினீங்களா?'' என்று சந்தேகம் முழுதும் தீராமல் கேட்டாள்.

''உஷா, இப்படி வந்து உட்காரு.''

அரை மனத்தோடு அவன் பக்கத்தில் படுக்கையின் மீது அமர்ந்தாள்.

அவனுடைய கைகளைத் தன் கைகளில் எடுத்துக் கொண்டு, ''ஐ'ம் ஸாரி மை லவ், நான் சொன்னது பொய்யில்லே. இருபது வருஷங்களுக்கு முன்னுலே எனக்குக் கல்யாணம் ஆனது உண்மை. ஆனு, இப்போ நான் கல்யாணம் ஆனவன் இல்லே.''

''மறுபடியும் என்னை குழப்புறீங்க?''

''ப்ளீஸ், டார்லிங்! நான் சொல்றதைக் கொஞ்சம் பொறுமையாக் கேளு. கல்யாணம் நடந்த ஒன்றரை வருஷத்துக்குள்ளே என் மனைவி என்னே விட்டுட்டுப் போயிட்டா, என்னே டைவோர்ஸ் பண்ணிட்டா. ஸோ, ஐ ஆம் ரியலி எ பேச்சலர். இப்போ புரியுதா?''

ஒரு கணம் உஷா பேசாமல் இருந்தாள். பின்பு கண்களை மூடிக் கொண்டு, ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள். ''அப்பாடா! இப்போதான் எனக்கு உயிரே திரும்பி வந்தது! எங்கே நீங்க....''

''உன்னே ஏமாத்திட்டேனோன்னு பயந்தியா?'' என்று ராஜீவ் குறுக்கிட்டான்.


ஆமாம் என்பது போல் உஷா மௌனமாகத் தலேயசைத்தாள். அவனுடைய முகத்தைத் தன் இரு கரங்களுக்கு நடுவே ஏந்திக்கொண்டு ராஜீவ் அவள் விழிகளுக்குள் ஆழமாகப் பார்த்தான்.

''உஷா, என்னே நம்பு. உன்னே ஒருபோதும் ஏமாத்த மாட்டேன். உன்னே ஏமாத்தினு, என்னே நானே ஏமாத்திக்கிட்ட மாதிரி. உனக்கு எந்த வகையிலேயும் துரோகம் செய்ய மாட்டேன். மனசாரக்கூட அப்படி நினைக்க மாட்டேன். நீ வேறு நான் வேறு? என் உயிருக்கு உயிரா, ரத்தத்தோட ரத்தமா என்னோட கலந்து போயிட்டே. உனக்கே தெரியாதா? டோன்ட் யூ நோ ஹவ் மச் ஐ லவ் யூ?''

கண்களில் கண்ணீர் ததும்ப, உஷா சட்டென்று அவன் கழுத்தைத் தன் கைகளால் வளேத்துக் கொண்டு அவன் மார்பில் தனது முகத்தைப் புதைத்துக் கொண்டாள். கண்களே இறுக்கி மூடிக்கொண்டு,

''ஐ நோ, ஐ நோ, மை டார்லிங்!'' என்ருள்.

''ராஜீவ், நான் உங்களே எந்த அளவு நேசிக்கிறேங்கறதை என்னுலே வார்த்தைகளாலே அளந்து சொல்ல முடியல்லே. அதனுலேதான், உங்க வாழ்க்கையிலே இன்னெருத்தி இருக்காள் என்ற எண்ணத்தையே என்னுலே சகித்துக் கொள்ள முடியல்லே. பதறிப்போயிட்டேன். ராஜீவ், என்ன



ஆனாலும் சரி, வேறு ஒரு பெண்ணோடு உங்களை என்னாலே பகிர்ந்து கொள்ள முடியாது. அது மட்டும் என்னாலே முடியவே முடியாது!'

அவள் தலை மீது ராஜீவ் முத்தமிட்டான். ''அந்த நிலை உனக்கு வரவே வராது. அப்படி ஒரு சூழ்நிலையை என்றைக்குமே ஏற்படுத்த மாட்டேன். நீ யார் கூடவும் என்னைப் பகிர்ந்துகொள்ள வேண்டிய அவசியமே இல்லை உஷா. எதிர்காலத்திலும் இருக்காது. ஐ பிராமிஸ் யூ. இனிமேல் நான் உனக்கே சொந்தம்.''

ஆணித்தரமாக, அழுத்தமாக, திடமாக அவன் கூறிய இந்த உறுதிமொழி, உஷாவின் நெஞ்சத்தில் வர்ணிக்க முடியாத பூரிப்பை உண்டாக்கியது. அவன் எண்ணத்தில் இருந்த உண்மை, அவன் குரலில் தெளிவாகத் தொனித்தது.

இளமைக்கே உரித்தான' மீளும் தன்மையோடு, சில நிமிஷங்களுக்கு முன்பாகத் தான் அனுபவித்த உணர்ச்சிக் கொந்தளிப்பிலிருந்து மீண்டு, உஷா சடாரென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

காதலனைப் பற்றிய எல்லா விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பெண்களுக்கே இயல்பான' ஆவலோடும் அக்கறையோடும், ''உங்க மனைவி எப்போ உங்களை விவாக ரத்துச் செய்தாங்க? ஏன் அப்படிச் செய்தாங்க?'' என்று கேட்டாள் உஷா.

ராஜீவ் எங்கோ தூரத்தில் எதையோ பார்த்தபடி விருப்பமில்லாமல் பதில் சொன்னான்:

''அதெல்லாம் ரொம்ப வருஷங்களுக்கு முன்னாலே நடந்தது உஷா. அப்போ நான் இன்னும் நடிகன் ஆகல்லே. நடிப்புத் துறைக்கு வரணுங்கிற எண்ணம்கூட அப்போ எனக்கு இருக்கலே. நான் சினிமா இண்டஸ்ட்ரீக்கு வருவதற்கு முன்னாலேயே கல்யாணம், விவாகரத்து — எல்லாமே முடிஞ்சு போச்சு. அதனாலேதான் நான் நடிகனாகப் பிரபலமடைஞ்ச பிறகு, எனக்கு முந்தி ஒரு கல்யாணம் ஆகியிருந்த விஷயமே யாருக்கும் தெரியல்லே. இதைப் பத்தி நானும் யார் கிட்டேயும் சொல்லலே. எந்தப் பத்திரிகை பேட்டியிலேயும் அதைப் பத்தி நான் பேசலே. எதுக்காக அதைப் பத்திப் பேசணும்? என்னைப் பொறுத்த வரைக்கும் அது என் லைஃப்லே ஒரு க்ளோஸ்ட் சேப்டர். அவளுக்கும் எனக்கும் கல்யாணம் நடந்து ஒன்னரை வருஷம் கூடப் பூர்த்தி ஆகியிருக்கவில்லே. அதுக்கு மேலே என்னோட சேர்ந்து வாழ அவள் விரும்பலே. என்னை விட்டுடறதுன்னு அவளே முடிவு பண்ணா. விட்டுட்டுப் போயிட்டா.''

''ஆனா ஏன்? என்ன நடந்தது? எதுக்காக விவாகரத்து வரைக்கும் போச்சு?'' விடாப்பிடியாக உஷா வற்புறுத்தி மீண்டும் கேட்டாள்.

வேறு யாராவது இப்படி அவனிடம் அடம் பிடித்து அவன் அந்தரங்க விஷயங்களை அறிவதற்குக் குடைந்து குடைந்து கேள்விகள் கேட்டிருந்தால் நடப்பதே வேறாக இருந்திருக்கும். அது உஷாவுக்குத் தெரியாது. ஆனால், ராஜீவைப் பொறுத்த வரையில் அவள் வேறு யாராகவோ இருக்கவில்லையே. அவன் உயிருக்கு உயிரான உஷா தானே இப்படிக் கேட்டாள்? அவளுக்கு இல்லாத உரிமையா?

அவன் கண்களில் மின்னலாய் வீசிய கோபத்தை உஷா கவனித்தாள். ஒரு விநாடி பயந்து போனாள். கோபம் மறைந்து அவன் சிரித்ததும், அவள் மனம் ஆறுதல் அடைந்தது.

அவன் உட்கார்ந்திருந்த நாற்காலிக்கு முன்னால் மண்டியிட்டு, அவன் முழங்கால்களுக்கு மேல் தன் கைகளை ஊன்றி பதித்து, அவனை உருக வைக்கும் வகையில் புன்னகைத்துக் கெஞ்சினாள்.


''ப்ளீஸ், ராஜீவ், சொல்லுங்க.''

அன்புடன் அவள் கன்னத்தைக் கிள்ளினான். ''அவசியம் தெரிஞ்சுக்கத்தான் வேணுமா?''

''ஆமாம்!''

''ஏன்?''

''பிகாஸ், யூ ஆர் ஸச் எ வொண்டர்ஃபுல் மேன். உங்களை மாதிரி ஒருவரைக் கணவரா அடைய எந்தப் பெண்ணுமே கொடுத்து வச்சிருக்கணும். அப்படிப்பட்ட உங்களைக் கணவரா அடைஞ்சும், உங்க மனைவி உங்களை விட்டுட்டுப் போயிட்டாங்கன்னா, ஐ திங்க் ஷீ மஸ்ட் பீ ஏ வெரி ஃபூலிஷ் வுமன். ஏன் அப்படி நடந்தது, அவங்க ஏன் அப்படி நடந்துக்கிட்டாங்கன்னு தெரிஞ்சுக்க ஆசைப்படறேன். நீங்களும் நானும் ஒண்ணுன்னு சொன்னீங்களே — அது உண்மையானா, நமக்குள்ளே எந்த ரகசியங்களும் இருக்கக்



கூடாது இல்லையா? என்கிட்டச் சொன்னு என்ன?''

ராஜீவ் விரக்தியோடு சிரித்தான்.

''சொல்லலேன்னு நீ விடப் போறதாத் தெரியலையே!''

''கரெக்ட்!''

''சரி. சொல்றேன் கேளு.''

எதிர்பார்ப்புடன் உஷா அவனையே உற்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள். ராஜீவ் வாயைத்திறந்து பேச ஆரம்பித்தான்.

''ஒரே ஒரு ஊரிலே, ஒரே ஒரு ராஜா இருந்தாராம். ஒரே ஒரு ராஜாவுக்கு ஒரே ஒரு ரா.....''

''ஓ ராஜீவ்! ஸ்டாப் இட்! யூ ஆர் இன் காரிஜிபிள்!'' என்று அழாத குறையாக உஷா அலுத்துக் கொண்டாள். ராஜீவால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. ''இல்லே... சின்னக் குழந்தை பாட்டி கிட்டே ஏதோ பெரிய கதை கேக்கப் போற மாதிரி உன் எக்ஸ்பிரஷனைப் பார்த்ததும், எனக்கு டெம்ப்டேஷன் தாங்கலே. அதான் இப்படி ஆரம்பிச்சேன்....'' என்று மீண்டும் சிரிக்க ஆரம்பித்தான்.

''ராஜீவ்! பி சீரியஸ்! ராஜா ராணி கதையையா கேட்டேன்? உங்க சொந்தக் கதையைச் சொல்லுங்கன்னு! சொல்லப் போறீங்களா இல்லையா?''



எந்த விருடியிலும்...
எந்த ரூபத்திலும்...

மனிதனுக்கு 'மரணம்' என்பது எந்த விருடியிலும் ரூபத்திலும் வரலாம் என்பதற்கு அத்தாட்சியாகப் பரிதாபமான சம்பவம் ஒன்று ஆந்திர மாநிலம் கடப்பையில் நடந்துள்ளது.

14-வயது இளைஞன் ஜானிபாஷா பாட்டுப் பாடியவாறு சைக்கிளில் சென்று கொண்டிருந்தான். அதே சமயம் அவனுக்கு மேலே பருந்து ஒன்று கட்டவிழ்ந்து பறந்தது. அதன் அலகில் சிக்கிய பாம்பு பிடி நழுவி கொண்டிருக்கிறது...

கழுகு சற்றே அசந்து பாம்பை நழுவ விட அது வந்து விழுந்த இடம், சைக்கிளில் சென்ற இளைஞன் கழுத்து! கழுத்தைச் சுற்றி அதிர்ச்சியில் இருவன் கழுத்தைச் சுற்றி வளைத்துக் கொத்தியது. இளைஞன் உயிர் துறந்தான்.

-இந்தியன் எக்ஸ்பிரஸ்
-கழுதி இராஜ்யமணி



:ராஜீவ்! ஒரே ஒரு கேள்வி கேக்கறேன். அதுக்கு மட்டும் தயவு செய்து பதில் சொல்லுங்க.''

''என்னம்மா?''

''ராஜீவ்....உங்கமனைவி... டிட் யூ லவ் ஹர் வெரி மச்? அவங்களை ரொம்ப ஆழமாக் காதலிச்சீங்களா? அவங்க உங்களை விட்டுட்டுப் போயிட்டாங்களேங்கற துயரம் தாங் காமதான் நீங்க மறுபடியும் கல்யாணமே வேண்டாங்கிற முடிவுக்கு வந்தீங்களா?'' என்று உஷா கேட்டாள்.

''நோ, நோ! மை காட்! உனக்கு எப்படி இந்த ஐடியா வந்தது?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் அவன்.

''பின்னே ஏன் அதுக்கு அப்புறம் கல்யாணமே வேண்டாம்னு இருந்துட்டீங்க? தட் மீன்ஸ் யூ மஸ்ட் ஹேவ் லவ்ட் ஹர் வெரி மட்ச்லி.''

ராஜீவ் சிரித்தான். பரிகாசமாக. ஆனால், அந்தப் பரிகாசம் உஷாவின் மீது அல்ல — அவன் மனைவியை நினைக்கையில்அந்தப்பரிகாசம் தோன்றியது. ''இல்லே டார்லிங். அவளை நான் காதலிக்கவே இல்லே. அது எங்க அப்பா அம்மா பார்த்து நிச்சயம் பண்ணினகல்யாணம்.''

''உங்க அப்பா அம்மா எங்கே இருக்காங்க?''

''ரெண்டு பேருமே இறந்து போயிட்டாங்க.''

''ஓ!''

சட்டென்று சிரிப்பு அடங்கி ராஜீவுடைய முகம் மாறியது. ''நெஞ்சுலே என்னிக்கோ ஏற்பட்ட ஆழமான காயம். அது ஆற ரொம்ப நாளாச்சு. ஆறிப்போன தழும்பை அனாவசியமாக் கிறிப் புதுசாப் புண்ணை ஏற்படுத்த வேண்டாமேன்னு பார்க்கிறேன் — அவ்வளவுதான்'' என்றான்.

அந்த வார்த்தைகளின் அடியில் உட்பிரவாகமாக ஓடிய சோகத்தை உஷா சட்டென்று கிரஹித்துக் கொண்டாள்.

''ராஜீவ், பழைய நினைவுகளைக் கிளறி நான் உங்களை வேதனைப்படுத்திட்டேன்னு நினைக்கிறேன். என்னை மன்னிச்சுடுங்க. ஐ'ம் ஸாரி. நீங்க சொல்ல விரும்பாத விஷயங்களைச் சொல்லும்படி கட்டாயப் படுத்த எனக்கு என்ன உரிமை இருக்கு?'' என்றாள்.

ராஜீவ் அன்பாக அவள் தலையை வருடிவிட்டான். ''அப்படிச் சொல்லாதே டார்லிங். உனக்கு என்கிட்டே இல்லாத உரிமைன்னு எதுவும் கிடையாது.''

உஷா தீர்க்கமாக அவனையே பார்த்தாள்.

''என்ன உஷா அப்படிப் பார்க்கறே?''

சிறிது நேரம் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பவள் போல் உஷா மௌனமாகத் தரையைப் பார்த்தபடி இருந்தாள். ராஜீவ் அவள் சஞ்சலம் மிகுந்த தோற்றத்தைக் கவனித்தான். ஒரு தீர்மானத்துக்கு வந்தான். ''உஷா, நான் எல்லாத்தையும் விவரமாச் சொல்றேன். சொல்றதே தேவலேன்னு இப்போ எனக்குத் தோணுது. இல்லேன்னு, நீ அந்த அழகான தலைக்குள்ளே மூளையைப் போட்டுக் குழப்பிக்கிட்டு என்னென்ன கற்பனை பண்ணிக்குவியோ! நான் ஃபிராங்கா எல்லாத்தையும் சொல்றேன். என்னை நீ சரியாப் புரிஞ்சுக்கணும். அவ்வளவுதான்.''

தலையை நிமிர்த்தி நேராக அவன் கண்களுக்குள் விழித்தாள். ''நீங்க என்ன சொன்னாலும் உங்களைத் தவறா நினைக்கவே மாட்டேன் ராஜீவ்.''

அந்த வார்த்தைகள் ஏதோ தைரியமூட்டும் தூண்டுதலாக அமைந்தது போல், ராஜீவ் தனது கதையைச் சொல்ல ஆரம்பித்தான். அவன் பிறந்தது அருப்புக்கோட்டை கிராமத்தில், மதுரை அருகே. அவன் பெற்

றோர்கள் ஓரளவு வசதி உள்ளவர்கள். ராஜீவுக்கு ஓர் அண்ணனும் இருந்தார். இரண்டு பிள்ளைகளையும் நன்றாகப் படிக்க வைக்க வேண்டுமென்று ராஜீவுடைய பெற்றோர்களுக்கு ஆசை. இரு பிள்ளைகளும் சென்னையில் படித்தார்கள்.

அண்ணன் மேல் படிப்புக்காக அமெரிக்கா சென்று, அங்கேயே நல்ல உத்தியோகம் பார்த்துக் கொண்டு, ஓர் அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு அங்கேயே தங்கிவிட்டார். அவர் தாய்நாடு திரும்பவே இல்லை. திரும்பும் உத்தேசமும் கிடையாதென்று திட்டவட்டமாகக் கடைசியாக ஒரு கடிதத்தின் வாயிலாகத் தெரிவித்துவிட்டு, அத்தோடு தன் குடும்பத்தாரோடு எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ள விரும்பாதவராக ஒரே அடியாக உறவைத் துண்டித்துக் கொண்டார். அமெரிக்காவில் தனது விலாசத்தைக் கூடக் கடிதத்தில் குறிப்பிடவில்லை.

இதனால் பெற்றோர்கள் மனம் உடைந்து போனார்கள். தம் ஆசைகளையெல்லாம் இரண்டாவது மகனை ராஜீவ் மீதே பின்னிக் கொண்டார்கள். ''எங்களைப் பொறுத்த வரைக்கும் அவன் செத்துப்போயிட்டான். எங்களுக்கு இனிமே ஒரே மகன்தான் இருக்கான்னு நினைச்சுக்கிறோம். நீயும் எங்களை அழவைச்சு ஏமாத்திட்டுப் போயிடாதேப்பா!'' என்று பெற்றோர் கண்ணீர் மல்க ராஜீவிடம் கெஞ்சினார்கள்.

அண்ணனின் போக்கும் நடத்தையும் ராஜீவுக்கு மிகுந்த வேதனையை உண்டாக்கிவிட்டது. ''அண்ணன்தான் இப்படிப் பெற்ற தாய் தந்தையை மறந்து, ரத்த சம்பந்தத்தைக்கூடத் தூக்கி எறிந்து போய் விட்டார். நானாவது அப்பா, அம்மாவுக்கு நல்ல பிள்ளையாக இருந்து, அவர்கள் மனத்தை நோக வைக்காமல் இந்த வேதனையிலிருந்து அவர்கள் மீளும் படி நடந்து கொள்ள வேண்டும். முதல் பிள்ளையை இழந்த அவர்களுக்கு, இரண்டாவது பிள்ளையாகிய நான் அந்த நஷ்டத்துக்கு இரட்டை மடங்கு ஈடு செய்ய வேண்டும்'' என்று தனக்குத்தானே மனத்துக்குள் சபதம் செய்து கொண்டான்.


சென்னையில் ஒரு பெரிய கம்பெனியில் ஜூனியர் ஸேல்ஸ் எக்ஸிக்யூடிவ் பதவியை ராஜீவ் அடைந்து, நன்றாகச் சம்பாதிக்கத் தொடங்கினான். லீவ் கிடைக்கும் போதெல்லாம் கிராமத்துக்குச் சென்று தாய் தந்தையருடன் சில நாட்களைக் கழிப்பான். அவர்களும் சில சமயம் மெட்ராஸுக்கு வந்து அவனுடன் சில நாட்கள் தங்குவார்கள்.

ராஜீவுக்கு ஜூனியர் எக்ஸிக்யூடிவ் வேலை ஊர்ஜிதம் ஆனதும், அவனுடைய பெற்றோர்கள் அவனுடைய திருமணத்தைப் பற்றித் தீவிரமாகப் பேச ஆரம்பித்தார்கள்.

அதே அருப்புக்கோட்டைக் கிராமத்தில் ஒரு மிராசுதார் இருந்தார். அவருக்கு ஒரே மகள் கமலா. பார்ப்பதற்கு அழகாகவே இருப்பாள். அவளையே ராஜீவுக்கு மணம் முடித்து வைக்க விரும்பினார்கள். கிராமத்துக்குப் பெற்றோரைப் பார்க்கப் போனபோது பலமுறை ராஜீவ் அவளைப் பார்த்திருந்தான். அவளுடன் பேசியிருக்கவில்லை. ஆனால் பல சந்தர்ப்பங்களில் அவளைக் கண்டிருந்தான். கமலாவுடைய தந்தை மிராசுதாரும் இந்தச் சம்பந்தத்தை விரும்பி வரவேற்றார்.

பெற்றோர் விருப்பத்துக்குத் தடை சொல்ல ராஜீவ் விரும்பவில்லை. பெண்ணும் நன்றாக இருந்தாள். திருமணத்துக்கு அவனும் சம்மதம் தெரிவித்தான்.

ராஜீவுக்கும் கமலாவுக்கும் திருமணம் கிராமத்திலேயே நடந்தது. திருமணத்துக்குப் பிறகு கமலாவின் தந்தை ராஜீவுடன் தனியாகப் பேச வேண்டும் என்றார். அவனை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்று, மனம் விட்டுப் பேசினார். (தொடரும்)



பெட்ரோல் குடிக்காத விமானம்


சூரியக்கிரணங்கள் தரும் சக்தியினால் பறக்கும் முதல் விமானம். ''பென்குவின்'' என்று பெயர் பெற்றுள்ள இந்த விமானத்தை அமெரிக்கா, கலிபோர்னியா மாநிலத்தில் வெற்றிகரமாக வெள்ளோட்டம் விட்டனர். தயாரித்தவர் பால் மக்கிரேடி.

''நமது அறிவு வளர, வளர நம்மிடம் எவ்வளவு அறியாமை உள்ளது என்பதும் தெரிகிறது!''
— ஜான் கென்னடி

''இருட்டைப்பற்றி முணுமுணுப்பதை விட, விளக்கை ஏற்றுவது சிறந்தது!''
— யாரோ

''சந்தோஷம் என்பது தொற்று நோய். அதைக் கொடுப்பதன் மூலம் திரும்ப வரும்!''
— யாரோ

— சம்பத் குமாரி



சில பாக்கியசாலிகள் தியாகம் செய்யாமலேயே பெயர் வாங்கிவிடுகிறார்கள். சில துர்பாக்கியசாலிகள் கடுமையான தியாகத்துக்கும் விளம்பரமில்லாமல் மறைந்து விடுகிறார்கள். அவர்களை மன்னர்களும் மறக்கிறார்கள்; கவிஞர்களும் மறக்கிறார்கள்; உறவினர்களும் மறக்கிறார்கள்.

இராமகாதை முழுவதிலும் யார் யாருடைய பெருமைகளோ பேசப்படுகின்றன. கணவனோடு காட்டுக்குச் சென்ற சீதாவைப் பற்றிக் கம்பன் உருகுகிறான்; கம்பனைப் படித்த ரசிகன் உருகுகிறான்; கம்பனது சிருஷ்டியில் ராமனும் உருகுகிறான்.

ஆனால் பதினான்கு ஆண்டுகள் கணவனைப் பிரிந்து கைம்பெண் போலவே வாழ்ந்த இலக்குவன் மனைவி ஊர்மிளாவுக்காக யார் கண்ணீர் வடித்தார்கள்? கம்பனுக்கும் கூட கருணை இல்லாமற் போயிற்றே!

கணவனோடு காட்டுக்குச் செல்வது மட்டும் தியாகமல்ல. கணவனைப் பிரிந்து நோன்பு ஏற்பதே அதைவிடப் பெரிய தியாகமாகும்!

கொஞ்ச காலமாவது ஆரண்யத்தில் சீதா வாழ்ந்திருந்து கணவனுடைய காதலைப் பெற்றிருந்தாள். ஊர்மிளாவுக்கு அதுவுமில்லையே!

சீதா அசோகவனத்திலிருந்தது பெரிதாகப் பேசப்படுகிறதே, ஊர்மிளா அயோத்தியில் கணவனைப் பிரிந்திருந்து பட்ட அவதியை யார் எண்ணுகிறார்கள்?

உலகம் இதுதான்!

காதலிப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாய் வாங்கும் நடிகனுக்குத் தரப்படுகிற விளம்பரம், காதலையே கருவறுத்துவிட்ட தியாகிகளுக்கு இல்லையே!

தன்னை வருத்திக் கொள்ளும் உத்தமர்கள் பூமாதேவியைப் போல் வதைபட்டு மாண்டு போகிறார்கள்.

ஊர்மிளா ஒரு தேவமகள். மாமியார் சுமித்திரையைவிடப் பவித்திரமானவள். சொல்லப்போனால் சீதாவை விடவும் ஊர்மிளா உயர்ந்தவள்.

காட்டுக்குப் போகிறான் கணவன் என்றதும் 'நானும் வருகிறேன்' என்று அடம்பிடித்து சீதா சென்றுவிட்டாள். வாயைக் கூடத் திறக்காமல் ஒரு மூலையில் நின்றுவிட்டாளே ஊர்மிளா.

'பிரிவினும் கடுமோ பெருங்காடு' என்று அவளொன்றும் தத்துவம் பேசவில்லையே!

சீதையின் உணர்வுகள் ஊர்மிளாவுக்கு இல்லை என்று அர்த்தமா? அவள் கணவனை நேசிக்கவில்லை என்று பொருளா?

ஊர்மிளா லட்சிய மனைவி. அவள் பாடியது ஒருதலை ராகம். கணவன் என்ன சொல்லுகிறானோ, அதுவே நியாயம்! அங்கே கேள்விக்கே இடம் இல்லை.

எண்ணிப் பார்த்தால் பெருமைக் கணக்கில் ஊர்மிளாவுக்கே முதலிடம்; சீதாவுக்கு இரண்டாவது இடம்தான்.

இன்னொரு துர்ப்பாக்கியசாலி சிலப்பதிகாரத்து மாதவி.

கண்ணகி கற்போடு வாழ்ந்தது மரபு; அது குல ஒழுக்கம்; குடிப் பழக்கம்.

மாதவிக்கு என்ன தேவை?

ஆயினும் அவள் வாழ்ந்தாள்.

தனது மகள் மணிமேகலையைத் தன் மகளல்ல என்றும், 'மாபெரும் பத்தினி மகள்' என்றும் வாழ்த்தினாள். 'கற்புடையோர் மறைவது போல் நான் மறையவில்லையே' என்று கலங்கினாள். தன் மகளையும் துறவியாக்கினாள்.

பேசப்பட வேண்டியது கண்ணகியா, மாதவியா?

கண்ணகி கடைப்பிடித்தது, ஒரு நீதிபதி கடைப்பிடிக்கும் சட்ட நெறிகளே!

மாதவி அநுசரித்தது குற்றத்தில் பிறந்து, நியாயத்தில் வளர்ந்த சந்திரோதயம்.

எவ்வகையாலும் களங்கமில்லாதவள் மாதவி. அவளுக்குத் தரப்பட வேண்டிய நியாயமான இடம் தரப்படவில்லையே!

கண்ணகிக்குக் கடற்கரையில் சிலை என்றால், மாதவிக்கு நதிக்கரையிலாவது வேண்டாமா?

வேண்டாம். உயர்ந்த மனிதர்களுக்கு இந்த விளம்பரங்கள் தேவையில்லை!

மேகங்கள் வைரங்களைச் சிந்துவதில்லை; ஆனால் அவை இல்லை என்றால் நீங்களுமில்லை; நானுமில்லை.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran



ஒருவர் மற்றவருடைய அனுபவத்திலிருந்து பயனடைவதே விவேகமான செயலாகும். இவ்விருவரும் சேமித்திட முடிவு செய்துள்ளனர். எனவே இவர் தம் குடும்பம் நல்வாழ்வு பெறுவது திண்ணம். பாங்க் ஆஃப் பரோடாவில் சேமிப்பு கணக்கு வைத்துள்ள இலட்சக்கணக்கான இல்லத்தரசிகளே இந்த விவேகத்தின் சான்றாக உள்ளனர். இயன்ற போதெல்லாம், இயன்ற அளவு இவர்கள் சேமித்துக் கொண்டிருப்பதன் மூலம், தங்கள் குடும்பம் செழிப்புடன் விளங்கச் செய்வதில் வெற்றி கண்டுள்ளனர்.

பாங்க் ஆஃப் பரோடாவில், சேமிப்பு கணக்கு மட்டுமன்றி இன்னும் நல்ல பல திட்டங்கள் உண்டு. நீங்கள் நல்ல முறையில் சேமித்திட அவைகள் உதவுகின்றன.

நீங்களும் சேமிக்கத் தொடங்குங்கள்—நீங்களும் உங்கள் குடும்பமும் நல்வாழ்வு நோக்கி நடைபோடவே.

கீழ்க்கண்ட திட்டங்களில் உகந்ததைத் தேர்ந்தெடுங்கள்:

1. மந்த்லி இன்கம் பிளான்
2. ஃபிக்ஸட் டெபாஸிட் பிளான்
3. ரெகுலர் இன்கம் பிளான்
4. ரெக்கரிங் டெபாஸிட் ஸ்கீம்
5. ரெகுலர் இன்கம்-கம்-ரெக்கரிங் டெபாஸிட் பிளான்
6. ஃபெஸ்டிவல் டெபாஸிட் பிளான்

முழுமையான பாங்கிங் வசதிகளையும் சேவைகளையும் பெற, பாங்க் ஆஃப் பரோடா உங்களை முகமன் கூறி வரவேற்கிறது.

சேமிப்பது ஒரு நல்ல பழக்கம்

பாங்க் ஆஃப் பரோடா

(இந்திய அரசுக்குச் சொந்தமானது)

ULKA-BOB-2/80 TAM

REGISTERED No. M. 4382
Registered as a Newspaper in Sri Lanka